366

T.D.R.C.

DIGITIZED

3:38.211SK
N09
119355

SOUTH ARCOT
MADRAS
156
499/14

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருச்சாய்க்காடென்னும்

# சாயாவனபுராணம்.

திருக்கயிலாயபரம்பரைத்
தருமபுரவாதீனவித்துவானும்
கார்காத்தவேளாண் மரபினருமாகிய
கவிராஜநாயகம்பிள்ளையவர்கள்
இயற்றியது.

இஃது
பெருந்தோட்டம்
தெ. சி. துரைசாமிப்பிள்ளையால்
பரிசோதித்து

சிதம்பரம்
சண்முகசுந்தரவிலாச அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1909ஸ் ஜூலைமீ 8௨

## சிறப்புப்பாயிரம்.

### சிதம்பரம்

சிவகதாப்பிரசங்கரத்நாகரம்

சி. அய்யாக்கண்ணு ஓதுவாமூர்த்தியவர்கள் இயற்றியது.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

உணர்த்தமதாளடியவர்க் கருண்முக்கட்பெருமானுறையுஞ்சாய

வணத்தருமான்மியமதனைக்கவிராசநாயகப்பேர்வள்ளல்செந்தே [கோ

னெனத்திகழ்தீந்தமிழ்ப்பாவாலியற்றினன்முன்னதனையச்சிலியற்றியிக் [க

மனத்தெழுஞ்சீர்ப்பெருந்தோட்டத்துரைதுரைசாமிப்புலவன்வழங்கினனே

### சிதம்பரம்

சைவப்பிரகாசவித்தியாசாலைத் தலைமை யுபாத்தியாயர்

ம. க. வேற்பிள்ளையவர்கள் குமாரர்

மகாலிங்கக்கவிராசரவர்களியற்றியது.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

திருந்தருளம்பரமருமையுடனுறை சாயாவனப்பேர்திகழுந்தெய்வப்

பெருந்தலமான்மியமதனைக்கவிராசநாயகப் பேர்ப்பெருமானுய்வைத் [த

தருந்தமிழினமிழ்தமெனச் சாற்றினனற்பெருந்தோட்டத்தலன்சார்ந்

குருந்துரைசாமியச்சிற்பதித்தெவரு மெளிதுணரக்கொடுத்திட்டானே.

உ

## திருச்சாய்க்காடு

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் தேவாரம்.

பண்—இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

நித்தலுந்நியமஞ்செய்துநீர்மலர்தூவிச்
சித்தமொன்றவல்லார்க்கருளுஞ்சிவன்கோயின்
மத்தயானையின்கோடும்வண்பீலியும்வாரித்
தத்துநீர்ப்பொன்னிசாகரமேவுசாய்க்காடே. (௧)

பண்டலைக்கொண்டுபூதங்கள்பாடநின்றாடும்
வெண்டலைக்கருங்காடுறைவேதியன்கோயில்
கொண்டலைத்திகழ்பேரிமுழங்கக்குலாவித்
தண்டலைத்தடமாமயிலாடுசாய்க்காடே. (௨)

நாறுகூவிளநாகிளவெண்மதியத்தோ
டாறுஞ்சூடுமமரர்பிரானுறைகோயி
லூறுதேங்கனிமாங்கனியோங்கியசோலைத்
தாறுதண்கதலிப்புதன்மேவுசாய்க்காடே. (௩)

வரங்கள்வண்புகழ்மன்னியவெந்தைமருவார்
புரங்கண்மூன்றும்பொடிபடவெய்தவன்கோயி
லிரங்கலோசையுமீட்டியசாத்தொடுபீலி
தரங்கநீள்கழித்தண்கரைவைகுசாய்க்காடே. (௪)

ஏழைமார்கடைதோறுமிடுபலிக்கென்று
கூழைவாளரவாட்டும்பிரானுறைகோயின்
மாழையொண்கண்வளைக்கைநுளைச்சியர்வண்பூந்
தாழைவெண்மடற்கொய்துகொண்டாடுசாய்க்காடே. (௫)

துங்கவானவர்சூழ்கடறாங்கடையப்போ
தங்கொள்நீழலளித்தவெம்மானுறைகோயில்
வங்கமங்கொளிரிப்பியுமுத்துமணியுஞ்
சங்கும்வாரித்தடங்கடலுந்துசாய்க்காடே. (௬)

வேதநாவினர்வெண்பளிங்கின்குழைக்காத
ரோதநஞ்சணிகண்டருகந்துறைகோயின்
மாதர்வண்டுதன்காதல்வண்டாடியபுன்னைத்
தாதுகண்டுபொழின்மறைந்தூடுசாய்க்காடே. (௭)

இருக்குநீள்வரைபற்றியடர்த்தன்றெடுத்த
வரக்கனாகநெரித்தருள்செய்தவன்கோயின்
மருக்குலாவியமல்லிகைசண்பகம்வண்பூந்
தருக்குலாவியதண்பொழினீடுசாய்க்காடே. (௮)

மாலினோடயன்காண்டற்கரியவர்வாய்ந்த
வேலையார்விடமுண்டவர்மேவியகோயில்
சேலினேர்விழியார்மயிலாலச்செருந்தி
காலையேகனகம்மலர்கின்றசாய்க்காடே. (௯)

ஊத்தைவாய்ச்சமண்கையர்கள்சாக்கியர்க்கென்று
மாத்தமாகவறிவரிதாயவன்கோயில்
வாய்த்தமாளிகைசூழ்தருவண்புகார்மாடே
பூத்தவாவிகள்சூழ்ந்துபொலிந்தசாய்க்காடே. (௧௦)

ஏனையோர்புகழ்ந்தேத்தியவெந்தைசாய்க்காட்டை
ஞானசம்பந்தன்காழியர்கோன்சொல்பத்து
மூனமின்றியுரைசெயவல்லவர்தாம்போய்
வானநாடினிதாள்வரிம்மாநிலத்தோரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

பண்—ஸீகாமரம்.

திருச்சிற்றம்பலம்.

மண்புகார்வான்புகுவர்மனமிளையார்பசியாலுங்
கண்புகார்பிணியறியார்கற்றாருங்கேட்டாரும்
விண்புகாரெனவேண்டாவெண்மாடநெடுவீதித்
தண்புகார்ச்சாய்க்காட்டெந்தலைவன்றாள்சார்ந்தாரே. (௧)

போய்க்காடேமறைந்துறைதல்புரிந்தானும்பூம்புகார்ச்
சாய்க்காடேபதியாகவுடையானும்விடையானும்
வாய்க்காடுமுதுமரமேயிடமாகவந்தடைந்த
பேய்க்காடல்புரிந்தானும்பெரியோர்கள்பெருமானே. (௨)

நீநாளுநன்னெஞ்சேநினைகண்டாயாரறிவார்
சாநாளும்வாழ்நாளுஞ்சாய்க்காட்டெம்பெருமாற்கே
பூநாளுந்தலைசுமப்பப்புகழ்நாமஞ்செவிகேட்ப
நாநாளுநவின்றேத்தப்பெறலாமேநல்வினையே. (௩)

கட்டலர்த்தமலர்தூவிக்கைதொழுமின்பொன்னியன்ற
தட்டலர்த்தபூஞ்செருந்திகோங்கமருந்தாழ்பொழில்வாய்
மொட்டலர்த்ததடந்தாழைமுருகுயிர்க்குங்காவிரிப்பூம்
பட்டினத்துச்சாய்க்காட்டெம்பரமேட்டிபாதமே. (௪)



கோங்கன்னகுவிமுலையாள்கொழும்பணைத்தோட்கொடியிடையைப்
பாங்கென்னவைத்துகந்தான்படர்சடைமேற்பான்மதியந்
தாங்கினான்பூம்புகார்ச்சாய்க்காட்டான்றாணிழற்கீ
ழோங்கினாரோங்கினாரெனவுரைக்குமுலகமே. (௫)

சாந்தாகநீறணிந்தான்சாய்க்காட்டான்காமனைமுன்
றீந்தாகமெரிகொளுவச்செற்றுகந்தான்றிருமுடிமே
லேய்ந்தாரமதிகுடியொளிதிகழுமலைமகடோ
டோய்ந்தாகம்பாகமாவுடையானும்விடையானே. (௬)

மங்குறோய்மணிமாடமதிதவழுநெடுவீதிச்
சங்கெலாங்கரைபொருதுதிரைபுலம்புஞ்சாய்க்காட்டான்
கொங்குலாவரிவண்டிசைபாடுமலர்க்கொன்றைத்
தொங்கலானடியார்க்குச்சுவர்க்கங்கள்பொருளலவே. (௭)

தொடலரியதொருகணையாற்புரமூன்றுமெரியுண்ணப்
படவரவத்தெழிலாரம்பூண்டான்பண்டரக்கனையுந்
தடவரையாற்றடவரைத்தோளூன்றினான்சாய்க்காட்டை
யிடவகையாவடைவோமென்றெண்ணுவார்க்கிடரிலையே. (௮)

வையநீரேற்றானுமலருறையுநான்முகனு
மையன்மாரிருவர்க்குமளப்பரிதாலவன்பெருமை
தையலார்பாட்டோவாச்சாய்க்காட்டெம்பெருமானைத்
தெய்வமாப்பேணாதார்தெளிவுடைமைதேறோமே. (௯)

குறங்காட்டுநால்விரற்கோவணத்துக்கோலோவிப்போ
யறங்காட்டுஞ்சமணருஞ்சாக்கியருமலர்தூற்றுந்
திறங்காட்டல்கேளாதேதெளிவுடையீர்சென்றடைமின்
புறங்காட்டிலாடலான்பூம்புகார்ச்சாய்க்காடே. (௧௦)

நொம்பைந்துபுடைத்தொல்குருபுரஞ்சேர்மெல்லடியா
ரம்பந்தும்வரிக்கழலுமரவஞ்செய்பூங்காழிச்
சம்பந்தன்றமிழ்பகர்ந்தசாய்க்காட்டுப்பத்திவையு
மெம்பந்தமெனக்கருதியேத்துவார்க்கிடர்கெடுமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## திருநாவுக்கரசுநாயனார்—திருநேரிசை. பண்—கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

தோடுலாமலர்கடூவித்தொழுதெழுமார்க்கண்டேயன்
வீடுநாளணுகிற்றென்றுமெய்கொள்வான்வந்தகாலன்
பாடுதான்செல்லவஞ்சிப்பாதமேசரணமென்னச்
சாடினார்காலன்மாளச்சாய்க்காடுமேவினாரே. (௧)

படங்கொளுமலைமத்தாகவானவரசுரரோடு
கடைந்திடவெழுந்தநஞ்சங்கண்டுபல்தேவரஞ்சி
யடைந்துதஞ்சரணமென்னவருள்பெரிதுடையராகித்
தடங்கடனஞ்சமுண்டார்சாய்க்காடுமேவினாரே. (௨)

அரணிலாவெளியநாவலருநிழலாகவீசன்
வரணியலாகித்தன்வாய்நூலினாற்பந்தர்செய்ய
முரணிலாச்சிலந்திதன்னைமுடியுடைமன்னனாக்கித்
தரணிதானாளவைத்தார்சாய்க்காடுமேவினாரே. (௩)

அரும்பெருஞ்சிலைக்கைவேடனாய்விறற்பார்த்தனுக்கு
வுரம்பெரிதுடைமைகாட்டியொள்ளமர்செய்துமீண்டே
வரம்பெரிதுடையனாக்கிவாளமர்முகத்தின்மன்னு
சரம்பொலிதூணியீந்தார்சாய்க்காடுமேவினாரே. (௪)

இந்திரன்பிரமனங்கியெண்வகைவசுக்களோடு
மந்திரமறையதோதிவானவர்வணங்கிவாழ்த்தத்
தந்திரமறியாத்தக்கன்வேள்வியைத்தகர்த்தஞான்று
சந்திரற்கருள்செய்தாருஞ்சாய்க்காடுமேவினாரே. (௫)

ஆமலிபாலுநெய்யுமாட்டியர்ச்சனைகள்செய்து
பூமலிகொன்றைசூட்டப்பொறாததன்றாதைதாளைக்
கூர்மழுவொன்றாலோச்சக்குளிர்சடைக்கொன்றைமாலைத்
தாமநற்சண்டிக்கீந்தார்சாய்க்காடுமேவினாரே. (௬)

மையறுமனத்தனாயபகீரதன்வரங்கள்வேண்ட
ஐயமிலமரரேத்தவாயிரமுகமதாகி
வையகநெளியப்பாய்வான்வந்திழிகங்கையென்னுந்
தையலைச்சடையிலேற்றார்சாய்க்காடுமேவினாரே. (௭)

குவப்பெருந்தடக்கைவேடன்கொடுஞ்சிலையிறைச்சிப்பாரந்
துவர்ப்பெருஞ்செருப்பானீக்கித்தூயவாய்க்கலசமாட்ட
வுவப்பெருங்குருதிசோரவொருகணையிடந்தங்கப்பத்
தவப்பெருந்தேவுசெய்தார்சாய்க்காடுமேவினாரே. (௮)

நக்குலாமலர்பன்னூறுகொண்டுநன்ஞானத்தோடு
மிக்கபூசனைகள்செய்வான்மென்மலரொன்றுகாணத்
தொக்குமென்மலர்க்கணென்றங்கொருகணையிடந்துமப்பச்
சக்கரங்கொடுப்பர்போலுஞ்சாய்க்காடுமேவினாரே. (௯



புயங்களைஞ்ஞான்கும்பத்துமாயகொண்டரக்கனோடிச்
சிவன்திருமலையைப்பேர்க்கத்திருமலர்க்குழலியஞ்ச
வியன்பெறவெய்திவீழவிரல்சிறிதூன்றிமீண்டே
சயம்பெறநாமமீந்தார்சாய்க்காடுமேவினாரே. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

## பண் - திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

வானத்திளமதியும் பாம்புந்தன்னில் வளர்சடைமேலாதரிப்ப வைத்தார்போலுந், தேனைத்திளைத்துண்டு வண்டுபாடுந் தில்லைநடமாடுந் தேவர்போலு, ஞானத்திரளொண்சுடராய் நின்றார்போலு நன்மையுந்தீமையுமானார்போலுந், தேனொத்தடியார்க் கினியார்போலுந் திருச்சாய்க்காட்டினிதுறையுஞ் செல்வர்தாமே. (௧)

விண்ணோர்பரவ நஞ்சுண்டார்போலும் வியன்றுருத்தி வேள்விக்குடியார்போலு, மண்ணுமலையுறையு மன்னார்போலு மதிட்டரையமங்கையமர்ந்தார்போலும், பண்ணார்களிவண்டு பாடியாடும் பராய்த்துறையுண் மேயபரமர்போலுந், திண்ணார்புகார் முத்தலைக்குந் தெண்ணீர்த் திருச்சாய்க்காட்டினிதுறையுஞ் செல்வர்தாமே. (௨)

கானிரியவேழமுரித்தார்போலுங் காவிரிப்பூம்பட்டினத் துள்ளார்போலும், வானிரியவருபுரமூன்றெரித்தார்போலும் வடகயிலைமலையதுதம்மிருக்கைபோலு, மூனிரியத் தலைகலனு வுடையர்போலு முயர்தோணிபுரத்துறையுமொருவர்போலுந், தேனிரியமீன்பாயுந்தெண்ணீர்ப்பொய்கைத் திருச்சாய்க்காட்டினிதுறையுஞ்செல்வர்தாமே. (௩)

ஊனுற்றவெண்டலைசேர்கையர்போலு மூழிபலகண்டிருந்தார்போலு, மானுற்றகரதலமொன்றுடையார்போலு மறைக்காட்டுக்கோடி மகிழ்ந்தார்போலுங், கானுற்றவாடலமர்ந்தார்போலுங் காமனையுங்கண்ணழலாற்காய்ந்தார்போலுந், தேனுற்றசோலைதிகழ்ந்து தோன்றுந் திருச்சாய்க்காட்டினிதுறையுஞ்செல்வர்தாமே. (௪)

கார்மல்குகொன்றையந்தாரார்போலுங் காலனையுமோருதையாற்கண்டார்போலும், பார்மல்கியேத்தப் படுவார்போலும் பருப்பதத்தேபல்லூழிநின்றார்போலு, மூர்மல்குபிச்சைக்குழன்றார்போலு மொத்தூரொருநாளுநீங்கார்போலுஞ், சீர்மல்குபாடலுகந்தார்போலுந் திருச்சாய்க்காட்டினிதுறையுஞ்செல்வர்தாமே. (௫)

மாவாய்ப்பிளந்துகந்தமாலுஞ் செய்யமலரவனுந்தாமேயாய்நின்றார்போலு, மூவாதமேனிமுதல்வர்போலு முதுகுன்ற முதூருடையார் போலுங்

கோவாயமுனிதன்மேல் வந்தகூற்றைக் குரைகழலாலன்றுதைத்தார்போலுந், தேவாதிதேவர்க் கரியார்போலுந் திருச்சாய்க்காட்டினிதுறையுந் செல்வர்தாமே. (௬)

கடுவெளியோ டோரைந்துமானார்போலுங் காரோணத்தென்றுமிருப்பார்போலு, மிடிகுரல்வாய்ப்பூதப்படையார்போலு மேகம்பமேவியிருந்தார்போலும், படியொருவரில்லாப் படியார்போலும் பாண்டிக்கொடுமுடியுந் தம்மூர்போலுஞ், செடிபடுநோயடியாரைத்தீர்ப்பார்போலுந் திருச்சாய்க்காட்டினிதுறையுந் செல்வர்தாமே. (௭)

விலையிலாவாரஞ்சேர் மார்பர்போலும் வெண்ணீறுமெய்க்கணிந்தவிகிர்தர்போலு, மலைமிருந்தமங்கைமணாளர்போலு மாற்பேறுகாப்பாய் மகிழ்ந்தார்போலுந், தொலைவிலார்புரமூன்றுந் தொலைத்தார்போலுஞ் சோற்றுத்துறையுறுந்திருவுள்ளார்போலுஞ், சிலையினாற்செங்கணரவர்போலுந் திருச்சாய்க்காட்டினிதுறையுந் செல்வர்தாமே. (௮)

அல்லலடியார்க் கறுப்பார்போலு மழுவலக்கத்தி மனைந்தார்க்காட்டிப்போது, நல்லுருநல்லூரு மேயார்போலு நன்னாறு நகரைப்பிரியார் போலு, முல்லைமுகைநகையாள்பாகர்போலுமுன்னமேதோன்றிமுளைத்தார்போலுந் தில்லைநடமாடுந் தேவர்போலுந் திருச்சாய்க்காட்டினிதுறையுந் செல்வர்தாமே. (௯)

உறைப்புடையவிராவணன் பொன்மலையைக் கையாலெடுக்கலுற்றிடுத்திநலமோடுமையாளஞ்ச, நிறைப்பெருந்தோளிருபதும் பொன்முடிகள்பத்து நெரிந்துசெவிரல்வைத்த நிமலர்போலும், பிறைப்பிளவுசடைக்கணிந்த பெம்மான்போலும் பெண்ணாணாகுமவிகிர்தர்போலுஞ், சிறப்புடையடியார்கட் கினியார்போலுந் திருச்சாய்க்காட்டினிதுறையுந்செல்வர்தாமே. (௰)

திருச்சிற்றம்பலம்.

திருப்பதிகம்—(௪)

முற்றிற்று.

---



கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# சாயாவன புராணம்.

பாயிரம்.

## கணபதி - துதி.

இலகுசெஞ்சடைக்குதரியம்பிய
கலைநிறைந்தசாயாவனக்கரைநயை
யலகிலன்பொடடைநதிடவைங்கரன்
மலரடித்துணைவாழ்த்திவணங்குவாம்.

## சாயாவனநாதர்.

சீர்பூத்தவெண்ணிலவைத் திரைபூத்த வாரதியைச் செந்தேனூற்று, மார்பூத்தமலரதனைக் கடுக்கையினைச்செஞ்சடிலத்தணிபுங்கோவைக், கார்பூத்தமேனியனு மறைபூத்த நான்முகனுங்காணு தேர்ந்து, மேர்பூத்தவின்மயச்சாயாவனத்தெம்பிரானையவனையிறைஞ்சல்செய்வாம். (௧)

## கூவென்றகோதையம்மை.

தேவர்கண்மன்னிவாழுஞ்செம்பொருடாளுஞ்சீர்சால்
நவிலுக்கரசன்கோட்டைத்தாக்கியகாலந்தன்னிற்
சேவொன்றமீசர்சாய்க்காட்டுறைவர்க்கென்றுங்கோவென்று
கூவென்றகோதையார்தங்குளிர்மலர்ச்சரணம்போற்றி. (௨)

## விநாயகர்.

பசிபிள்ளைமதிதந்கூவென்றனைபங்கொடியயந்த
தனிப்பிள்ளைகரடமார்குஞ்சரப்பிள்ளைபவளச்செங்கா
லனப்பிள்ளையூர்திநானுமடியிணைபணியுஞ்சாயா
வனப்பிள்ளைபாதமானமலரிணைசென்னிவைப்பாம். (௩)

## சுப்பிரமணியர்.

சூரவரங்கிரவுஞ்சங்கிரிபடவைவேல்வாங்கிச்சுரர்கடம்மை
விரமுடன்சிறைவிடுத்து வாசவன்மின்னோருலகின் வெற்றியோ

டைப், பேரயிராவதச்சூலைச்செய்தெய்வயானைவள்ளிபெருமா
னிலைப், பாரமயிலேறிவரு மொருகுமாரனிரு சரணம்பணிதல்செ
ய்வாம். (௪)

நாமகள்.

செங்கரத்திற்சுவடிச்சிறப்பினள்
கொங்கைமுத்தாடம்புனைகோதையாள்
பங்கயத்தனன்றுணைவியாம்மொழி
மங்கைமாமணிமலர்ப்பதம்போற்றுவாம். (௫)

திருநந்திதேவர் அறுபத்துமூவர்.

வேத்திரஞ்செங்கயிற்றாங்கி வெள்ளிமலையாளுறைகயிலைத்
திருவாயில், காத்திருக்குநந்திசரடியிணைகள் போற்றி மிகக்கனிந்த
ஞானம், பூத்தவழிவினைதீப்பத்தியினல்வழிபட்டெப்பொல்லாத்
தோற்ற, மாற்றிமுத்திபெறுமத்த வறுபத்துமூவர்பதம் வணக்க
ஞ்செய்வாம். (௬)

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

திரையேறுங்கடல்புடையுடைமணற்குழாங்கழுவேறத்தென்ன
ர்வெற்றி, வரையேறவடியருள மழிப்வேடவேடாற்றின்மருவியே
ற, நிரையேறமானேறுமரவமைய டிருமூலப்பா றுறிமேற,
வரையேறும்பதிகமருள்கவுணியர்கோன்பாதமலருளத்தில்வைப்
பாம். (௭)

திருநாவுக்கரசுநாயனார்.

இருமருங்குந்திரைத்தரள முடுக்கவொளவேலைவிலங்கிலங்க
மாநீர்ப், பொருகடலின்முகட்டதனிற்கிலைதப்பப்புணையெனவே
புரிந்துபற்றி, விரிகடலைக்கடந்தானை வேதநெறிசைவநெறிவிள
க்கினானை, யருள்பரவுந்திருவாமூரருளிறையையனவரதமகந்து
ள்வைப்பாம். (௮)

சுந்தரமூர்த்திநாயனார்.

வெங்காமதகலைநரத்திருப்பதிகம்பாடுகத்தாளைவிளங்குவென்
றாம், பொங்காரவணிந்தானைவழக்கேற்றியுரைத்தானைப்புனிதச்சா
ந்தா, லங்காரகம்புனைந்தேபரவையுடன் சங்கிலியையணைந்தகோ
வைத், தங்கரமமரர்தொழுந்தம்பிரான்றோழனையாந்தொழுதல்
செய்வாம். (௯)



மாணிக்கவாசகசுவாமிகள்.

தென்னவற்குமந்திரியாய் மெஞ்ஞானவுண்மையெலாந்தெரி
யவென்று, மன்னுபெருந்துறைத்தருந்தநிழற்கிழவனுபதேசமா
ர்க்கங்கேட்டுத், தன்னம்மையிற் புலியூரிற்கோவைவாசகமுரைத்
துத்துகள்சேர்புத்தன், றன்னைமுனைம் வாதில்வென்றவாதவூர்த்
தாபதர்தாடலைமேற்கொள்வாம். (௧௦)

உருத்திரகணத்தவர் முதலியோர்.

பந்தபாசந்தவிர்க்குமுருத்திரபல்கணத்தவர்தாள் பணிந்து
போற்றி, மெய்ந்தசைவநிலை நிறுத்துமெய்கண்டா ரிணையடிகளி
றைஞ்சிப்போற்றி, கந்துகத்தின்மீதேறிக் கயிலைபுகுஞ்சேரர்பிரா
ன்கழற்றுள்போற்றி, தந்தையிருதாடடிந்தசண்டீசர்புண்டரிக
ச்சரணம்போற்றி. (௧௧)

இயற்பகையார்துதி.

சுயற்பகைக்கண்ணியாரைக்கைதவப்பனவராய
மயற்பகைச்சிவனார்க்கீந்துமறித்தெதிர்சுற்றத்தோரைப்
புயற்பகைக்கரவாள்கொண்டுபொருதழித்தரன்றாள்புக்க
வியற்பகைமுனிவர்பொற்றாளிறைஞ்சிவல்வினைகடிர்ப்பாம். (௧௨)

கற்பினுக்கரசியார்துதி

வெற்பினுக்கரசிபொற்றாள்விழைமதிவேணிப்பெம்மான்
பொற்பினுக்கரசியாதம்பொன்னினைத்தருதியென்ன
வற்பினுக்கரசிபோவென்றியற்பகையளிக்கப்போந்த
கற்பினுக்கரசிபொற்றாள்கைதொழுதிறைஞ்சல்செய்வாம். (௧௩)

பட்டினத்துச்சுவாமிகள்.

அளகையர்கோன்செல்வத்தினுமதுசெல்வங்களவெனவேய
கத்திலுன்னிப், பளகறுக்கு மெஞ்ஞானத்தாற்றுறந்து திருவி
சைப்பாப்பகர்ந்துநஞ்சம், களமருவுமாரூர்மும்மணிக்கோவையு
மருளிக்கவின் பெற்றோங்கும், வளமிகுந்தபூம்புகார்ப்பட்டினத்து
ப்பிள்ளைபதம்வழுத்துவாமே. (௧௪)

அகத்தியமுனிவர்.

வாதாவிவில்வலனைமாய்த்துவிந்தமலையினதுவலியடக்கி, யாதார
த்தமிழ்க்கதிராவலக மெலாமொளிபரப்பி யருள்மிகுத்தே, தா

தாருநறாமலர்ச் சக்கரைப் பொழிதைத்தடமைலரயிற் றுவறைக்கே, காதாத்தமுனைர் கும்பமுனிவனடிதொழுதிதனைக்கிழ்ப்போம். ()

## கஞ்சனூர்ச் சிதம்பரதேசிகர்.

செக்கிருவாழ்கஞ்சநூர் தன்னில்வாழ் திருமறையோர்குலத்துதித்துச்சேரும்பாச, பந்தனிலைபகற்றியருட்பார்வையார்த்துப்பாகர்ஞானமந்திரத்தையுபதேசித்தே, பத்தமுத்திநெறிகாட்டியென்னையாளுமத்தனை மாகமத்தின்வழியேயிற்போர், சித்தாந்தத்தைபுரிந்தபிரானடியைப்போற்றுஞ்சிதம்பர தேசிகர் திருத்தாள்சென்னிசேர்ப்பாம். (கஅ)

## * தருமைச்சிவஞானதேசிகர்.

மருவளருமிதழியந்தார் வேணிதனில் வினைந்தானைமனத்திலுன்னுவ், கருணைபொழிமுகத்தானைக் கண்டிகை கையமணிந்தானைக் காட்சியானை, யிருவினையெய்க்கடிந்தன்பர்க்கெழின்ஞானவுபதேசமியற்றுவானைத், திருவளருந்தருமபுரச் சிவஞானதேசிகனைச்சிந்தைசெய்வாம். (க௯)

## வாழ்த்து.

கடவுளருமறையவருங்கருணைசிவாகமத்தினரும்
விடமணிந்தானடியவருமேன்மேலும்விளக்குகவிப்
படிபுரக்குமன்னவரும்பசுக்குடியுந்தழைத்தோங்க
கொடியமுகின்மழைபொழிகநீதிநெறிநிலவுகவே. (உ௦)

சிறந்தருள்சாயாவனத்தர் திருமேனிதனைத்தீண்டு
நிறைந்தமறையோர்குலமுநீணகருந்தழைத்தோங்க
அறந்தருளம்பலவாணமுனிதொகுத்த திருப்பணியுந்
திறந்தருமெய்த்தானிகருஞ்செல்வமுடன்றழைத்தோங்க. (கசு)

## சிறப்புப்பாயிரம்.

புன்னிலைமோர்வடிவாகுனன் றன்மைசவைநாடன்புகழுங்கீர்த்தி
தன்றுறமெழிற்பான்மயிலுலகாளும்ராமலிங்கராயன்மிக்க
வண்ணல்சாயாவனத்தர் தலமகிமைதமிழ்க்கவியாலறைய வென்றிருக
வெண்ணருஞ்சீர்க்காருரான்கவிராசநாயகன்றுனிபம்பிறைஞல். ()

## அவையடக்கம்.

செந்தமிழ்நாற்புலவர் பலர்யாப்புந்தொடைதொடைப்பிழ்லைமைந்தினைநாடித்தியங்காவண்ணா, முத்தமிழைத்திமெழுந்துமலையுந்

* இவர் 10 - வது பட்டத்தெழுந்தருளியிருந்த குருமூர்த்திகள்.



சிறுமுதன்மைபெறுபர்ந்தமடிதொடையின் குற்றம், வந்தவகையுரிசெய்யதொகைமோனை வழுக்கள் பொருணலமிலநாய்வைத்தருளு, மிந்தவகைக்குற்றமெலாமேனிதிற் காணவிலக்கியமாவதற்கிதனையியம்புகேனே. (உக)

கறைபணிமிடற்றர்சாய்க்காட்டினற்கதை
யறிவிலேனமிழ்துநேர்தமிழின்யாக்குதல்
செறிதிரைமுழக்கருந்தேனின்வாரிபோர்
பொறிவரிவண்டணைப்புக்கதாமரோ. (உஉ)

மாடமாளிகையரங்குவளர்சிறுரொருக்குகூடி
நீடியதரையிற்கீறிற்பதியர்கிந்திப்பரோ
பீடுறாவுணர்ந்திடாதபேதையேன்பேசுபுன்சொற்
றேடியேபொருளாராய்ந்துதெரிந்தவர்முனிந்திடாரே. (உங)

முகில்சொரிந்திடுநீர்யாவர்முன்றிலிற்றுறற்றுறும்
பகிரதிசேரின்முத்திபலித்திடுந்தீர்த்தமாகும்
வகையறியாதவென்சொன்மருவுநாறுநூற்றேர்ந்த
மிருந்தமிழ்ப்புலவர்பாலிற்சென்றிடின்மிக்கதாமே. (உச)

மருவியர்பூவினோடுபோல்வளர்சுவைப்பாலனீர்போற்
பொருளறியாதவென்றன்புன்சொலும்புகலின்மூன்றுட்
கருதரும்புரமூன்றெய்தகடவுள்சாயாவனேசர்
சரிதமேவுதலாலன்றோர்தள்ளிடார்தழுவுவாரே. (உரு)

## நூல்வரலாறு.

செப்பரியவிரோன்பான் புராணந்தன்னிற் றிகழ்தத்தபுராணத்திற்சிறப்பாயோங்கு, மொப்பிலாச்சங்கிதை களிரண்டிலாயர்வுமிருசங்கரசங்கிதையிலோது, மிப்பதியின்சிறப்பையெலா மிங்குளோர்களியம்புகவின்றமிழ்க்கவியென்னையாலு, மப்பெரியோர்மொழி சிரமேற்கொண்டெரீயவடவியர்தானிலைக்குறுதியடைவுமென்று. (உசு)

சீர்பெறுசாயாவனத்தினிலக்கணமுநேகர்ச்சிறப்புஞ்சிவனுர்மேலும், பேர்பெறுபிடிகை மகவான்வைத்ததும் பூசித்ததும்பின்பெயர்ந்ததுமாறாய், சீர்பெறுநான்மருப்பிபதிர்த்தமுந்திருநாட்சிறப்புமிழ்ப்பகையார்கொண்ட, வேர்பெறுதற்றிருத்தொண்டுஞ் சவ்வுமதீர்த்தமுமாயிசைக்கலுற்றேன். ()

## சாயாவனசருக்கம்.

பொன்னுருமாலயனும் வாசவனும் புரந்தரன் பொற்பாதம் பூணு, மின்னுருஞ்செஞ்சடில முனிவருமனுதினமும் விரும்பிப் போற்றத், தென்னுரும் பொன்னிநதி வடபாலிலெக்காளுஞ் சிறந்துவாழும், பன்னுகபூட்டினர் சாயாவனத்தின்பெருமைதனைப் பகருவற்றேன். (௧)

வேறு.

தெண்டிரைவெண்டாளங்கள் கொழித்திடு கோமதிநதியின் செழுந்தீரத்தின், மண்டுவிரைச்சந்துசெறிவனஞ் சூழுமிடமரியுங்கரியுநண்பு, கொண்டுமருவிடமெந்தஞான்று மகந்திகழுமிடங் கோதிலாத, வண்டமெர்ரிமுனிவர் பயிலிடமாகுநைமிசாரணியந் தன்னில். (௨)

பாசடைகணெருங்குவன்னித் தருநிழற்கீழ்ச்சவுனகரும்பரத்தைநாடுங், காசிபரும்வசிட்டரொடு வியாசர்புலத்தியர் பிருகு கபிலர்பரந்த, பாசவினைதனையகற்றுங்கோதமர் நாரதர்மரீசிபகர் வான்மீகர், மாசகனுமனைவியரோடியாகசாலையுஞ்சமைத்துமகிழ்ந்துசார்ந்தார். (௩)

அந்தமுனிவரர்வேள்வி யனைத்துமுடித்துவகையுடனமர்ந்தபின்னர், வந்தருளுஞ்சூதரையோராசனத்திலிருத்தியிகமகிழ்ச்சிகூர்ந்தே, கந்தமலர்க்கழலிணையைப்போற்றியருக்கியங்கொடுத்துக்கருணைமிக்கீர், சந்ததமும் யாங்களுய்யச் சகலபுராணங்களுமுன்சாற்றினீரால். (௪)

அ[illegible]னக்கெட்டாத மறைவகுத்த மாமுனிவனன்பினாலே யுளமகிழவுமக்குரைத்தவறுமூன்றுபுராணத்துளுயர்காந்தத்தில் வளமுறவேயுரைத்தருளுஞ்சங்கரசங்கிதையதனின்வையமதின் பளகின்மகிமுகச்சாயாவனமகிமையிரித்தின்னும்பகர்கவென்றார்

என்றவருந்தவரைமிகமுகநோக்கிச்சூதமுனியினிதுகேண்மின் னன்றிதருமத்தலத்தின்பெருமையொருநாற்கேட்பினுவார் சொற்றன்றுபவக்கடல்சுவறமட்டமாசித்தியொடுசுகம்வந்தெய்தும் வென்றிதருசாலோகமுதனான்குபதவிகளுமேவுந்தானே. (௬

அடுக்குமெழிற்காமியற்குக்காமியமுந் தருமமதையுன்னினோலே, தொடுக்கவெனவிரும்பினர்க்குப் புண்ணியமுநித்தியத்தை



தொடங்கினோர்க்குக், கொடுக்குமிகநித்தியமும் வீட்டுநெறி விரும்பினர்க்குக் கொடுக்கும் வீடும், கடுக்கையணிவேணியர்சாயாவனத்தின் பெருமையெவர்கழறவல்லார். (௭)

சந்தனஞ்சேர்புயவனவரசுரிமை செலுத்திடலாற்றழைத்தகொண்மூ, வந்துவந்துதிங்கடொறு மும்மாரிபொழிந்திடவேவளம்பெற்றோங்கிச், செந்தமிழ்நன்மனைகடொறு முழங்குமெழிற்சோணாட்டிற்சிறப்புநல்கும், நந்துலவுங்காவிரிக்குவடபாலிலெழுவனங்களெண்ணுமாதோ. (௮)

பதங்கனொளிவிடுமலைகின் மூந்துவனம் பவனமெறி செவிகளுல்வாய், நிதங்கமழுமதக்கரடக்கம்புரிக்கோட்டணிபுழைக்கைநீள்வெள்ளானை, சதங்கைமணி கலகலெனவந்திறையைப்பூசித்துத்தனிவீடெய்து, * மதங்கவனமாமதனைத்தரிசித்தோர்பவக்குறும்பைமாற்றுவாரே. (௯)

நீலநிறப்பசுந்தோகை மயிற்சாயற்புயற்கூந்த லிகழ்வேற்பார்வையங், கோலவரிவளைக்கைநிகழ்கும்பமுலையுடையபாகர் கொண்டன்மேனி, வேலைதனிற்றுயினெடியோனனவூர்தி தேடரியவிமலர்மேவுந், தாலவனமொன்றுளதங்கதைத்துதிப்போர்மும்மலமுந்தவிர்குவாரே. (௧௦)

பின்றீயணியுஞ்சடைமுடியார் மழுவேற்றார் வெண்பொடியார் பிறங்குமாலக், கறையணியுமணிமிடற்றார் உமையிடத்தார் கூற்றுதைத்தார் கடிசேர்கொன்றை, நிறையலங்கன் மார்பகத்தார்சிவலோகநாயகராமலர்மேவு, நறைவளர்பூம்புன்கவன மொன்றுளதுதருமமெலாநல்குந்தானே. (௧௧)

ஆதிசிதம்பரம் ஞானவனங்காலஞ் சரம்வெள்ளையனத்தோன் போற்று, நீதிவனநல்லவனம்பாலிக்குந்தருமவனநிகமவேள்வி, மாதவர்மணெருங்குவனஞ் சிகவனப்பொன்னி யிருமருங்குஞ்சூழுந், சோதியுறைசவேதவனமொன்றதனைத்துதிக்கமுத்திசொல்லுங்காலே. (௧௨)

விற்பொலியுநுதன்மகர்க்கண் வெண்ணகைச்செந்துவரிதழ்வாய்விரைமென்கூந்தற், பொற்புடையாளிடப்பாகர்க்குதவுமாகுதிப்புகைவான்பொலிந்தபோதிற், பற்பலமாமலர்ச்சோலையிடத்

* மாதங்கவனமென்பது மதங்கவனமென்றாயிற்று—இத்தலம் பெருந்தோட்டமெனவழங்கும்,

தின்முகிலெனமஞ்ஞைபரக்துலாவுந், தற்பரனுர்மகிழ்வனத்தொ
ழுவார்கள்பரகதியைச்சார்வாரன்றே; (கங.)

நிரைநிரையாயிரதமெனநடக்குவீருமரக்கலத்தைநீரிற்பாய்ந்து
வரையெறியுஞ்சண்முகத்தோனயில்போலவேல்விளங்குமகரமச்சங்
கரைசெறியவேதகர்த்துவிளையாடவெவவிபொங்கிக்கதறுமாழி
திரையெறியுமுல்லைவனந்தெரிசித்தோர்பரிசுத்தச்செல்வரர்வார்.

மடலவிழ்செங்கமலமலிபெண்ணிநதிபாய்ந்திடலான்மகிமை
தான்மிக், குடையநீரலைநிறைந்துவரைநிரைகள்போலவுயர்ந்தோ
டிக்துள்ளிச், சுடர்ருக்வமணிகண்மிகக்கொழித்திடுமோர்கலிபதனி
ன்றுலங்குதீரத், தடமதிற்சாயாவனத்தைத் தெரிசித்தார் முத்
திநெறிதனைச்சேர்வாரே, (கரு)

இந்தவனமேழினுள்ளுஞ்சிறந்ததுசாயாவனமாமிதற்காமெல்லை
நந்துமிழ்காவிரிதென்பாற்பல்லவனீச்சரங்கிழக்கினுநெதன்மேற்
கந்துமில்சீர் வலம்புரமா மேற்றிசையிற் கடைமுடியே யருள்மெய்
ஞ்ஞானச், சுந்தரஞ்சேர்சுவேதவனம்*வடமேற்கதாத்தோன்றித்
துலங்காநிற்கும். (கசு)

வேறு.

திருக்கடவூர்க்கீசானத்திசையிலென்றுஞ்சிறந்திருக்குமெழி
ல்பாலித்திகழுங்கீழ்பான், மருக்கமழ்பூம்பொழில்வேணார்க்கன
வித்திக்கின்மன்னிவளர்பொன்மேருவயங்கன்மாலும், பெருத்தம
லைப்புகலிக்குத்தென்மேல்பாலிற் பிறங்குமுல்லைவனத்திற்குப்பெ
ருகியோங்கி, விரிக்குமலைவாரிதிக்குக்குடபாற்றேன்றி மேவிடுஞ்
சாயாவனமாய் விளங்குமூதூர். (கஎ)

சீர்மலியுஞ்சிதம்பரத்திற்கெழில்சேரங்கிதிக்கினில்யோசனை
யிரண்டாய்த்திகழ்ந்துமேவும், பார்புகழுங்குடமூக்கிற் கிந்திர
திக்கிற்பகர்ந்திடும்யோசனைநான்காய்ப்பரமனூர்க், கேர்மலியுமீ
சான திசையின்மூன்று யெழிலாழிக்கரைக்கரை யோசனை மேல்
பாலாய்த், தெருவுலவும் வீதியிந்திரபுரியாயென்றுஞ் சிறந்திடுசா
யாவனமாய்த்திகழுமூதூர். (கஅ)

வேறு.

மைவளருங் கடற்றுயில்வோன் மலரவனிந்திரன் முதலாம்
வானுளோருஞ்; சைவநெறிமாந்தருஞ்சீர்முனிவருந்தருமமொ



ருபொருளேயின்ப, மெவ்வழிவீடுறச்சாயாவனத்தார்தமக்கெழி
ற்பூசையியற்றுகின்றே, ரெவ்வாவுபேரன்பேன்வானுடுக்களெ
ண்ணுகினுமெண்ணுணுதால். (ககூ)

சின்மயமாய்நித்தியமாயோங்காரத்துட்பொருளாய்த் திக
ழுமைந்து, நன்மைபெறுமெழுத்துருவாய்க்கோடிசூரியரொளி
யாய்காளும்பாரிற், றென்மைபெறுமுயிர்களுய்ய மகிழ்ச்சியது
வேயளித்துத்தோன்றுஞ்சோதி, தன்மபரிபாலனைச் சாயாவனத்
னையகலாது சார்ந்துவாழும். (உ0)

புண்ணியமோர்வடிவாஞ் சாயாவனத்தைப் பணிந்தவர்கள்
பூசித்தோர்கள், வண்மையுடன் வலம்புரிந்தோர் மலர்விழியாற்
கண்டவர்கள் வசித்தபேர்க, ளுண்மையுடனினைந்தவர்க ளதி
லிருப்போர் செனனதுன்பமொழிந்துநீடு, தின்மைபெறுங்கொ
டுமுடிசேர் வெள்ளிமால்வரை யதனிற்சேர்ந்துவாழ்வார். (உக)

புவனிதனிற்செனிக்கமுத்தி நினைக்கமுத்தி யிறக்கமுத்திபுரு
ந்துகாணப், பவக்கற்றி முத்திதருந் தலங்கடமை யிதற்குவமை
பகரலாகா, தவமிகுசாயாவனத்தார் பிறந்திடினு மரித்திடினுந்
தம்முள்ளத்தே, யவமறவே நினைந்திடினுங் கண்டிடினு முத்திபி
னையளித்தலாலே. (உஉ)

இந்தவளம்பதியதனைநினைப்போர்க டொழுவோர்களிதிலெ
ழுந்தோர், வந்தமுளர்ச்செய்திடு நற்புண்ணியத்தாற்செனித்தி
டுவார் மாஞாலத்தி, லெந்தவருணத்தவர்களாலுமும்ப ரரு
ளாலின்பமெய்திச், சந்ததஞ் சாயாவனத்தார் தாளடையுமுத்தி
நெறிதனிற்சார்வாரே. (உங)

இருசுடர்கள் முருகனுடன்றழைசெவி முமமதத்தொரு
கோட்டெழில்சேர் நால்வாய்க், கருதரியதந்திமுகன் வயிரவனுந்
திசைவசுக்கள் கரியசாத்தன், இருவருமெழுமுனிவர் பரமனு
றை திருக்கோயில் சென்றுசேர்ந்தே, யருமறையாகமப்படியே
பூசனைசெய்வார்தினமுமன்புகூர்ந்தே. (உச)

இந்திரன்று னந்நகரமமைத்தவிஞ்சிந்திரபுரியெனப்பேரெ
யிது, முந்தயிராவதமணி சேர்சினயரத்தை வாறுலகின் முறை
யிற்சேர்ப்பான். நந்தமொருநான்காலும் விறலொடுபோதலவுல

கந்தன்னின்மேவு, மந்தவரவாதிநாதாயிரம்பணமுடியளவுமகழ்ந்ததன்றே. (உரு)

அணிமருப்பாலகழ்ந்திடும்போதனந்தனுயிரம்படத்தினமர்ந்தேயோங்கு, மணிகளினற்சாயைபுவிக் கொருகோடிகதிரொளிபோல்வருதலாலே, கணிதமுயர் மறைக்கிழவன் முதலாயவானவர்கள் கருதிப்போற்றிப், பணிபுரியுமித்தலஞ் சாயாவனமாமெனும் பெயரும் படைத்ததன்றே. (உசு)

உரைக்குமிந்தத் தலநாகபுரந்தன்மபுரந்துறக்க முயர்தென்காசி, நிரைத்தமணிகொழித்து வருபொன்னிநகர்பொன்னகரநீள்சுவர்க்க, கரைக்கும்விடையூர்தி யுறைதெய்வநாயகபுர நன்னகர்புகாராந், தரைக்குளுயர்ந்திடுமயிராவத புரியாமெனும் பெயருந்தரிக்குமாதோ. (உஎ)

மண்டியலைமோதிவரு காவேரிசங்கமத்தின்வயங்குநாவாய்
கொண்டுவருமாணிக்கமுதலானநவமணிகள்குவிச்சேர [மூந்
வெண்டருஞ்சீர்வணிகர்குலப்பட்டினத்துப் பிள்ளையாரிருந்துவா
தண்டமிழ்சேர் தன்புகார்சாய்க் காடாமெனும் பெயருந்தரிக்குமன்னே. (உஅ)

அகிலதலங்களுக்கெல்லாமாசாமித்தலமயிராவதப்பேர்த் தீர்த்தஞ், சகலதீர்த்தங்களுக்கு நாயகமித்தலத்திலங்குமிந்திரமூர்த்தி, நிகமசிவாகமம்புகழுமிலிங்கமூர்த்திகட் கிறையாய்நிலவியோங்குந், தகைமைபெறுமிவற்றினுயர் வியவளவென்றெவராலறைதற்பாலதே, (உகூ)

வேறு.

இத்தலமான்மியத்தை யெழுதினோர் படித்தோர் கேட்டோர்
நித்தமுஞ்சாற்றினோர்க ணீணிலத்தறிவான்மிக்க
புத்திரரனேகர் கல்விபொருள்புவிவாழ்நாள் பெற்றே
யுத்தமஞானமெய்தி யும்பர்நாடாள்வர்மன்னோ. (௩0)

வேறு.

தீர்த்தமாமயிராவதச்செழும்புனலொருகா
லார்த்துமூழ்கியே யிரணியந்தரணி நல்லணிகள்
சீர்த்திடுங்கலை செறியபாற்பசு சிவச்சிதமன்
தூர்த்தவேதியர்க் களிப்பவர் கயிலைசேர்குவரால். (௩க)



வேறு.

இப்படியென்றேசூதரியம்புதலுமுனிவரர்களிசைந்துபோற்றிச், செப்பரியநன்னகரின் வளங்களெலாமின்னமுநீர்தெரிப்பீரென்ன, முப்புரிநூன்மார்பின் வரையருவியெனவிளங்கிட நீண்முடிதுளக்கி, மெய்ப்பொருடேர் சூதமுனி மெய்ஞ்ஞானத்தாலுணர்ந்து விளம்பலானன்.

சாயாவனச்சருக்க முற்றிற்று.

---

உ

## சருக்கசங்கிரகம்.

---

நிவ்வுலகிற் சிறந்த புண்ணியபூமியாகிய பரதகண்டத்திலே. கோமதிநதியின்கரையில் விளங்குகின்ற நைமிசாரண்யத்திலே, சௌநகர், காசிபர், வசிட்டர், வியாசர்முதலிய மகாமுனிவர்கள் ஒருபெரிய யாகஞ்செய்து முடித்து மகிழ்ச்சிகொண்டிருக்கும்போது அங்கெழுந்தருளிய சூதமாமுனிவரை அம்முனிவர்கள் பொற்பீடத்தேற்றிப் பூசித்து வணங்கிச் சுவாமிகாள், திருவெண்காடு, திருவையாறு, கௌரிமாயூரம், திருவிடைமருதூர், திருவாஞ்சியம், சாயாவனமென்னும் ஆறுதலங்களும் காசியின்மேம்பட்டன வென்றும், அவ்வாறனுள்ளும் சாயாவனமே சிறந்ததென்றும், அடியேங்கட்கு முன்னமே அருளிச்செய்தீர். இன்னும் அச்சாயாவனத்தின் மகிமையைச் சொல்லியருளவேணுமென்று வேண்ட, சூதமுனிவர் மனமகிழ்ந்து சொல்வாராயினர்.

முனிவர்களே, சோழநாட்டிலே காவேரியின் வடபாகத்தில், மாதங்கவனம், தாலவனம், புன்கவனம், சுவேதவனம், பகிழவனம், முல்லைவனம், சாயாவனம் என ஏழுவனங்கள் விளங்கும். அந்த ஏழுவனங்களுள்ளும் சாயாவனமே மேம்பட்டது. அத்தலம் திருக்கடவூர்க்கு வடகிழக்காயும், கடைமுடீச்சுரத்துக்குக்கிழக்காயும், சீகாழிக்குத் தென்கிழக்காயும், திருமுல்லைவாயிலுக்குத்தென்மேற்காயும், சமுத்திரத்துக்குமேற்காயும்விளங்கும். அத்தலத்தின்கண்ணே அறம்பொருளின்பம் வீடென்னும்பேற்றினை விரும்பிச் சிவபெருமானைப் பூசிக்கும் தேவர்களையும் முனிவர்களையும் சைவதபோதனர்களையும் அவவிட்டுச்

சொல்லவொண்ணாது. அத்தலத்தை வணங்கினோரும் பூசித்தோரும் வலஞ்செய்தோரும் தரிசித்தோரும் வசித்தோரும் நினைத்தோரும் சென்னதுன்பம் நீங்கித் திருக்கயிலாய மலையைச் சேர்வர். அத்தலம் இந்திரபுரி சாயாவனம் தெய்வநாயகபுரம் ஐராவதபுரி முதலாகிய பற்பல திருநாமங்களைப்பெறும். அத்திருச்சாய்க்காட்டுக்கொப்பாகிய தலமும், அங்குள்ள ஐராவததீர்த்தம் சங்கமுகதீர்த்தம் முதலாகிய தீர்த்தங்களுக்கொப்பாகிய தீர்த்தமும், இந்திரேசுரர்க்கொப்பாகிய சிவலிங்கமூர்த்தியும் எவ்வுலகத்திலும் இல்லை. அத்தலத்தின்கண்ணே சிவபெருமான் ஆன்மாக்களுக்கு அருள்செய்யும்பொருட்டு எஞ்ஞான்றும் நீங்காது எழுந்தருளி யிருப்பர். அத்தலமான்மியத்தை எழுதினோரும் படித்தோரும் கேட்டோரும் சொன்னோரும் எண்ணியவரங்களை யெண்ணியபடியே பெறுவர்கள். என்றுசூதமாமுனிவர் சொல்லியருளினர்.

முற்றிற்று.

---

## திருநகரச்சருக்கம்.

---

விடையுகைத்த வணிதழியைப்பணி நதிவிழவைச்
சடையில்வைத்தவ னுமையிடத்தவ னெனுந்தலைவ
னெடியபச்சை மாலயனுமேபரவிடு நிமலன்
குடிகொள்பூம்புகார்ச் சிறப்பினைக்கூறுவன்கேண்மின். (

முன்னதாகிய கற்பத்தின் முரண்மிகு கொடியோர்
வன்னியன்ன செங்குஞ்சியர் மைவரை யென்னப்
பன்னுமேனிய ராகியதானவர் பலர்வான்
மன்னிவெண்பிறை யெயிறுநின் றுறக்கி வாய்மடித்து.

வந்துசுற் [illegible] ன்னவர் திக்கிட வண்ணன்
தந்தநான்கு [illegible] டுமேற்கதமகன்சார்ந்தே
யந்தவானுலகத்தை விட்டகன்று வெண்காடுற்
நிந்துசேகர னிணையடி தொழுதுபின் னெழுந்தான்.

நீண்டவானவர் புடைவர வெண்குடை விளங்கத்
தூண்டுவாம்பரிவாரணத் தொகுதிகள் சூழ



நீண்டவார்குழலரம்பையர் [illegible] சையொலி நிரம்ப
வான்உடநாயகன் பூம்புகார் நகரினை யணைந்தான். (ச)

அணைந்த [illegible] சவன் காவிரி சங்கமத்தாட
வுணர்ந்து [illegible] போதையிலோத நீர்த்திரைக் குளிர்ச்சியினுற்
றணைந்தபேடையைச் சேவல்கள் சிறகராற்றழுவி
மணம்பொலிந்த கேதகையிற் கண்வளருதல்கண்டான். (ரு)

வேறு.

பணிலவொண் களத்தாரப்பொற் பைந்தொடி நுளைச்சியார்தம்
மணியணிவிரல்கடைய மகிழ்நர்கல்வரவிற்காத்
யணிபெற விழைக்குமாழி தீரத்திலமர்ந்து நிற்கு
மிணையிலா நறைசேர்புன்னை யிரும்பொழிலினை யெதிர்ந்தான். ()

வனசங்கள் பொலிதலாலும் வண்டுகிர் [illegible] லும்
புனைநுரை பொலிதலாலும் சங்கங்கள் பொருந்தலாலும்
புனல்சுழி [illegible] ழித்தலாலும் பொருவராலலவனாலுங்
கனைகடல் கன்னிமாரைக் கடுத்திடுங் காட்சிகண்டான். (எ)

வேறு.

கன்னிமாரியன மஞ்ஞை கூத்தாடலுங் கவினும்
புன்னைக்குழ [illegible] லன்னமுங் கானலம்புனலின்
மன்னுபான [illegible] ங் கழிகளுங் கண்டனு மணல்சேர்
வன்னிமன்றமும் வலாரிநேர்கண்டுள மகிழ்ந்தான். (அ)

வேறு.

பவளமுங்கதிர் மிக்கோங்கும் பருமணிக்குவையுமே
தவளநுண்ணிடையார் மூரலென்னுமித் திலமுஞ் சூழ்ந்த
தவளமாமலர் சேர்புன்னைக் கண்டலைக்கானலின்வாய்த்
தவளமால்யானை போ [illegible] திரை யெறிதல்கண்டான். (கூ)

திண்டிறற்றனதனென்னச் செல்வமும்படைத்தோர் [illegible]
கொண்டபொன்னணி யணிந்தகொடையிலாவ [illegible] மிக்க
தண்டமிழ்க்கவிஞர் தம்பாற்சார்ந்திட [illegible] ன்னே
கண்டவர்க்கொளித்தல்போலக்கடகங்களொளித்தல்கண்டான்.

வேறு.

கிரிபோற்பணைத்துப் புடைத்து விம்மிக்கிளர்பூண்முலையாரா
சையுறத், தரியாதனங்கன் சரந்தொடுக்கத் தயங்காடவர்கள்வ

வரைப்புயமே, லரிதாம்விளைசெய்கம்மியன்றவலையிற்பொறியாம
மூலென்ன, விரிவாங்கடனற்றிரைத்துளியைவிரைந்து வீசலுறுக
ண்டான். (௧௧)

வேறு.

இனையபல்வளம் பார்த்தன னிந்திராணியல்பரய்க்
கனைகருங்கடற் காவிரிசங்கமமூழ்கிப்
புனைபசுக்கனல்லாடை வாகனங்கள்பொன்போத
னனையநான்மறையந்தணர்க் கன்புடனளித்தான். (௧௨)

தானம்பற்பலசெய்தபின் றழைசெவித்தவள
வாரணமேறியே மீண்டனன் றண்டலையதன்வாய்த்
தேனுகுவிய மலர்களைத் தருக்கள் சிந்திடுதல்
வானவேந்தற்கு மலர்மழைபொழிவதைமானும். (௧௩)

வேறு.

மாதளைவருக்கையொடு மன்னிவுளர்கோங்கு
சூதமொடுதன்கமுகு சொற்றிடுநரந்தம்
தாறுலவுபொன்மலர் தழைந்திடுகடுக்கை
சீதவிளநீர்பெருகு தெங்குசெறிகாவில். (௧௪)

சட்டமொடுமஞ்ஞையெழில்சார்சிறைவிரித்து
வட்டமிடுமென்னடனமாட மலர்வண்டார்
இட்டமுடனின்னிசையெடுக்கவிளமாதர்
கட்டழகர்கண்டு களிகொண்டுலவுவாரால். (௧௫)

தெங்கினிலிவர்ந்தினிய செங்கனிகள்சிந்திப்
பைங்கமுகிலார் குலைகள்பாங்குறவுதிர்த்தே
யங்குறுவரம்பையினருங்குலைகள்செற்று
மங்கை[illegible]ன்மந்திசிறுவரையில் வரும்வாவி. (௧௬)

மாதர்[illegible]யுச்சிமிசைவைத்திடுமிருவின்
சீதநறவ[illegible]துளைவீழிப்புனன்மன் சிந்தி
ஓதுமொலிவண்டினிசைத்தோத்திரமுரைத்துப்
போதைமிகவேந்தியடியார்புரைவபூங்கா. (௧௭)

சந்தனமரச்செறிவு தன்னிலிளமாதர்
கந்துகமெடுத்தெறிவர் காமுகரையெல்வர்



வந்துசிலமாதர் மணமல்குமலர்கொய்வர்
ஊந்துமீட்டவர் சிலருமைகத்திடுவருசல். (௧௮)

வேறு.

இந்நகரவினின்வளமெலாமிந்திரன் பார்த்துச்
சிந்தையின்மகிழ்வெய்தியே திரையெனுங்கரத்தாற்
கந்தமாமலர்சொரிதிருக் காவிரிக்கரையின்
வந்துசேர்ந்தனன்வடிவெலாங்கண்பெறும்வானோன். (௧௯)

பொங்கியோங்குபொன்முகலிகோதாவிரிபுகலுந்
துங்கபத்திரை நருமதைபம்பையே துலங்கு
மங்கலம்பொலிசோணை முந்தாநதி வரங்கூர்
கங்கைமாநதி தொழுதிடும்பொன்னியைக்கண்டான். (௨௦)

தவளவால்வளையுயிர்த்திடு தாளமும்பொன்னுங்
கவளயானையின் மருப்புநன்மணிகளுங்கமழுஞ்
சவரியும்விரைச் சந்தமுங் கொடுவருதலின
சிவணல்வழிய ரொத்திடுமித்திருநதியே. (௨௧)

நறையளாவிய நறுமலர் ஆவிக்ணிறைத்துக்
குறைவிலாத செம்பொன்னொடு மணிகொழித்திடலான்
[illegible]ம்பர் தம்விமானமாய்வயங்கியவுடுக்க
[illegible]ம்வானத்தின் வில்லினைநிகர்க்குமிந்நீத்தம். (௨௨)

வண்[illegible]க்கரு மொய்த்திடவரம்பிகந்தாக்கங்
கொண்டுமுட்டெளிவின்றியேகுதித்துத்தேக்கெறிந்து
மண்டியேமிகவருதலான் மதுவினையுறுகரு
மிண்டுமாக்களைநிகர்த்ததுவிரிந்தநீர்வெள்ளம். (௨௩)

படைத்தபல்வளஞ்சிறந்திடும்பொன்னியைப்பார்த்தே
மடற்செறிந்திடு மலர்நிறைபழனத்தின்வந்தான்
வடித்தமாமறைவேதியர் வந்தெதிர்வாழ்த்தி
யெடுத்துச்செங்கரம்விரித்தல்போற்கமலங்கள்விளங்கும் (௨௪

வேறு.

மகபதிவந்தானென்று வரிவிழியரம்பைமாதர்
செகதினைவெனநடிக்குந் திறமைபோல்வனசமீது
[illegible]அன்னப்பெடு நீள்சிறைகளையுயர்த்தித்
தகைமைசேர்வாவிதோறுந் தாம்விளையாடுமாதோ. (௨௫)

அமரர்கோன் வரவைநோக்கி யாட்பாணர் நறவமாந்தித்
தமருடன்கூடிப்பாடுந் தன்மைபோற்றடங்களெங்குங்
கமழ்மலர்மீதிலேறிக் களிவண்டர் கள்ளருந்தித்
தமதினத்தோடுங்கூடித் தழைத்தபண்பாடுமன்றே. (௨௬)

வேறு.

கற்புடையருலமாதர் கணவர்முகநாடிடுங்காற்
பொற்புறவேகுனிவதுபோற்புனிதமுறவிளைசெந்நெல் [லி
பற்பலவாய்த் தழைத்தோங்கிப் பணைத்தாதிதியெனநெருங்
நற்புனலினெழில்பார்த்து நாணிமிகச்சிறந்திடுமால். (௨௭)

மாமலைகள்சூழ் இயவெனவயங்கிடு செந்நெற்போரின்
மீமிசையிற் றவழ்ந்தேறி வெண்பணிலம்விளையிடுத
லேமிகுமொளிபரப்பு மிருந்தடமாமேருமிசை
மாமதியமிவர்ந்திருக்குந் தன்மையெனவயங்கிடுமால். (௨௮)

வேறு.

பசுங்காய்க்கமுகுங்கன்னலுமேபரந்துநீண்டுகுலைசெறிய
திசைந்தடமுனச்செழுஞ் சோலையிடத்தின் மதுரம்த்தோங்கி
பசும்புயாயுந்தேனினிறலர்ந்து விளங்கலம்புயல்சேர் [ல.
விரும்பி ஓறைந்துகதிர்பரப்பும்வெண்மாமதிபோ[illegible]திடுமா

வேறு.

மலர்நெருங்கிய கழனியின் வளங்கண்டுமகிழ்ந்து
தலைமைபெற்றிடு செம்பியர்மணிமுடிதரிக்கு
மலகிலாயிதிநிறைந்திடுபூம்புகாரதனிற்
கலைமுழங்கிடு மந்தணர்வீதியைக்கண்டான். (௩௰)

வேதவோசையுமாகமவோசையும்விளங்கும்
பாதிவெண்பிறைவேணியர்சரிதமும்பகருங்
கீதவோசையுமாறங்கவோசையுங்கெழுமி
நீதியந்தணர்தெருவெலாங் கடலொலிகொக்கும். (௩௧)

மகுடமார்முடிபுனைந்திடுமன்னர்வீதியினிற்
பகடுபங்கிசெய்திருத்தனம் பறைசிறைத்தாற்கண்
டிகலொழிந்தினியேனுமிங்கிருப்பமென்றெணிமுன்
னகமெலாந்திரண்டுறுவதையொக்குமந்நகரில். (௩௨)



வரிசைபெற்றிடுபுரந்தரன்வந்தனனென்றே
புரிசைமேற்றிகழ்மணிக்கொடிவிண்ணினிற்பொருந்துங்
குரிசினெடுமாடவீதிகளினிற்குறுகென்
றிருகைநீட்டியேவாவெனவழைத்தல்போலிலங்கும். (௩௩)

மாடமாளிகைவான்முகட்டணவுதோரணங்கள்
பீடுபெற்றிடுபுரிசைகளிலாமுற்றம்பிறங்கு
மாடகத்தியறொண்டுத்திரங்களுமமைந்தே
நீடுநற்றெருவாயிலின்முகப்புகளிலவும். (௩௪)

வேறு.

தோரணமாதனச்செந்தூணினிற்றொடுப்பாம்பொற்
பூரணகும்பம்வைப்பர்பொற்றுகில்புனைவரென்றுங்
காரணிநெடியமாடங்களின்பெறவலங்கரிப்ப
ராரணமுணர்ந்தவய்யர்க்கிருக்கியளித்துவப்பார். (௩௫)

வேறு.

அன்னமென்னடைக்கன்னியர்பலர்கள்பந்தடிப்பார்
வன்னவாழைகள்கமுகுகள்பந்தரின்வனைவார்
நன்னுமுத்தமும்பவளமுந்துலங்குசெம்மணியு
மின்னு[illegible]பான்னுடன்வயிரமுமெய்யினிலணிவார். (௩௬)

வேறு.

சந்தனச்சாந்துநல்லதழையகில்கமழுஞ்சாந்துங்
கந்தமார்மலருங்கொண்டுகவின்பெறுமறுகுதன்னில்
வந்துவந்துவகைகூர்ந்துமன்னவர்குமரரெல்லாஞ்
சிந்தியே[illegible]ன்றுசிறப்புட்டைநிற்பார். (௩௭)

வேறு.

அரசர்வீதியின்சிறப்பெலாம்பார்த்தனனப்பா
லுரைசெய்வித்தகவணிகர்நம்மறுகுகண்ணுற்றான்
நிரைநிரைத்தகோமேதகச்சுவர்த்தலநிரம்ப
வரைவிலாதொளிர்வச்சிரத்துயிலமும்வகுத்து. (௩௮)

புருடராகமாமரதனத்தாற்கைகள்பொருத்தி
வரிசையாவயிடூரியவரிச்சினைவரிந்து
பெருகுசெம்பொனுற்றகடுகளவற்றின்மேற்பிணித்துக்
கிரிகள்போலவேமாளிகையின்னணங்கிளரும். (௩௯)

இனையமாளிகைகோடிகோடிகளுமேயிலங்க
மனையிற்செந்திருமங்கலம்பொலிந்நாடகத்தாடப்
புனையுஞ்செம்பொனுந்தாரமுமணிகளும்பொலியத்
தனதன்றன்னினும்பெருகுசெல்வத்துடன்றழைப்பார். ()

சிறப்பதாகவேளாண்டைத்தொழில்பலசெய்வார்
அறத்தைவேண்டியேயிருநிதிவந்தவர்க்களிப்பார்
திறத்தருந்தமிழிலக்கணவிலக்கியந்தெளிவார்
நிறத்துவார்புகழ்கவிஞர்பாமாலைதோணிறைப்பார். (௪௧)

வணிகர்தங்குலமரபெலாந்தழைத்திடவந்தே
பணிகொடண்புகார்நகரினுக்கதிபராயுறையு
மினையில்பட்டினத்தடிகளினிருந்திப்பெருக்கம்
பணியின்மன்னனுமளவிட்டெப்பகருதலரிதால். (௪௨)

பயக்குநல்வினைதீவினைபரனருளல்லாற்
செயற்குநம்வயமில்லையென்றுளமிகத்தெளிந்தே
கயற்கணங்கையைக்கடவுளுக்களித்தலத்துறையி
லியற்பகைவருமிம்மறுகியலெவருரைப்பார். (௪௩)

மன்னர்தம்படைவாளினிலதிகமாய்வயங்கிப்
பன்னுமாமரகதத்திறனுஞ்செய்புடைவாளு
மின்னும்வச்சிரமேழியும்பவளவேற்காலு
மன்னுமாமணிக்கலப்பைகளிரைநிரைவகுப்பார். (௪௪)

பதுமராகத்தான்மணிநுகம்பைம்பொனாற்பாசங்
கதிர்கொணல்வயிடூரியத்தியற்றுக்கக்கம்பு
குதிகொள்கன்றொடாக்குழுவிப்பக்குழுக்குலவி
வதியுநற்றொழுவத்திடைமன்னிடவைப்பார் (௪௫)

நங்கைபாகனல்லடியராயவர்நண்ணிடினவ்
கங்கைசூடியேயாமெனக்கருதியன்னவர்தம்
புங்கமாமலர்ப்பதம்பணிந்தருச்சனைபுரிந்து
துங்கநல்லுணவருத்தியேமகிழ்வரித்தூயோர். (௪௬)

அன்னதானத்துக்கரும்பசியாளனேயாயி
னன்னர்ப்பாத்திரமெனவறிந்தலதுநாடாமே
கன்னனேர்சொலேர்டனமளித்துயிரெலாங்காத்து
முன்னுகிர்த்தியேதரிப்பரிவ்வரநிமர்பார். (௪௭)



வேதமோதியாங்கொழுதுநல்வேதியர்மொழியைச்
சீதமோங்குநன்மலரொனைச்சென்னியிற்சேர்ப்பார்
மாதவன்றொழுமாதொருபாகனார்மாண்பார்
பாதவந்தனைநாளுமேபணிப்பலம்பறிப்பார். (௪௮)

உலகமுய்யமெய்யுழவுகுலதந்தொழில்புரிவோர்கள்
நிலைபெறும்புகழ்படைத்தவேளாளர்நீதியினோர்
தலைமைபெற்றிடுவாரதிகுலத்தவர்தக்கோர்
மலியுமவ்வீதியின்மேழியங்கொடிகண்டுமகிழ்ந்தான். (௪௯)

வேறு.

என்றுமளவுந்நிறையுமாகியதோரிலக்கந்தங்
கண்ணிடவேபட்டபெயர்பொறித்திட்டகரும்பொதிகள்
நன்றுநகடைவாயிலையுநற்கருந்தாழ்காவலையுந்
திண்ணமுறமுடையோர்தங்காவலையுந்தீர்ந்தனவாய். (௫௰)

அடுத்துவம்பமாக்கள்கட்போருளராயினவர்கழுத்துக்
கடுத்திடவேதலையேற்றிக்கடிநகர்சூழ்விப்பினல்லாற்
கொடுத்தலியாதவர்க்குக்கொள்வோமென்றுள்ளுநரை
நடுக்குவித்துத்துயர்செய்யுநலமார்வெள்ளிடைமன்றும். ()

அருந்திடுமெய்யாளருடனருங்கூன்செவிடுமுடம்
முழுக்குமேப்பேரழ்தத்தேமுதிர்ந்திடுமோர்வத்துடனே
பழுதில்தோர்காட்சிநிறம்பாங்குறவேபெறுதலினாற்
றொழுதுவலஞ்செயாக்கழியுந்தொல்சிலாந்சிமாமன்றும். ()

வஞ்சமுண்டுமெய்ப்பகையுற்றோராவின்வாய்ப்பட்டோர்
நஞ்சமுண்டுமிகவருந்திநடுங்கிடுவோர்கூவியினு
லஞ்சிடவேபிடிபட்டோர்சூழ்ந்துதொழவத்துயர்போம்
விஞ்சுமொளிகாவெனடுங்கன்மேவினின்றமன்றமுமே. (௫௩)

தவவேடந்தனின்மறைந்தத்தவத்திற்கிழுக்கான
பவமேசெய்வோரபலார்பாவையரைநயந்திடுவோ
ரீசமறைந்துநின்றொழுகுமலவைப்பெண்டிரொடுகை
தவழ்நுசான்றினர்புறங்கூற்றுளரறைபோகமைச்சர். (௫௪)

இன்னவரொன்னைக்கொண்டவிப்பாசத்தகப்படுமே
ரென்னநகர்நாற்சாதவெல்லையளவுங்கேட்க

இன்னறருங்கடுங்குரலைபெடுப்பிப்பினம்மனஞ்செய்
யன்னவரைப்பூதமடித்தயில்பூதசதுக்கமுமே. (௫௫)

கோவினதுகோல்சற்றுக்கோடிடினுமறங்கூறுந்
நாவிலவைநூல்கோடியொருதிறத்திற்சாய்ந்திடினு
நாவினெடுநிலாதுநவையுறுகண்ணீருகுத்துப்
பாவையதுநின்றழுதம்பாவைமன்றும்பார்த்தனனால். (௫௬)

வேறு.

தளவமூரல்சேர்பற்பலகணிகையர்தண்ணார்
களபகுங்குமக்குழம்பினைக்காளையர்காற்றேற்
றுளநெகிழ்ந்திடவும்பற்கோடொக்குமொண்முலைமேல்
வளமுறப்புனைந்துலவுமம்மறுகுகண்டனனால். (௫௭)

இணையில்பூம்புகாரெனும்பதிவளமெலாங்கண்டே
யணிகொள்வானவேந்தகமகிழ்ந்தாவயினுவிந்
துணையதாயதன்னுன்மலிங்கப்பரஞ்சோதி
மணமிகுந்தமாமலரடியருச்சிக்கமதித்தான். (௫௮)

வானநாட்டினுஞ்சிறந்ததாமித்தலம்வளங்கூர்
ஞானயோகியாமரர்கள்சித்தர்கணனுக்குந்
தானமாமிறைபுத்தியுமுத்தியுந்தருமே
லானதென்றரன்பிடிகையவன்வைக்கநினைந்தான். (௫௯)

வேறு.

எனச்சூதர்புகார்நகரினியல்பெல்லாமெடுத்துரைக்க
மனத்தானினைப்பரியதவமுனிவர்மகிழ்கூர்ந்து
தனத்தாசைமுதன்மூன்றுந்தடிந்தருளுந்தாபதனே
வனப்பாரிந்திரன்பூசைவைத்தகதையுரையென்றார். (௬௦)

முற்றிற்று.

---

## சருக்க சங்கிரகம்.

---

ஆதிகற்பத்திற்கொடியவர்களாகிய அளவற்ற அசுரர்கள், இந்திரனைப் போர்புரிந்து வெற்றிகொள்ள நினைந்து, தேவலோகத்தை யடைந்து, பொன்னகரத்தைச் சூழ்ந்துகொண்டார்கள்.



இந்திரன் அஃதறிந்து பயந்து அசுரர்களறியாவண்ணம் வெள்ளையானையின்மீதேறிக்கொண்டு பூலோகத்தில்வந்து, திருவெண்காட்டையடைந்து சுவேதாரண்யேசுவரரைத் தெரிசித்து அங்குநின்றும் புறப்பட்டுக் காவிரிப்பூம்பட்டினத்திற்சென்று, காவிரிசங்கமத்திலே ஸ்நானஞ்செய்து, பிராமணர்களுக்குப்பற்பல தானங்கள்கொடுத்துப் பின்பு காவிரிப்பூம்பட்டினத்தின் சோலைவளங்களையும், காவிரியாற்றின் பெருக்கத்தையும், வயல்வளங்களையும், அந்தணர்வீதியையும், அரசர்வீதியையும், வைசியர்வீதியையும், வேளாளர்வீதியையும், "எண்ணும் அளவும் நிறையுமாகிய இலக்கத்தையும் பெயரையும் தம்மேலெழுதப்பட்ட பொதிகள் வாயிற்காவலையும் தாட்காவலையும் உடையோர்காவலையும் நீங்கினவாய்க்கிடப்ப, அப்பொதிகளை திருடுவோருண்டாயின் கழுத்தைக் கடுக்கும்படி அவர் தலையிலேற்றி நகர்முழுவதையுஞ் சுற்றிவரச்செய்தலேயன்றி அவர்க்குக்கொடாததும் திருடுவோமென்று நினைப்போரையும் பெருந்துயர் செய்யவதுமாகிய" வெள்ளிடைமன்றத்தையும், "பொன்னாலமூகியெயினரும் கூனரும் செவிடரும் ஊமரும் ஸ்நானஞ்செய்த அப்பொழுதே அவர்களுக்குப் பழுதற்ற காக்ஷியையும் நிறத்தையும் கொடுத்தலினால் அவர்கள் தொழுது பிரதக்ஷணம் செய்து வணங்கின்ற" இலஞ்சிமன்றத்தையும், "பித்துப்பிடித்தோரும் பாம்பாற்கடிக்கப்பட்டோரும் நஞ்சுண்டு வருந்துவோரும் பேயாற்பிடிக்கப்பட்டோரும் வலம்புரிந்துவணங்கின் அவர்க்குத்துன்பத்தைப்போக்கும்" நெடுங்கன்மன்றத்தையும், "தவவேடத்தின் மறைந்து பாவஞ்செய்வோரும் பிறர்மனைவியை விரும்புவோரும் அலவைப்பெண்டிரும் பொய்ச்சாக்ஷிசொல்வோரும் புறங்கூறுவோரும் தருமநெறிதவறிய மந்திரிமாரும் ஆகிய இன்னோர்கள் என் கைப்பாசத்திலகப்படுவாரென்று நகரத்தின் நாற்காத எல்லையளவும் கேட்கும்படி கடுங்குரலாற்கூறிப்பின் அவ்வாறுசெய்வோரை யடித்துண்கின்ற பூதசதுக்கத்தையும், அரசன் செங்கோல் சிறிதுகோணினும் தருமசபையார் பக்ஷபாதஞ்செய்யினும் வாயினாற் சொல்லாது கண்ணீர்சொரிந்து பாவையானது நின்றழுகின்ற" பாவைமன்றத்தையும், கணிகையர் வீதியையும், மற்றுமுள்ள சிறப்புக்களையுங்கண்டுமகிழ்ந்து, இப்

பூம்புகார் நகரம் தேவநாட்டினுஞ் சிறந்ததாயும், ஞானிகளும் யோகிகளும் தேவர்களும் சித்தர்களும் வசிப்பதாயும், போக மோக்ஷங்களைத் தருவதாயும் விளங்குதலால் இதனிடத்தே நம்முடைய ஆன்மார்த்த லிங்கமூர்த்தியை எழுந்தருளச்செய்து பூசித்துக்கொண்டு வசிப்போமென்று நினைந்தான்.

## இந்திரன் பீடிகைவைத்த சருக்கம்.

முனிவர்மொழிந்திடவினவியசூதமுனிக்கோமான்
இனிதெனவானவர்கோனிறைபீடிகையெழில்சேரும்
தனயிதமல்குபுகாரினில்வைத்திடுதனைசொல்வேன்
புனிதமொடன்பொடுகேளுமினென்றேபுகல்கின்றான். (௧)

பல்லவனீச்சுரநன்னகரின்மேல்பாலாகு
நல்லதொர்காவிரிநதிவடபாலொர்குரோசத்தி
னெல்லையிலரிமயனுமொலார்விமானமெழிற்பொலிதல்
வல்லியமைத்திலரானுறைபீடிகைவைத்தானால். (௨)

வைத்தலும்வானவர்மலர்மழைபெய்தனர்வானோங்கு
முத்தமதுந்துமிகளுமுழங்கினவுரவோர்கள்
சித்தர்கண்மொய்த்தரகரவொலிசெய்தனர்கிவற்றோடும்
வித்தகவாகமவேதமுழங்கினமேன்மேலும். (௩)

கின்னரர்பாடினர்தும்புருநாரதர்கின்னர்யாழ்கொண்
டின்னிசைசெய்தனரெண்வசுவுடனேயெழுமாதர்
பன்னியநார்கள்சிவகணநாதர்பரன்மேவு
மன்னியபீடிகைகண்டுபணிந்துமகிழ்ந்தார்கள். (௪)

சந்திரர்சூரியரங்கியியக்கர்கடாமுற்றூர்
மந்திரியுடனேவாயுவும்வருணனுமவந்தார்கள்
கந்தமுறும்புயமாதொடபோரதிகலையேயுஞ்
சுந்தரியோடுபுலோமசைபூமகள்சூழ்ந்தாரால். (௫)

திருமால்பிரமனுடைங்கரன்வடுகன்செவ்வேளுங்
குருமாமணிசேர்பீடிகைதொழுதெங்கோமானே
யருமாதவமேமுனிவோரரசேயடியாருக்
கொருமாநிதியேயெனநற்றுதிகளிசைத்திட்டார். (௬)



சங்கரன்மேவியசெம்பொற்பீடிகைதனைவேள்விப்
புங்கவனும்வலம்வந்துவிழுந்தேபுவிமீதெட்
டங்கமுறத்தொழுதெம்பெருமானேயமரேசா
லிங்கடியேன்செய்பூசனைகொண்டருளென்றேத்தி. (௭)

வேறு.

என்னையாளுடையிறைவனிங்கமர்தலாலிமையோர்
மன்னுமாமறைமுனிவரரித்தலம்வரலால்
மின்னமாமணிபொன்னிறைமாடமாளிகையார்
பொன்னினாடிதுவேயெனப்புரந்தரன்புகழ்ந்தான். (௮)

என்றுமாதவச்சூதனுமிசைத்தலுமுனிவோர்
நன்றெனமகிழ்ந்திந்திரன்பூசையைநல்வாய்
மன்றிலாடியமலரடிக்கன்பனேயென்று
வன்றுசூதமாமுனிவனுமதனைநன்கறைவான். (௯)

முற்றிற்று.

## சருக்க சங்கிரகம்.

இந்திரனானவன் திருப்பல்லவனீச்சுரத்தின் மேல்பாலாக காவேரியின் வடபாலில் ஒருகுரோச எல்லையில் தேவதச்சனைக் கொண்டு ஒரு பொன்விமானஞ்செய்வித்து, "தேவர்கள் பூமாரிபெய்ய, பஞ்சதுந்துமிமுழங்க, வேதாகமங்கள் ஒலிப்ப, சித்தர்முதலியோர்கள் ஹரஹரவென்றேத்த அவ்விமானத்தினிடத்தில் ஆன்மார்த்தலிங்கமூர்த்தியை" எழுந்தருளச்செய்து, வலம்புரிந்து நமஸ்கரித்துத் துதித்தான்.

## இந்திரன் பூசைச் சருக்கம்.

தென்றிரைபொன்னிசிவருபொன்னிநதிசேர்ந்தே
மண்டுபுனிதப்புனலின்வானிறைவனுடி
யண்டர்புகழ்நீற்றினையணிந்துதிருநீல
கண்டனதுகண்மணிகளின்பெறவணிந்து.

சொன்னகலசத்திலுறுதூயபுனல்கொண்டே
மன்னுமெழில்வெண்கரிமணிப்பிடரினேற்றி
மின்னுமடமங்கையர்கள்வெண்கவரிவீசத்
துன்னிகரிறுந்துமிகடாரிகண்முழங்க. (௨)

வந்தொளிகொள்செம்பொன்மணிமந்திரமடைந்து
சிந்தையினிலன்பொடுசிவன்பதமிறைஞ்சி
நந்திடுதெய்வப்பசுவினன்னெய்கொடுகோடி
யுந்துகதிர்வீசிரவியொத்தகடரிட்டு. (௩)

வேறு.

ஆங்கணன்முன் [illegible]வரைத்தருணமாகத்தின்படி யவன்றனரு
ண்[illegible]ளிக்குத், துங்க[illegible]முறுபரிமளஞ்சேர் தயிலமுமாவினந்தருபழு
நை[illegible]துந்தூய்மை, [illegible]ங்குமதுரந்தருபாலுயிர்நெய்த்தேன் செழுங்
கரும்பின்சாறுகிய, செங்கனிநீர் தெங்கிளநீர் சந்தனநீர் கும்பநீர்
சிறக்கவாட்டி. (௪)

வேறு.

மெய்யிலுறுமப்புனலைவெண்டுகிலின்மாற்றிச்
செய்யவொளிர்பட்டுவகைசீரொடுதரித்துத்
துய்யகளபப்புழுகுபூசிவிரைதோன்று
மொய்யலர்கொள்கற்பகநன்மாலைமுடிசூட்டி (௫)

செங்குவளைநெய்தனறைசேர்ந்திடுசெவ்வந்தி
கொங்குகமழ்தாதகிகுளிர்ந்தவிரைமௌவல்
பொங்கொளிநிறைந்திடுகடுக்கைபுனைவில்வம்
பங்கயமுதற்பிணையல்பற்பலவணிந்து. (௬)

மாமணியினுபரணவகைகள்பலசாத்தித்
தூமதிநிறத்ததிருநீற்றினொடுசோதிக்
கோமணிசிரத்தொடுகளங்குளிருமார்பம்
மாமலையெனும்புயமருங்கினுமணிந்து. (௭)

வேறு.

காவிரிநீரத்திடைவிளைகவினுர்செஞ்சாலி
மேவியவாலரிபாசொளிமுற்கம்விரையேறும்
ஆவுறுநெய்பாகிவைகொடுநல்லன்பாற்செய்த
தாவில்குளோதனமிறைதிருமுன்னர்ச்சார்வித்தே. (௮)



ஏலஞ்சுக்கொடுசர்க்கரைநல்லரியின்பாலுஞ்
சாலும்பாயசமாதியபாலவுந்தந்தேபின்
கோலம்புனையுமிதம்பெறுமுக்கனிகுளிர்தேனுஞ்
சீலமுடன்றிருமுன்புநிவேதனஞ்செய்தானால். (௯)

வேறு.

சிறந்தவெள்ளிலைசெம்பழுக்காயுட
னிறந்தவன்பினிவேதனஞ்செய்துபின்
பிறங்குவாசப்பெரும்புகைகாட்டிநற்
றிறந்தருங்கதிர்த்தீபங்கள்காட்டியே. (௧௦)

செழுங்கண்ணாடிமுன்காட்டித்திருமுடிக்
கெழுந்தமாமதியென்னக்குடை[illegible]கவித்
தொழுங்கின்காலசமுற்றிடுமெ[illegible]வளி
வழங்குசாமரம்வீசினன்முன்ன[illegible]ன். (௧௧)

இவ்வாயாவையுமன்பொடியற்றியே
துன்னுநல்விரைத்தூயகரந்தையும்
புன்னைகூவிளமும்புனைய்தனும்
பன்னுநஞ்சமும்பண்பொடுசாத்தியே. (௧௨)

துங்கவானிற்றுலங்கிடுகற்பகப்
பெ[illegible]ங்கர்காண்மலர்மந்திரபுட்பமாய்க்
கங்கைசூடுங்கடவுட்கருச்சித்தாச்
செங்கையாரப்புட்பாஞ்சலிசெய்தனன். (௧௩)

வேதநான்கினுமிக்கதிறுவென
வோதுருத்திரமந்திரமோதியே
யாதிதேவனையன்பொடுபோற்றியே
கோதிலாதபொற்கோயிலைச்சூழ்ந்தரோ. (௧௪)

மன்னிநிம்புவிவீழ்ந்துவணங்கியே
பொன்னிருட்டிப்புத்தேளிர்புரவல
னன்னமேனமறிவருமண்ணலைத்
துன்னுதோத்திரஞ்செய்யத்தொடங்கினான். (௧௫)

வேறு.

தென்குடந்தைதனி லுறையுமெஞ்ஞானப் பாஞ்சடைச்சித்தா போற்றி, துன்பமெலாங்களைந் தருளுமிடைமருதூர் வீற்றிருக்குஞ்சோதி போற்றி, நன்குவளர் திருச்சேய்ஞலூரிலமர்ந்தருளுமெங்கணநாதா போற்றி, பொன்பொலியுங் கடுக்கையணி வேணியம்புகாரமர்ந்தபுனிதா போற்றி. (௧௬)

ஆவடுதண்டுறையரசே குற்றாலநகர்மேவுகமலா போற்றி, காவிரிபொன்றிரைக்கரத்தாற்சொரியுமயிலாடு துறைக்கருத்தா போற்றி. சேவமருங்கொடியானே மாதங்கவனத்திருக்குஞ் செல்வா போற்றி, பூவிரியும்பொழிற்புகார்த் திருநகர்வந்தமர்ந்தோனே போற்றிபோற்றி. (௧௭)

திருக்கடவூர் நள்ளாறு தென்னூர்மேவியருள் சிவனே போற்றி, மருக்கமழ் பூம்பொழிற்புகலூர் செங்காட்டங்குடி மருகல்வளர்தென்காசி, கருப்பறியலூராலங்காட்டி லுறைந்தருணிலகண்டா போற்றி, தருப்பொலி பொன்னூடாண்டுதண்புகார் வந்தமர்ந்தனியே போற்றி. (௧௮)

சனகசனந்தனர் அடியர் வினைகளைந்தருளுங்கடவுள் போற்றி, யனமிவர்திருபூசனைசெய் தோணிபுரத் தமர்ந்தருளு மழவே போற்றி, தனிநிகருங் கயிலைமலைவாரணாசியிலுறைசெஞ்சடிலா போற்றி, புனையுமலர்க் கற்பகநாடாண்டு புகார்வந்தமர்ந்தோய் போற்றிபோற்றி. (௧௯)

அருணகிரியுறைவோனே விருத்தகிரி யமர்வோனே யைய போற்றி, கருணைபொழிகாளத்தி நீர்த்தகிரி யவிநாசிகழுக்குன்றத்தோய், டருவினைக ளகற்றியருள் புள்ளிருக்குவேளூர்வாழமலா போற்றி, திருவளர் வெண்காடமர்ந்தோய் செழும்புகாருறை தேவதேவ போற்றி. (௨௦)

அண்டமுகடளவிவளர் திரிசிராப்பள்ளியுறையரசே போற்றி, தண்டமதிச்சடையானே திருவானைக்காவிலுறை [illegible]தி போற்றி, சண்டகராமவுணர் தமைக்காயுமாறருள்புரிகாலகாலா, புண்டருகுலப்படையாய் புராந்தகனே புகாரமர்ந்த புனிதா போற்றி. (௨௧)



வேறு.

போற்றியென்றிறைஞ்சிப்பின்னும்புரந்தரனுங்குவவி
நீற்றினான்றன்னைப்பூசைநேசமோடியற்றுநாளி
லேற்றினிவர்ந்தெங்கோமானிறைஞ்சுமிந்திரனைநோக்கி
மாற்றலர்தமைச்செருக்குமவரங்களுங்கொடுத்தான்மன்னோ ()

பற்பலவமரர்போற்றும்பாய்கதிர்க்குலிசப்புத்தேள்
கற்பலமளிக்கும்பொன்னிநன்னதிவடதீரத்திற்
சொற்பலகொண்டுவேதந்துதிசெயும்மறைத்துநால்வா
* யுற்பலகணேசர்தம்மையுமுவலன்பொடுபூசித்தான். (௨௩)

இந்திரனுடனுண்டிற்றவிமையவர்முனிவராகே
ரந்தமில்லிலிங்கங்கண்டேயார்வமோடருச்சித்தார்கள்
மந்தமாருதவெற்போனும்வாய்ந்திடுமன்பினாலே
சுந்தரவகத்தீசர்துணைமலரடிபூசித்தான். (௨௪)

ஆழியிற்பொருந்தும்பொன்னியணிகொள்சங்கமதீரத்தில்
வாழிமார்க்கண்டன்சங்கமுகேசனைமகிழ்ந்தர்ச்சித்தான்
மழிகாலங்கடோறுமோங்குதாங்தோன்றியார்தா
ளேழிரண்டுலகம்போற்றுங்கீரசனருச்சித்தானல். (௨௫)

பொன்னியினுதிசிதன்னிற்பொருந்துபல்லவனேசன்று
ன்னிலைக்காமன்றுனயத்தருச்சனைபுரிந்தான்
மன்னுமாமறைசிட்டன்வளர்ந்தெழுமன்பினாலே
பன்னுசீர்முத்திப்பதனைப்பணிந்தர்ச்சித்தான். (௨௬)

[illegible]செய்யருசீமாலையமிழ்தேசிவாவிடங்கர்
பொன்னடியாதவப்பூண்பொருந்துகௌதமனர்ச்சித்தான்
சென்னிகர்கந்தரத்தார்திருமேனியழகர்தம்மைத்
துன்னுசீர்ப்புலத்தியப்பேர்த்துமுனிபூசைசெய்தான். (௨௭)

புண்ணியமுருநர்பொற்றுறுசேய்ந்திரன்பூசைசெய்தா
னண்ணியேபொன்னித்தென்பாலுகருக்கிறைபூசித்த
வண்ணலைநாகநாதவமலனைமுனிவரண்ட
ரெண்ணியவெண்ணிபாங்கேயெய்துவானருச்சித்தாரே. (௨௮)

இந்திரபுரமதானவெழிற்சாயாவனத்தின்றென்பா
லந்தமிழ்நாரப்பொன்னிகதிரமட்டும்வாரணோர்

* உற்பலகணேசர்—செங்கழுநீர்விநாயகர்.

பந்தபாசந்தவிர்க்குமுனிவரர்பணிந்துபோற்றி
வந்தருச்சித்தலிங்கஞ்சதமெனவறைவர்மாதோ, (உகூ)

பொன்னிசேர்சங்கமத்திற்புகுந்தாடிச்சாய்க்காட்டீசர்
மின்னுதாள்பணிந்துவெண்காடுற்றுமுக்குளம்படிந்து
மன்னுவெண்காடர்ப்போற்றிவந்துகாவிரியின்மூழ்கிப்
பன்னுசாய்க்காடர்பாதம்பரவுவார்படைப்பார்முத்தி. (௩0)

வேறு.

எனவுமிந்திரன்சபரியையியற்றியதிசைத்தாய்
புனையுயாமணிப்பீடிகைபெயர்க்குமாபுகலென்
றனையமாமுனிவரரெலாமடிதொழுதேத்த
வனையுஞ்செஞ்சடைச்சூதனுமனமகிழ்ந்திசைப்பான். (௩௧)

முற்றிற்று.

---

## சருக்க சங்கிரகம்.

---

இந்திரனனவன் காவிரிநதியிலே ஸ்நானஞ்செய்து; திருநீறணிந்து, உருத்திராக்கமாலிகை பூண்டு, பொற்கலசத்திலே திருமஞ்சனமெடுத்து, வெள்ளையானையின் பிடரியினேற்றி தேவமாதர்கள் சாமரம் வீசப் பஞ்சதூந்துமி முழங்கத் திருக்கோயிலிற்சென்று, சிவபெருமானை வணங்கி, தெரிவிப்பகவினைய்யாலெண்ணில்லாத தீபமேற்றி, சிவாகமத்திற்சொல்லிய விதிப்படி சிவபெருமான்றிருமேனியில் பரிமளதைலமுதல் கும்பத்துப்புண்ணியநீருமுள்ள திருமஞ்சனஞ்செய்து, திருவொற்றுடைசாத்திப் பீதாம்பரம் ரெத்நாபரணம் திருநீறு களபப்பூழுகு கற்பகமாலை முதலியவைகளைச்சாத்தி, செங்கழுநீர் செவ்வந்தி வில்வம் கிரந்தை கொன்றை முதலிய புட்பங்களாலர்ச்சித்து, பரிமளதூபங்காட்டி, சர்க்கரைப்பொங்கல் பாயசம் முக்கனி முதலிய வெல்லாம்நிவேதித்துப் பூசித்துப் புட்பாஞ்சலிசெய்து உருத்திர மந்திரமோதியன்போடு துதித்து; வலஞ்செய்து நமஸ்கரித்துத் தோத்திரஞ் செய்தான்.

இவ்வாறு இந்திரன் நாள்தோறும் பூசித்துக் கொண்டு வருநாளில் ஒருநாள் சிவபெருமான் இடபவாகனத்தின்மீதெ



தருளிவந்து, இந்திரனுக்கு அசுரர்களைச் செயங்கொள்ளும் வளித்து மறைந்தருளினர்.

இந்திரன் செங்கழுநீர்விநாயகரைப் பூசித்தான். இந்திரனுடன் காவிரிப்பூம்பட்டினத்திற்கு வந்த முனிவர்களும் தேவர்களும் அத்தலத்தின் கண்ணே அளவில்லாத சிவலிங்கமூர்த்திகளைக்கண்டு அன்போடு அருச்சித்தார்கள்.

அகத்தியமுனிவர் அகத்தீசுரரையும், மார்க்கண்டமுனிவர் சங்கமுகேசுரரையும், ஆங்கிரசமுனிவர் தான்தோன்றியீசுரரையும், காசிபமுனிவர் பல்லவனேசுரரையும், வசிட்டமுனிவர் முத்தியப்பேசுரரையும், கௌதமர் பிரியாவிடங்கேசுரரையும், புலத்தியர் திருமேனியழகரையும் பூசித்தார்கள். உபேந்திரன் முருகக்கடவுளைப்பூசித்தான். காவேரியின் றென்பாலுள்ள நாகராசன் பூசித்த நகேசுரரைத் தேவர்களும் முனிவர்களும் பூசித்தார்கள். சாயாவனத்தின் றென்பாலாகக்காவேரிக்கரைவரையிலும் நூறு சிவலிங்கமூர்த்திகளைத் தேவர்களும் முனிவர்களும் பூசித்தார்கள்.

காவேரிசங்கமத்திலே ஸ்நானஞ்செய்து, சாயாவனேசுரரைத்தொழுது, திருவெண்காட்டிற் சென்று முக்குளத்தின் மூழ்கி, சுவேதாரண்யேசுரரை வணங்கி, மீண்டுவந்து, காவேரியில்நீராடி, சாயாவனேசுரரைத் தொழுபவர்கள் பிறவித்துன்பத்தினின்றும் நீங்குவர்.

---

## இந்திரன்பீடிகைபெயர்க்குஞ் சருக்கம்.

---

வெஞ்சலவுணர்தம்மைமாளத்திடவரங்கள்பெற்றே
மஞ்சுலாசனன்புகாரின்மகிழ்ந்தினிதிருக்கும்வைக
லெஞ்சிறுங்கொடியரானவசுரர்வானாடுமுற்று
மஞ்சவேதுருவியண்டரதிபனைக்காணாரானார். (௧

மாதருவன்வாழுஞ்செல்வமைந்தும்புகுந்துதேடித்
தீதுசேரவுணர்யாருங்கண்டிலர்தெய்வவேந்தைப்

போதினனுலகந்தன்னிற்புக்கெங்குந்தேருவிக்காணு
சோதியாங்கடவுள்மேவுஞ்சுந்தரக்கயிலைபுக்கார்.

அம்மலையிடத்துங்காணாரம்பொன்மேருவினுங்காணார்
தம்மையேயிருக்கும்போகமுனிவரர்தலத்துந்தேடிச்
செம்மணித்தேரிற்செல்லுந்தினகரன்றன்னைத்திங்க
ளம்மையையடர்த்தேயட்டதிசையினும்புகுந்தாராய்ந்தார்.

அத்திசைகளினிருந்தோர்யாரையுமடர்த்தாங்குற்ற
மத்தவாரணங்கடம்மைவருத்திவானிறைவர்க்காணார்
சித்தர்களியக்கர்முன்னோர்நடுங்கிடச்சினமீக்கொண்டு
ருத்திரவினைகள்செய்யுமவுணர்கள்குழுமினாரால். (௪)

கூடியவசுரரண்டகோளகைமுழுதுஞ்சென்று
தேடியுங்காணாராகிச்சிலைந்துவாய்மிகப்புலர்ந்து
வாடியேகவர்ச்சியுற்றுமனமிகக்கலங்கும்போதின்
றூடியேதவத்தான்மிக்கநாரதமுனிவன்வந்தான். (௫)

வந்தமாமுனியையண்ணன்மைந்தனானவனைப்போற்றித்
தந்தைதாய்தம்மைக்கண்டதன்மைபோலசுரர்யாரு
முந்தரியாசனத்தின்முகட்டினில்வைத்திறைஞ்சிப்
பந்தபாசங்கள்பாற்றுமுனிவனைப்பரவினாரால். (௬)

செஞ்சடைமுடிதுளக்கிச்சிறந்தயாழ்முனிவன்செப்புங்
கஞ்சமாமலர்முகங்கள்கதிர்செயாக்கருமம்யாதிங்
கெஞ்சிடாதுரையுமென்னவிரக்கமிலவுணரெல்லா
மஞ்சியேவாய்புதைத்தங்கவனுடன்விளம்பு [illegible] (௭)

புரந்தரன்றனித்திருக்குப்புலப்படாமையினுலப்ப
நிரந்தரங்கவற்சிகூர்ந்தேம்பாமெனநிகழ்த்தலோடும்
வரந்தருமுனிவன்கேட்டுமனமகிழ்ந்தவரைநோக்கித்
திருந்துவானவர்தங்கோமானுறைவிடஞ்செப்பலுற்றான். (௮)

சுடர்ப்படையவுணர்காள்யாஞ்சொல்வதுகேண்மினுங்க
ளடற்செருவஞ்சியேயப்புகாரினிலமரர்கோமா
னுடற்குயிரன்னவும்பர்தம்முடனுவந்துகூடி [௯
யிடர்ப்படாதிருக்கின்றானங்கெனமுனியிசைத்தப்போது



அவ்வுரைகேட்டபோதிலவுணர்வாயாரக்குச்
செவ்வியகிரிகள்போலத்திண்புயம்வளரப்பெற்று
மைவரையொருங்குகூடும்வண்மைபோற்குழுமிநின்று
பல்வயிக்கொலிமுழக்கும்பான்மைபோலார்ப்பரித்தார். (௧0)

கவனவாம்பரிக்குழாமுங்கரடகுஞ்சரக்குழாமு
நவமணித்தேர்க்குழாமுநன்றுகாலாட்குழாமும்
புவனிமீதெழுவித்தார்கள்பொற்பணிமுடிசேர்சேட
னிவையெலாம்பொறுக்கலாற்றுதெனச்சிரநடுங்கலுற்றான்.

இத்திறங்கோடிகோடிசேனைகளிடைவிடாமல்
மொய்த்தவம்புகாரைநோக்கிமுரணுடையவுணத்தியோ
ரொத்ததிண்டிமங்கள்பேரிசல்லரியொலிசேர்சங்கம்
யுத்தவெம்முரசமாதியொலித்திடவெழுந்தாரன்றே. (௧௨)

சேனையாலெழுந்ததூளிதினகரன்றனைமறைத்தல்
[illegible] மன்னன்றன்னைக்கட்டுடாவளமைபோலும்
பானையின்கடநீர்மாவாயமூர்ந்து [illegible]
சேனையாய்க்கொண்டல்வந்துசெகர்தலைநகர்க்குமம்மா. ( )

ஏழுலகினுள்ளோரேழ்பெருங்கடலினுள்ளோர்
கீழும்பாதலத்திலுள்ளோர்தடவரையகத்திலுள்ளோ
ரூழிகாலத்தின்காலமுள்ளதாமயுநன்ளோர்
குழுவாராகியென்னத்தொலைவிலாவசுரர்யாதோ. (௧௪)

வேறு.

குண்டலங்குழைமீதிருகடரெனக்குலவத்
திண்டிறற்சிரச்செம்மயிரெரியெனத்திகழ
வண்டகோளகைமுகடுமேட்டளவிடாக்கை
மண்டியேயிருக்கெழுந்தனர்வரவினையிற்றவுணர். (௧௫)

உருமிடித்ததுபோன்றுதோர்குரலினருயர்ந்த
கருமுகிற்கணமொத்திடுமெய்யினர்கழற்கால்
விருதுபெற்றவர்மடங்கலாமெனவருவிறலோர்
நிருதரானவர்வன்கணர்பாவத்தினிறையோர். (௧௬)

சத்ததாகரமனைத்துமேகிளர்ந்தெழுந்தனைகமை
யொத்துரைக்கொணாப்பாதகத்தானவரொருங்கே

பார்த்தனரிமையவர்பரிவுற்றார்பண்புறுசிதகளிறோர்தருவைப்
பேர்த்துமுகக்கைபிடித்தவுணப்பெரும்படையாவுமழிந்திடவே.

கட்டுறுபரிகளுமதகரியுங்கவின்மணியிரதமுமவுணர்கண்மெய்
தொட்டிடுகவசமுமலிகரத்துலங்குபுயங்களுமிகுதூளி
பட்டிடமோதலுமப்போதப்பாதகர்பாதவமதைதூறக்
கிட்டினர்மகபதிமதகரியைக்கெழுமியசினமொடுசூழ்மியரோ. ()

சக்கரமழுமுச்சிரவேலாற்றனவர்சிதகரிமுதுகுபிடர்
பக்கமழுத்திவருத்துதலும்பாதகவசுரர்கண்மகிழ்வுற்றாக்
கொக்கரிசெய்தனர்வானோர்கள்கொடுந்துயருற்றனர் வெண்கரியுஞ்
சிக்கியதவரெறிபாசத்தாற்றிசைதெரியாதுதளர்ந்ததரோ. (௩௪)

அக்கணமகபதியதனையறிந்தாயிரமாயிரமமரரிரு
பக்கமும்வரரதகசதுரகப்படையொடெழுந்துயர்தந்துபிகண்
மிக்குமுழங்கிடயாணருறும்விருதுக்கொடிகள்பரந்துவரத்
திக்கொடுவெற்புநடுங்கிடவேதினமுற்றுகவமேவினனால். (௩௫)

வந்திடுமிந்திரனைக்கண்டுவாலிபமன்னர்கள்பாசத்தா
னொந்தனனெனவப்பாசத்தைநொடியிலறுத்தவன்விற்கொண்டு
முந்திவளைத்தொளிர்நாணிறொலிமுரனொடுசெய்தலுமசுரர்களஞ்
சிந்தியிரிந்துவருந்தினர்வான்செல்லிடியுண்டிடுமரவம்போல். ()

அத்தலையவுணர்கள்படைகுழுமியரியப்பல்கணைமழைசொரிதலுமே
வித்தகமுற்றிடுதவளநெடும்வேழப்பிடரின்மிசையேறி
யுத்தமமகபதிகனல்சொரியுமோராயிரமத்திரம்விடவே
சித்திரவதையுற்றவுணரெலாஞ்சிரமற்றுவிழுறந்தனரால். (௩௭)

தலையற்றிடுதிகிரிதைபறந்தொலாஞ்சதுர்முகனருளியவரமதனாற்
றலைபெற்றடுபடைபலகொண்டேதாவிடுபரிகரிமீதேறி
யலைபெற்றிடுகடல்போல்வந்தேயாகண்டலனைவருத்துதலு
நிலைபெற்றிடுவானிறையவன்முன்னின்றெதிரவுணரையிதுசெய்வான்.

இந்திரபுரியுறையிறையவனுமென்னருமவுணரைவதைபுரியத்
தந்தநல்வரமதுதனையெண்ணித்தயையுறுதானவர்வளர்சிரமுந்
தந்தரமுஞ்சரமும்மார்புங்கழலிணையோடிருகாலுகளுந்
துந்துகளாந்துணிபட்டிடவேசாயகமுகபதிசிதறினனால். (௩௯)



கணைபலகோபதிசொரிதலுமேகண்டகவவுணர்கள்சிரமுதலாத்
துணிபடவீழ்ந்துயிர்தொலைதலுமேசொரிந்தனர்மலர்மழையும்ப
ரெலா, மிணையறுமுழவொடுதுந்துபிகளெங்குமுழங்கினவெழின்
மேவும், பணைமுலையரிவையர்நடனமிடப் பண்ணவரின்பொடுது
ள்ளினரால். (௪0)

வேறு.

ஊழ்தலுற்றவவுணர்களொண்புனீர்
வீழும்யானையைவீரரைவெம்பரி
சூழுந்தேரைத்தூர்ந்துகொண்டேகுத
லாழிமேலமர்க்கேகுதலொக்குமே. (௪௧)

குருதியாற்றிற்குளித்திடுகூளிகள்
பெருகுகின்றவவுணப்பிணங்களைக்
கருதுகின்றகழுகொடுபாறுக்
குருவித்தன்கிளையோடுநகருமால். (௪௨)

வேறு.

அவுணப்படையுதிரங்கடலணியாயுதமீனுங்
கவனப்பரிதிரைமூளைகள்கரு ஓங்கொழுநுரையாம்
அவணைபொலிமணிநித்திலமாரந்திகழலவன்
நவமுற்றிடுகுடரேறுகிர்நற்றேர்விடுகலமே. (௪௩)

போற்றார்படைதானிப்படிபொடியாதலுமிதுவெவ்
ணீற்றானருள்வரமென்றுநினைந்தேதிசையுள்ளோர்
தோற்றார்திதியின்மைந்தர்கடொலைந்தாரெனத்துள்ளிக்
காற்றுமெனவந்திந்திரனைக்கண்டுகளித்தார். (௪௪)

செந்தாமரையாள்கேள்வனுமனமூர்ந்திடுதேவுங்
கந்தாரிபமுந்தும்மகபதிவெஞ்சமர்காண
வந்தார்தையித்தியர்யாரையுமாய்த்தானெனமகிழ்ந்தே
தந்தார்நறுமலர்வாசவனேற்றொண்முடிதரித்தான். (௪௫)

வண்டார்மதவயிராவதமாவாரணமேறிக்
கொண்டான்மருத்துவன்வானவர்குழுமிப்புடைவரவே
விண்டாவிடவேவெற்றிகொண்முரசத்தொலிபரவ
வண்டார்பலர்படுசெம்புலமதினின்றுமகன்றான். (௪௬)

அகன்றேநெறிசெல்போதினிலங்கமுழுதுங்கன்
மிகுந்தேதிகழரியின்மயனைக்கொண்டுமுன்மேரு
நகம்போற்சிவனார்மேவிடநற்பொன்னினியற்று
செகம்போற்றிடுசாயாவனத்திருக்கோயிலைக்கண்டான். ()

கண்டானுளமகிழ்ந்தானிருகரங்கூப்பினன்கிரமே
லண்டார்தமையடல்செய்திடுமாகண்டலனன்பாய்ப்
பண்டேகியநெறிவந்துயர்பலநல்கிடுபொன்னி
தண்டாதுபுகுஞ்சங்கமுகத்தின்கணாசார்ந்தான். (௪௮)

காவேரிசங்கமமாடினன்கருதுந்நிதிபலவும்
பூவார்சுரர்கட்கிந்தயின்பொன்னிப்புனன்மூழ்கி
மேவார்புரமுன்செற்றிடுவிமலன்வருண்மேவுந்
தேவாதிபன்வாழுந்திருச்சாய்க்காட்டினிற்சேர்ந்தான். ()

வேறு.

அன்னமாநகரமரர்கோனணைதலுமணிகொள்
சொன்னகும்பத்திற்புதுப்புனனிறையவீந்துலங்கி
வன்னபேதியமகரதோரணங்களுமலிந்து
பொன்னின்மாநகர்போற்பொலிந்திருந்ததையன்றே. (௫௦)

மாமணித்திருவிமானத்தைவலஞ்செய்துமறைதேர்
பூமன்மாலினுக்கரியவன்பொற்பதமிறைஞ்சிக்
காமனைப்பொடிபடுத்தியகடவுளேயென்றுஞ்
சோமனைப்புனைவேணியாவென்றுமேதுதித்தான். (௫௧)

பத்தர்போற்றிடும்பரமனேமுமறைமுனிவோர்
சித்தர்சாரணரமரர்கள்பணிந்திடுஞ்சிவனே
கத்தனேயெனையாண்டிடுங்கருணைவாரிதியே
முத்திநன்னெறியளித்திடுமூர்த்தியேயென்றான். (௫௨)

என்றுபூசனைபுரிந்துளமகிழ்ந்தெழுந்திருந்து
துன்றுவானவர்தம்மொடுஞ்சுரருலோகத்துக்
கின்றுபோகுவலெனநினைந்திந்திரனிறைவாழ்
நின்றுசேர்மணிப்பெட்டகந்தனைநயந்தெடுக்க (௫௩)

அந்தமாமணிப்பீடிகையதிலெழுந்தருளு
மெந்தையார்திருவருளினாலெடுபடாமையினால்



வந்துவந்திமையோர்கடம்வலியினாலெடுக்க
வந்திலின்றெடுபடாமைகண்டும்பர்கோனயர்ந்தான். (௫௪)

பின்னர்வாசவன்பிரானுறைபெட்டகமேவு
மன்னுபொற்றிருவிமானத்தைவாம்பரிபூண்ட
பொன்னெடுங்கிரிபோன்றதோர்தேரினிற்பிணித்தே
யன்னவாம்பரிகளையுகைத்தனுமனைமுடன்று. (௫௫)

மன்னுவன்மைபூண்டிழுத்தலும்வரனுறைகோயி
லென்னவுஞ்சிறிதேனுமேயசைந்திடாதிருக்க
வன்னதன்மையுமமரருக்கிறையவனறிந்து
மின்னுமோடைபூண்வெண்களிற்றினைவிளித்துரைப்பான். ()

பனைக்கைவாரணத்தரசநின்பராக்குறுபலத்தா
னினைக்குமுன்னமிச்சினகரமெடுவெனநிகழ்த்த
வனைத்துலோகமுமதிரவத்தந்திபொற்றளியை
முனைத்தசைத்திடவானவர்களுமுறையிட்டார். (௫௭)

தந்தநான்குறுதந்திபொற்றளியினையசைக்கு
மந்தவேலையிலருளுருவம்பனைத்துலகுந்
தந்தவம்பிகையச்சமுற்றன்செவிசார்வா
னொந்துகூவினளோக்குறுந்திருநுதலிறைவன். (௫௮)

கூவுந்தன்மையைக்கேட்டனனு[illegible]னைக்குறித்துத்
தேவியஞ்சலென்றுரைத்துத்தன்[illegible]வடிநுனியைப்
பூவினூன்றினன்பொற்றளிசலிப்பின்றிப்பொலிந்த
தோவிலாதுபாதலமெ[illegible]ழுந்தவும்பல். (௫௯)

சூழியானைகூர்ங்கோட்டினூற்றுதைந்துகிழுள்ள
வேழுலோகமுஞ்சினகரமெடுப்பலென்றகழ்த
லாழியான்சிவனடிபெறுவேனமொன்றுய்ப்பல்
லூழிகாலமுன்னிலமிடந்ததனையேயொக்கும். (௬௦)

வரைநிகர்த்திடும்வாலியமதகரிமருப்பா
லுரைசெய்பாதலத்தளவுமேயகழ்வவ்வழியா
லரவவேந்தினதாயிரம்பணாமுடியணைந்தா
மிரைகொண்மாமணிச்சாலைமுப்புவனமுநிறைய. (௬௧)

வந்துசூழ்ந்திடுந்தன்மையைவானுளோர்கண்டே
யிந்தநன்னகர்க்கிலங்குசாயாவனமெனும்பேர்
தந்துபோற்றினர்பணிந்தனர்தானவாழியுந்
தந்தநான்குறும்வாவிதாந்திருநிறத்தந்தி. (௬௨)

முற்றுந்தன்னுறுவலியொருங்குறமிகுமுயற்சி
யுற்றுநீண்டவொண்கரங்கொடுசுற்றிமேலிழுக்கச்
சற்றுமத்திருத்தளிபெயராமையிற்றளர்ந்தே
வெற்றிவேந்தனுக்குரைத்ததுவேந்தனும்வெருவி. (௬௩)

வந்துகண்டிஃதெம்பிரான்செயலெனவணங்கி
யிந்தவுற்புதந்தன்னையான்கண்டதுமிலையென்
றந்திமேனியாயடியவர்க்கெளியனேயமுதே
முந்துமாமறைமுதல்வனேயெனமுறையிட்டான். (௬௪)

வேறு.

நெடியோனேடுஞ்சரணாமுறையோ
சடையார்கொன்றைத்தாரீயமுறையோ
கடுமுன்னுகர்தங்காளாமுறையோ
துடிசேரிடையாடுணைவாமுறையோ. (௬௫)

ஞானக்கனியேநம்பாமுறையோ
தேனிற்றிகழ்தீஞ்சுவையேமுறையோ
கூனற்பிறைசேர்குடிலாமுறையோ
வானிற்றிகழம்பரசேமுறையோ. (௬௬)

பண்டாமடியார்க்கினிபார்த்திடவே
தண்டாமரைநேர்தாடந்தருளு
மண்டாமுறையோவமலாமுறையோ
வெண்டாவியசீரிறைவாமுறையோ. (௬௭)

வேறு.

இப்படிமுறையோவென்றேஇந்திரனடங்கியேத்த
வப்பணிசடையானெம்மையாளுடைவிடைமீதேறி
யொப்பறுகணத்தர்தம்மோடுயர்தவமுனிவர்சூழ
மைப்புயலூர்திமுன்னேவந்தருள்செய்தானன்றே. (௬௮)



வானவர்க்கரசன்கண்டுமலரடிவணங்கியேத்தித்
தேனமர்கொன்றையாயென்சிவலிங்கமூர்த்திதன்னை
வானிடைக்கொடுபோய்வைத்தேமணமிகுமலர்கள்கொண்டு
யானருச்சனைசெய்தேத்தவருளெனவண்ணல்கூறும். (௬௯)

இத்தலஞ்சிவலோகத்தினெண்மடங்கதிகமாகு
முத்தமவிவ்விலிங்கத்துற்றுநாமீங்குவைகிப்
பத்திசேரடியார்க்கென்றும்பண்புறுபுத்தியோடு
வித்தகமுத்திமீவான்விரும்பினோமதனால்வேந்தே. (௭௰)

இங்குநின்றிவ்விலிங்கமெடுபடாவிதநாஞ்செய்தோந்
துங்கமார்பரார்த்தபூசையிதற்குநீ நலங்கச்செய்வி
பங்குனித்திங்கடன்னிற்பாங்குறுவிழாவுஞ்செய்தி
பொங்குசீர்ப்பரார்த்தபூசைபுரிதிநீபுகலக்கேட்டி. (௭௧)

அயன்முகந்தனிற்செனித்தவந்தணராஞோர்பூசித்
துயர்பதம்பெறுதற்கிட்டவிலிங்கமேயுரித்தாமன்னோ
ரியனிலந்தனிற்பரார்த்தம்விரும்பியேதீண்டுவாரேற்
புயல்வளமறும்புவிக்குப்புரவலர்க்காகும்பாவம். (௭௨)

நம்முகவயின்பிறந்தநற்றவக் * காசிபாதி
யைம்முனிவரர்கள்கோத்திரந்தனிலவதரித்து
மெய்ம்மைசேரபிடேகாந்தம்விருப்பொடுபெற்றோர்தாமே
செம்மைசேர்பரார்த்தலிங்கந்தீண்டுதற்குரியராவார். (௭௩)

உரைத்திடுகாசிபாதியுறுவர்கோத்திரத்தானும்
பரித்திடாதபிடேகாந்தம்பரார்த்தமாமிலிங்கந்தீண்டிற்
றரைத்தலந்தனக்கும்வேந்தன்றனக்குமேசாருந்தீங்கு
வரைச்சிறகரிந்தோயன்பர்வணங்கிவாழ்வுறும்பொருட்டால். ()

இத்தலத்திவ்விலிங்கம்பரார்த்தமாவிலங்கச்செய்தோ
மத்திறமதனாலிசைவரிலார்வத்தோடே
யுத்தமவபிடேகாந்தமுற்றவர்தம்மைக்கொண்டே
நித்தியத்துடனைமித்தியந்தனைநிலவச்செய்வாய். (௭௫)

அன்புநின்பாலிற்கொண்டவாரியனுண்டளப்பான்
றன்புடையவனுகியன்றேன்றுன்மிசைவீழ்ந்திறைஞ்சி

* காசிபர்-கௌதமர்-பாரத்துவாசர்-கௌசிகர்-அகஸ்தியர் இவர்களே ஐந்துமுனிவர்களாவார்.

பின்பொடுறநித்துவேறேரிலக்கண மைமந்தகான
கொன்பெறுமிலிங்கமந்தக்குரவன்பாற்பரிவாற்பெற்றே. (௭௬)

ஆன்மார்த்தபூசைசெய்துகொண்டுநியம்பொருட்டின்
பான்மேவிச்சுந்தமாரும்பல்போகந்துய்த்துவாழ்தி
மேன்மாசதீர்த்துமேலாம்வீடருள்வோமென்றோதிப்
பான்மாறுமொழிமான்வாமப்பரமனவ்விலிங்கம்புக்கான். (௭௭)

முற்றிற்று.

---

## சருக்க சங்கிரகம்.

இந்திரன், அசுரர்களைக் கொல்லுதற்குச், சிவபெருமானிடத்து வரம்பெற்றுக் காவிரிப்பூம்பட்டினத்தில் வசிக்கின்றகாளில், அசுரர்கள் தேவலோகமுழுதுந் தேடி யிந்திரனைக் காணாமல் பின்பு வைகுந்தத்திலும் சத்தியலோகத்திலும் கைலாசத்திலும் மகமேருவிலும் அட்டதிக்சயிலும் புகுந்து தேடினார்கள். அவ்விடங்களிலுங்காணாமல், மனவருத்தமுற்று ஓரிடத்தில் கூடியிருந்தார்கள். அச்சமயத்தில் நாரதமுனிவர் அவ்வசுரர்களிடத்திற்சென்று, இந்திரன் தேவர்களுடன் காவிரிப்பூம்பட்டினத்தில் வசிக்கின்றானென்று கூறிப்போயினர். இவ்வார்த்தையைக்கேட்ட அசுரர்கள், மகிழ்ந்து யானைக்கூட்டங்களும் குதிரைக்கூட்டங்களும் தேர்க்கூட்டங்களும் காலாட்கூட்டங்களுமாகிய எண்ணில்லாத நால்வகைச்சேனைகளுடன் காவிரிப்பூம்பட்டினத்தை நோக்கிச் செல்லுகையில் நாரதமுனிவர் இந்திரனிடத்திற்சென்று, அசுரர்கள் யுத்தத்திற்கு வருதலைக்கூறினார். அசுரர்களும் காவிரிப்பூம்பட்டினத்திற்கருகே வந்து சேர்ந்தார்கள். அஃதறிந்த இந்திரனும் தேவர்களும் முனிவர்களும் சிவபெருமானை வணங்கி உமாதேவியாரை யோர்பாகத்திலுடையவரே! இயமனை யுதைத்த திருவடியையுடையவரே! யேழையேங்களைக் காத்தருளுமென்று பிரார்த்தித்தலுஞ் சிவபெருமான் றிருவருளினால், விநாயகர், ஐயனார், சத்தமாதாக்கள், முருகக்கடவுள்முதலியோர் அந்நகரத்தின் வாயில்களைக் காத்துக் கொண்டார்கள். அப்பொழுது இந்திரன் அசுரர்களோடு போர் செய்யும்படி வெள்ளையானையை அனுப்ப, அவ்வெள்ளையானை



யானது மிகுந்த கோபத்தோடுஞ் சென்று அசுரர்களையெதிர்த்து யமன்போலச் சினந்து அவர்களுடைய தலைகளும் மார்புகளும் கைகளும் நெறநெறவென்று நெரியும்படி உரல்போன்ற அடிகளான் மிதித்துக்கொன்று, உடல்களை ஆகாயத்திலெறிந்தும், துதிக்கையில் ஓர் இருப்புலக்கையைப்பிடித்துக்கொண்டு, இரதங்களைத் தூளாகும்படி யடித்தும், யானை குதிரைகளைக் குடல்சரியும்படி யடித்தும் போர்செய்யும்போது அசுரர்கள் ஆரவாரித்துவந்து, பாணங்களைச் சொரிந்து வெள்ளையானையின்கையிலுள்ள இருப்புலக்கையைத் தூளாகச்செய்து வெள்ளையானையை வருத்துதலும் வெள்ளையானை கோபங்கொண்டு ஓர் பெரிய மரத்தைப் பெயர்த்துத் துதிக்கையிற்கொண்டு யானைகளையுங் குதிரைகளையுந் தேர்களையுந் தூளிபடும்படி யடித்துக் கணக்கற்ற அசுரர்களையுங்கொன்றது. அச்சமயத்தே அசுரர்கள்நெருங்கி வெள்ளையானையின் கையிலிருக்கின்ற மரத்தைப் பாணங்களான்முறித்து அவ்வெள்ளையானையைச் சூழ்ந்துகொண்டு பாசத்தாற் கட்டி, சூலத்தால் முதுகு பக்கம் பிடரிமுதலிய இடங்களில் குத்திவருத்துதலும் வெள்ளையானைசோர்வுற்றது. அதனை யிந்திரனறிந்து நால்வகைச் சேனைகள்சூழ யுத்தகளத்தையடைந்து பாசத்தையறுத்துவிடுத்து, அவ்வெள்ளையானையின்மேற்கொண்டு, கையில் ஓர்பெரிய வில்லைப்பிடித்து நாணோசைசெய்தமாத்திரத்தில் பற்பல அவுணர்கள் இடிமுழக்கங்கேட்ட அரவம்போல் சிதறி யோடிவருந்தினார்கள். அதனையறிந்தஅசுரவேந்தர்கள் கூடி யிந்திரன்மேல் பல பாணங்களை விடுத்தார்கள். இந்திரன் அக்கினியைக் கக்குகின்ற ஆயிரம் அஸ்திரத்தைவிடுத்து, அசுரர்கள்விட்ட அஸ்திரங்களையும் அவர்கள் தலைகளையும் அறுத்தான். தலைபற்ற அசுரர்களெல்லாம் பிரமன்கொடுத்த வரத்தாற் றலைபெற்றெழுந்து யானை குதிரை தேர்களிலேறிப் பற்பல ஆயுதங்களைக்கொண்டு இந்திரனைவந்து சூழ்ந்துகொள்ள அப்பொழுது இந்திரன் சாயாவனேசுரரைத் தியானித்து அவர்கொடுத்தருளிய வரத்தை நினைந்து, அவுணர்களுடைய சிரம் தோள் மார்பு கைகால்முதலிய அவயவங்களை அறுத்துக்கொல்லும்படி பல பாணங்களை விடுதலும் அப்பாணங்கள் சென்று அவர்களுடைய சிரமுதலியவைகளை யறுத்

தலால் பகைவராகிய அசுரர்களெல்லாரும் இறந்தொழிந்தார்கள். இந்திரன் மனமகிழ்ந்து போர்க்களத்தினின்றும் நீங்கி, சண்முக தீர்த்தத்திலும் காவேரியிலும் ஸ்நானஞ்செய்து, சாய்க்காட்டை யடைந்து, சிவபெருமானைப் பூசித்து நமஸ்கரித்துத் துதித்து, தேவர்களோடும் இன்று வானுலகத்திற்குச் செல்வோமென்று நினைந்து, ஆன்மார்த்தலிங்கமூர்த்தி யெழுந்தருளியிருக்கும் பொற்பீடிகையை யெடுத்தமாத்திரத்தில் அந்தப்பீடிகையானது சிவபெருமான் திருவருளினால் எடுபடாமையால் வருந்திப் பின்பு சிவபெருமானெழுந்தருளியிருக்கும் பெட்டகம் வைத்திருக்கின்ற விமானத்தைக் குதிரைகள் பூட்டிய தன் தெய்வ விமானத்திற் பிணித்துக் குதிரைகளை நடத்தவும் அவ்விமானஞ்சிறிதும் அசையாதிருத்தல் கண்டு வெள்ளையானையை விடுக்க வெள்ளையானைசென்று விமானத்தை யசைக்கும்போது உமாதேவியார் கூக்குரலிடுதலும் சிவபெருமான் உமையே பயப்படாதே யென்றுசொல்லியருளித் திருவடிநுனியை யூன்றித் திருக்கோயில் அசையாவண்ணஞ் செய்தருளப் பின்னர் வெள்ளையானை தன் கொம்புகளால் விமானத்தைப்பாதலலோகத்தளவும் அகழ அவ்வழியினால் ஆதிசேடன் திருமுடியில் இருக்கும் ரெத்நங்களின் சாயை[illegible]றைதல்கண்டு தேவர்களெல்லாம் இந்நகர்க்குச் சாயாவனமென்று பெயரிட்டு வணங்கித்துதித்தார்கள். பின்னும் வெள்ளையானை, தன்றுதிக்கையால் விமானத்தைச் சுற்றிக்கொண்டு மேலே இழுக்கவும், அவ்விமானஞ் சிறிதும் அசையாமையால் வெள்ளையானை தளர்வுற்றது. இந்திரன்கண்டு பயந்து நடுங்கி இது சிவபெருமான் செயலென்று நினைந்து நமஸ்கரித்து முறையிடுதலும் சிவபெருமான் இடபவாகனமேற்கொண்டு தோன்றியருளினர். இந்திரன் நமஸ்கரித்தெழுந்து துதித்து, சுவாமி! அடியேன் விண்ணுலகத்திற்கொண்டுபோய் வைத்துப் பூசிக்கும்படி இச்சிவலிங்கமூர்த்தியைக் கொடுத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தலும் சிவபெருமான் இந்திரனை நோக்கி இந்திரனே! இத்தலஞ் சிவலோகத்திலும் ஏழ்மடங்குமேம்பட்டதாகும். நாம் இவ்விலிங்கத்திலே வீற்றிரு



ந்து, இங்குவந்து வணங்கும் அன்பர்களுக்குப் போகமோக்ஷங்களைக்கொடுக்க விரும்பினோம். ஆதலால் இவ்விலிங்கம் இவ்விடத்தினின்றும் எடுபடாமற் செய்தோம். இவ்விலிங்கத்திற்குப் பரார்த்த பூசைசெய்வித்துப் பங்குனிமாதத்திற் றிருநாட்செய்வாயாக. பரார்த்தபூசை செய்யுந் தன்மை எவ்வாறெனில் பிரமன் முகத்துப்பிறந்த பிராமணர் பூசித்துப் பலனடைதற்கு இட்டலிங்கமேயுரியதாகும். அவர்கள்பரார்த்த லிங்கத்தைத் தீண்டுவாராயின் புவியில்மழை குறையும். அரசர்க்குப் பாவமுண்டாம். நம்முடைய ஐந்துமுகத்திலும் பிறந்த காசிபன்முதலாகிய ஐந்துமுனிவர் கோத்திரத்திற்பிறந்து சமயதீக்ஷை விசேஷதீக்ஷை நிர்வாணதீக்ஷை ஆசாரியாபிஷேகம் என்பவைகளைப்பெற்ற ஆதிசைவர்களே பரார்த்தலிங்கபூசைக்குரியராவார். சொல்லப்பட்ட காசிபாதிமுனிவர் கோத்திரத்திற் பிறந்தவராயினும் சமயமுதலபிஷேகாந்தம் பெறாதவர்கள் பரார்த்தலிங்கத்தைத் தீண்டினால், அரசர்க்கும் உலகத்துக்கும் பாவமுண்டாகும். ஆதலால் ஆதிசைவர்களில் அன்புடனே சமயமுதல் அபிஷேகாந்தம் பெற்றவர்களைக்கொண்டே நித்தியநைமித்தியங்களைச்செய்வாயாக. உன்குருவாகிய வியாழனிடத்தே வேறோர்சிவலிங்கம் பெற்று ஆன்மார்த்தபூசை செய்துகொண்டு பொன்னுலகத்திருந்து, மேலான போகங்களை யனுபவித்து வாழ்வாயாக. மேல்மலபரிபாகத்தில் மோக்ஷத்தைக் கொடுப்போம் என்று சொல்லியருளி இந்திரலிங்கத்தின்கண்ணே புகுந்தருளினர்.

முற்றிற்று.

---

## ஐராவததீர்த்தச்சருக்கம்.

---

மாமுனிவரர்களெந்தாய்வாசவன்பூசைதன்னைப்
பூமியிற்பெயர்க்குங்காதைவிரித்தநீபுகன்றாய்மேன்மை
யாமயிராவதத்தின்றடத்தியலறைவாயென்னத்
தேமுரல்கொன்றையான்றாள்சிந்தைசெய்துரைக்குஞ்சூதன். (௧)

தானவா நிழியுஞ்செய்யபுகர்முகத்தவளமேனி
யானையத்திருச்சாய்க்காட்டினையர்தாள்வணங்கிநின்று
சேணிகர்விழியாள்வாமச்செல்வநின்சினகரத்தை
யானகழ்ந்திட்டபாவமெவ்வகைதீருமென்று. (௨)

வெருவனுற்றிரங்கும்வேலைவிண்ணிலோர்வாக்குத்தோன்றிப்
பொருவிலித்தளியைநின்றுப்பொற்புறகிம்புரிப்பூண்
மருவுகோட்டாலிடந்தவயங்குமிவ்வவற்றென்கீழ்பால்
வருநலமிகும்பாதாளமேழின்கீழ்மன்னுகங்கை. (௩)

அத்தகுபுனிதகங்கையாடிநீசாய்க்காட்டீசர்
உத்தமமலரடிக்கணெண்மலர்கொண்டுபூசை
பத்தியோடியற்றிற்பாவம்பாறுமென்றுரைக்கவெள்ளை
யத்தியத்திருமாற்றங்கேட்டந்தடநோக்குங்காலை. (௪)

கோதகல்பாதலத்திற்குலவியபுனிதகங்கை
பாதகநீக்கியார்க்கும்பரகதியளிக்குமாறு
தாதகிழுமெங்கள்சங்கரனருளினாலே.
மீதெழுந்தத்தடத்தின்மிளிர்ந்ததேக்குற்றதம்மா. (௫)

வேறு.

விரைசெறிந்துதாதுலவியேமென்முகிழ்விரிந்து
பிரசமூற்றியேசெட்டிதழ்க்கமலங்கள்பிறங்க
வுரிவண்டின்னிசைமுரன்றனவண்மணிகொழிக்குந்
திரைபொருந்துமத்திருப்பெருந்தடந்தனின்மாதே. (௬)

மன்னுமன்றலங்குவளையின்வண்டுகள்வளரத்
துன்னுமென்சிறைதுலங்குதேனின்னிசைபாடும்
பொன்னிறக்கவிஞ்ஞிடம்பொற்புறுபொறிப்பேர்
மின்னையொத்தொளிர்செய்யபங்கயமலர்மேவும். (௭)

சிறந்தபைங்கமுகின்செழுங்குலைதனிற்றுவி
நிறைந்தசெந்நிறப்பழங்களைமிடத்தினுதிர்த்தே
நிறங்கொள்வெள்ளியின்றகட்டினைநிகர்த்திடும்வாளை
பிறங்குதாமரைமலர்மிசைப்பெட்பொடுதுஞ்சும். (௮)

வேறு.

இன்னவற்புதங்கள்கண்டேயிமைத்திடாநயனக்கைம்மா
அன்னபூந்தடத்திற்புக்கெம்மண்ணல்செங்கமலத்தாளை

அவல்—பள்ளம்.



முன்னிபேதுதித்துமூழ்கிமுதல்வரையிமையோரேத்தும்
பொன்னிகர்சடையிற்கங்கைபுனைந்திடும்புனிதர்தம்மை. (௯)

பு[illegible]ாத்தான்மொண்டுபுனிதமஞ்சனநீராட்டித்
தழைவுறவில்லங்கோ[illegible]ளைகழுநீர்பௌவல்
வளைகரவீரங்கொண்டு *மாந்திரவிதியாற்பூசை
விழைவுறப்புரிந்திசர்க்குவிரைமிகுதூபதீபம். (௧௦)

இன்புறவெடுத்துக்கோட்டியினியமுக்கனிமுன்வைத்தே
யன்புரநிவேதித்தப்பொனுலையர்தனைச்சூழ்வந்தே
யென்பரவெழிலார்கொன்றைவிளமதிசூடுந்தேவர்
முன்புசென்றிறைஞ்சிமூவாமுதல்வனேபோற்றியென்றா. (௧௧)

மனங்கரைந்தேத்துமேல்வைவரதர்சாய்க்காடரோமக்
கனம்புரைவார்கூவென்றகாரிகையொருபாற்காண
வினம்பொலிகணங்கள்சூழவெழிற்சிதவிடைமேற்றோன்றித்
தனம்பொலிநாட்டியானைதன்முகநோக்கிச்சொல்வார். (௧௨)

சிதகரிநின்பாலுற்றதீவினையாவுந்தீர்த்தோம்
இதமுறநினகூர்ங்கோட்டாலிடந்தவித்தடநின்பேரான்
†முதமுறவிளங்கவென்றுமூவுலகினிலுள்ளோரு
மிதனிடைமூழ்கின்வேண்டுமவற்றையுமவர்க்களிப்போம். (௧௩)

வேறு.

இனையபொய்கையைநினைந்திடிற்புகன்றிடிலிறைஞ்சிற்
றனைசகழற்புனையிந்திரனாகியேகளிப்பார்
வினையிரண்டையும்விட்டிநல்வீட்டினைவிரும்பித்
தனையுணர்ந்துமேயிருப்பர்நந்தாளினைகருதி. (௧௪)

போற்றமுன்னடப்புனற்றிரைமீதினிர்புரளும்
காற்றணைந்திடிற்பறவைகண்மிருகங்கள்கருத்துத்
தோற்றுமானிடர்புல்கொடிதுலங்குபாதவமு
மேற்றிகழ்ந்திடுநந்திருக்கைலையின்மேவும். (௧௫)

கருமமேநிறைந்திடுமயிராவதத்தடத்தைக்
கருதியேவலமன்புடன்காலினுற்செய்யிற்

*மாந்திரம்—ஆகமம்.
†முதம்—இன்பம்.

பெருகிடுந்திரிபுவனத்தைவலஞ்செய்தபேறு
மரியசெல்வமுஞானமுமவர்க்களித்திடுவோம். (கசு)

இனையகற்றடந்தெரிசிக்கிற்பாவமுமிடரும்
வினைகளானவுங்கவலையுமகன்றமையச்செல்வந்
தனையுமேவுவர்தண்சுடர்க்கயிலையும்பெறுவர்
புனையும்வெற்றியும்புகழுநல்லருளுமெய்துவரால். (கஎ)

இந்நகற்றிருத்தீர்த்தத்தைவெண்ணரியன்புடனே
வந்தொர்வைகல்புக்காடினோர்வான்மதிச்சடையுங்
கந்தரம்புரைகந்தரமும்முகமைந்து
முந்துமோர்மழவிடையுமேபெறுவரீதுண்மை. (கஅ)

வேறு.

செப்புமயிராவதப்பேர்த்தீர்த்தந்தன்னைத் திகழ்கரத்தாற்சி ரந்தெளித்தோர் செல்வராவார், இப்புனலின் மூழ்கினர் நற்சுதரைப்பெற்றேயெழில்பரவுமகபதிபோலென்றும் வாழ்வார், ரொப்பரியகரையிலனுவளவுசெம்பொனுவந்து மறையவர்க்கீந்தோரும் பராவார், கைப்பதுமந்தனின்மாடமமிழ்ந்தாரீரக்கருதியாசமித் தவர்தாய்கருச்சேராரே. (ககூ)

வேறு.

இரவிமதிகலந்திடுநாட்பூரணையாரப்பிறப்போடிலங்குமாசி
விரவுமகஞ்சிவநிசிதைமாதத்தின்பிறப்புடனேவிருச்சிகத்திற்
பரிதிதினமிந்துதினமார்கழியிலாதிரைநாட்பரிந்துமூழ்கிப்
பரவிநியமம்புரியினயுதபரிமேதபலன்பலிக்குந்தானே. (உ0)

கதிரிரண்டிலரவணையுங்கிரகணகாலந்தன்னிற்கருதிமூழ்கி
விதிமுறைபஞ்சாக்கரத்தைச்செபிக்கிலொன்றுகோடியதாய்மே
ன்மையெய்து, மதிகவினையொடுபஞ்சபாதகத்தாறகன்றிடுவரரு
ள்பெற்றோங்கும், கதியடைவரிவர்பெருமையிவ்வளவென்றெவ
ராலுங்கணிக்கொணாதால். (உக)

தருமவடிவாமயிராவததீர்த்தத்தடங்கரையிற்றயங்கவென்றும், பருமலைக்கற்செங்கலினாற்படிவருத்துச்சுற்றிய மண்டபமும் பாங்காய், நிருமிதஞ்செய்தோர்புவியிலினைவுற்றபொருளெல்லா நிரம்பப்பெற்றுத், திருவினராய் வாழ்ந்துபவக் கடனீந்திச் சிவலோகஞ்சேர்குவாரே. (உஉ)



வேறு.

அருணவுதயந்தனிலயிராவததீர்த்தத்திலாடிப்பின்
கருணைநூலின்படிநியமங்கருதிமுடித்தேதவில்வமணம்
பரவும்பூவினமைப்பூசைபரிந்துபுரிந்தேதமடியார்க்
கினியபோனகமீவோரிருக்குமுலகெம்முலகம். (உங)

புவனமொருமூன்றிலும்விளங்கிப்பொருந்துதீர்த்தம்புகுந்தாடித்
தவமேசெய்வார்பலனிலுமித்தண்ணார்புனலோர்நாண்மூழ்கி
னவமேயநந்கோடிபலமளிக்குமுண்மையீதாகும்
பவமேயகற்றுமித்தீர்த்தப்பண்பினுங்கேள்வெண்கரிநீ. (உச)

இலங்கியோங்குமித்தடத்தினெழிலார்தீரத்தந்தனக்குத்
துலங்குமாடையிருதியந்தாய் ¶ வரிதாம்பூலமொடு
நலங்கொள்சுரபிமுதலெலாவயுநல்கியவர்சூழ்ந்திறைஞ்சிடுவோர்
பலங்கடமையிவ்வளவென்றேயனந்தனுமும்பகர்வரிதால். (உரு)

வேறு.

நிலைமைபெறுஞ்சீரயிராவததீர்த்தநீராடிநீங்கப்பொன்னி
யலைபுரளும்புனற்படிந்துசாயாவனேசர்பதமன்பாற்போற்றித்
தலைமைபெறுசங்கமதீர்த்தந்தோய்ந்து‡சிதவனமுக்குளத்தின்மூ
ழ்கி, யிலகிபத்தின்றடம்படிந்திந்திரவிலிங்கங்காணமுத்தியீவோ
ங்கண்டாய். (உசு)

வேறு.

என்றுபல்வரங்களீந்தேயிந்திரவிலிங்கந்தன்னிற்
பொன்றிகழ்கொன்றைவேணிப்புண்ணியன்புகுந்தபின்னர்
நின்றுறுவெள்ளையானைநாரிபாகன்றாளேத்திக்
குன்றுநகரிந்தவானோர்கோவின்பாற்குறுகிற்றன்றே. (உஎ)

வேறு.

மன்னும்வெண்கரிதீர்த்தத்தின்வளமெலாமுரைத்தா
மின்னும்வாசவனியற்றிடு § சிறப்பியம்பென்றே
பன்னுமாமறைமுனிவரர்தொழுதடிபணியப்
பொன்னின்வார்சடைமாமுடிச்சூதனும்புகல்வான். (உஅ)

முற்றிற்று.

¶ வரி—கிளி. ‡ சிதவனம்—திருவெண்காடு. § சிறப்பு—திருவிழா.

## சருக்கசங்கிரகம்.

வெள்ளையானையானது, சாயாவனேசுரர் திருவடிகளை வணங்கி நின்று, சுவாமி! நீர் எழுந்தருளியிருக்கின்ற இவ்விமானத்தை யசைத்தகழ்த்த பாதகம் அடியேனுக்கெவ்வகையாற்றீருமென்று, பயங்கொண்டு வருந்தும்போது, ஆகாயத்தினின்றும் ஓர் திருவாக்குத்தோன்றி, வெள்ளையானையே! இவ்விமானத்தைச்சுற்றிலும் உன்மருப்புகளாற்றோண்டப்பட்டு விளங்கும் பள்ளத்திற்றென்கீழ்பாலாகப் பாதாளத்திலிருக்கின்ற கங்கை இப்பொழுதுவரும். நீ அப்புனித கங்கையிலே ஸ்நானஞ்செய்து, சாயாவனேஸ்வரரைப் பூசித்தால் இப்பொழுதே பாவந்நீங்குமென்றுசொல்ல, அம்மொழியைக்கேட்ட வெள்ளையானை அந்நடாகத்தைநோக்குதலும் கங்கைபாதாளத்தினின்றும் வந்துநிறைந்தது. வெள்ளையானை அத்தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து சாயாவனேஸ்வரரைப்பூசித்து வலம்புரிந்து நமஸ்கரித்துத்துதிக்கும்போது சாயாவனேஸ்வரர் இடபவாகனத்தின்மீதெழுந்தருளிவந்து, ஐராவதமே! உன்பாவத்தை நீக்கினோம். இத்தீர்த்தம் உன்பெயரால் "ஐராவததீர்த்தமென்று" விளங்கச்செய்தோம். இத்தீர்த்தத்தை நினைத்தோரும் புகழ்ந்தோரும் வணங்கினோரும் இந்திரனுப் போகங்களை யனுபவித்துப், பின் மோக்ஷத்தைப்பெறுவர். இத்தீர்த்தத்தில் அன்புடன் ஒருதினம் ஸ்நானஞ்செய்தவர் நம் சாரூபத்தைப் பெறுவர். இத்தீர்த்தத்தில் அமாவாசையிலும் பௌர்ணமியிலும் மாசிமகத்திலும் சிவராத்திரியிலும் தைமாதப்பிறப்பிலும் கார்த்திகைமாதத்து ஞாயிற்றுக்கிழமையிலும் திங்கட்கிழமையிலும் மார்கழித்திருவாதிரையிலும் ஸ்நானஞ்செய்து பிராமணர்களுக்கு வஸ்திரம் பொன் அரிசிமுதலிய தானங்கள் கொடுத்து வணங்குவோரடையும்பலன் இவ்வளவென்று ஆயிரநாவையுடைய ஆதிசேடனாலுஞ் சொல்லமுடியாது.

இத்தீர்த்தத்திற்கு மலைக்கல்லினாலுஞ் செங்கல்லினாலும் படியுஞ் சுற்றுமண்டபமுஞ் செய்தவர்புவியில் நினைந்தபொருளெல்லாம் நிரம்பப்பெற்றுவாழ்ந்து, பிறவிக்கடலை நீந்திச்சிவலோகத்தையடைவார்.



இத்தீர்த்தத்திலே மூழ்கிப் பின்காவிரியில் நீராடி, இந்திரலிங்கத்தைவணங்கி, பின் சங்கமுகதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து, திருவெண்காட்டு முக்குளத்திற் படிந்து, சுவேதவனநாதரைப்பணிந்து மீண்டுவந்து ஐராவததீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, இந்திரலிங்கத்தைத் தரிசித்தவர்க்குப் பேரின்பத்தைக்கொடுப்போம் என்று சொல்லியருளி இந்திரலிங்கத்திற் புகுந்தருளினர்.

## திருவிழாச்சருக்கம்.

தெள்ளியவெள்ளிக்கிரிநிகர்கோயிற்செய்விக்க
வுள்ளிமனத்தரியன்பொடுநூல்களுணர்ந்தோனு
மெள்ளலின்மயனைவிளித்தொருபொற்றளியெம்மிறையாம்
வள்ளறிருச்சாய்க்காடர்க்கழகொடுவனையென்றான். (க)

அம்மகவான்மொழிகம்முறமேவுமயனன்போடுஞ்
செம்மணிமரகதவயிரியம்பொளிசேர்முத்தம்
பைம்பொனராமணிகதிர்வச்சிரமுன்பலகொண்டே
யெழுமெனுமளவினியற்றினனற்றளியெழிலாக. (௨)

பொங்குமருத்தத்திருமண்டபமும்புனைகோலத்
துங்கமகாமண்டபமுமைந்நிலயஞ்சுடர்வீசும்
மங்கையர்தங்கிடம்புரிமண்டபமயிலோனு
மைங்கரவள்ளலுமேவுறுதளியுமமைத்தேபின். (௩)

வண்டார்கொன்றைச்சடைநடராசர்வாழ்மன்றம்
பண்டருணான்முப்பொருடெளிவித்தபரன்கோட்டந்
தண்டாமரையாள்சின்கரம்வடுகன்றன்கோயில்
சண்டேசுரனுறைபொற்றளியுந்தான்செய்தான். (௪)

இன்னனபல்பலசினகரம்வேள்வியெழிற்சாலை
மன்னியபாகசாலையுடன்பலிவண்பீடம்
பன்னகனன்மணிபாற்றிருமாளிகைபண்பாக
வன்னமுறும்பொன்வயிரங்கொடுதிருமதில்செய்தான். (௫)

உத்தமமேனடையளவுமுயர்ந்திடவுடுவேர்தஞ்
சித்திரபானுவுநாடோறும்விலகிச்சென்றேகப்

பத்தியின்மேன்மேலுலகினர்கள்பெலிக்தேத்தச்
சித்திரகோபுரமேருவைநிகரச்செய்தானால். (௬)

வேறு.

இனையநற்றிருப்பணிகளேயியற்றியேயிமையோர்
புனைவனுங்கெழில்வீதியும்பொற்புறவகுத்தே
பனிநெடுங்கதிர்தவழ்ந்திடுமாளிகைபலவும்
வனையுமாமணித்தெற்றியும்வளம்பெறச்சமைத்து. (௭)

மகரதோரணவருக்கமும்வானுலாங்கொடியும்
பகருமாமணிப்புரிசையும்பற்பலவியற்றி
மகபதிக்குறைசெய்தனன்மகட்டிதானு
நிகரிலிப்பணிகண்டுளமகிழ்ந்தனனேர்ந்து. (௮)

வேறு.

கருவுடைக்கடவுள்கோமான்சங்கரன்முகத்திற்றோன்றும்
பொருவில்சீராதிசைவப்பூசுரர்தம்மைக்கொண்டு
பெருகுறுமன்பாலாறுகாலமும்பிறங்குபூசை
திருவளர்சாய்க்காடர்க்குச்சிவாகமப்படிசெய்வித்தான். (௯)

மாசிலாச்சாய்க்காட்டீசர்மலரடிபணிந்துதெய்வத்
தேசிகற்றொழுதுவேறோர்சிவலிங்கமூர்த்திபெற்றுப்
பூசனைநிறையார்வத்தாற்புரிந்துகொண்டென்றுங்குன்றாத்
தேசுறுகனகநாட்டிற்சென்றுவாழ்ந்திருந்தான்வேந்தன். (௧௦)

வேறு.

பொன்னியோங்குசாயாவனந்தன்னிலேபொருந்தி
மன்னிவாழ்ந்திடுமானிடர்வானவராவார்
துன்னுபாதவங்கற்பகதருவெனத்துலங்கும்
பன்னிடும்புகழ்ப்பசுவெலாந்தேனுவாய்ப்பயிலும். (௧௧)

தகைமையோங்குசாயாவனத்தலத்திலுக்கிணையாப்
புகலவேறொருதலமிலையுண்மையிப்புரமே
புகரில்புத்தியுமுத்தியும்பொற்புறவளிக்கும்
நிகமமுண்மையீதாமெனப்புகன்றிடுநெடிது. (௧௨)

வளம்புனைந்தசாயாவனந்தன்னிலேவயங்குங்
குளங்களோடைகள்கூபங்களும்பராற்குயிற்றி



விளங்குபொய்கைகள்விரைகமழ்பொன்னிவாவிகளின்
உளங்களிந்திடுமன்புடன்மூழ்கியேயோங்கும். (௧௩)

ஞானவேதியர்க்கிருநிதிமுதலியநயந்து
தானஞ்செய்பவர்சார்குவரீசர்சாரூபம்
யானலோர்டைநந்தனவனமமைப்பவர்பரனுக்
கானதொண்டுசெய்பவர்சிவலோகத்தினமர்வார். (௧௪)

புண்ணியங்களோருருவமாய்ப்பொருந்துசாய்க்காட்டி
னண்ணினோர்தில்வாழ்பவர்தமக்கனநயந்தோர்
எண்ணருஞ்சிலைசெங்கலாற்றிருப்பணியிசைத்தோர்
வண்ணமார்கயிலாயமாமலையினில்வாழ்வார். (௧௫)

வேறு.

மகபதியிறைவர்சொல்லியருளியவாய்மையெண்ணி
யகமகிழ்ந்தருள்வெண்காட்டெற்றவிர்மதிருடிவார்க்குத்
தகைமைசேர்மாசிதன்னிற்றுவில்சீர்விழாநடாத்தி
நிகரில்சீர்ப்பொன்னிசூழுநெடும்புகார்ச்சரீய்க்காடுற்றான்.

உற்றிடும்வானவேந்தனுழுவலன்பொடுசாய்க்காடர்
பொற்றிருத்தாள்பணிந்தப்புனிதர்க்குத்திருநாட்செய்யக்
கற்றமாமுனிவர்யார்க்குங்கருதுவானவர்க்கும்பூவி
லுற்றிடுமன்னர்கட்குமுழையராலுணர்த்தினானால். (௧௭)

காமனைப்பயந்தோன்பூமான்றன்னொடுங்களித்துவந்தான்
மாமறைவானோன்வாணிமாதொடுமகிழ்ந்துவந்தான்
தூமதிபரிதியங்கிசூழ்ந்தனர்வந்துகொன்றைத்
தாமமார்வேணிச்சாயாவனத்தர்தந்திருநாட்காண. (௧௮)

தேவர்கண்முனிவரானோர்சித்தர்கின்னரரியக்கர்
தாவில்சீர்நாகர்வந்தார்தராதலவேந்தர்வந்தார்
காவிலுக்கரசன்கண்டுகளித்தனன்கடவுளோர்க
ளாவணநிறையுஞ்சாயாவனநகரலங்கரிப்பார். (௧௯)

ஆரணமுழங்கும்வீதியனைத்தினுமுவகைபொங்க
வாரணப்பிடரினேற்றிமணிமுரசறைவித்தார்கள்
தோரணம்புனைவித்தெங்குந்துவசமுநிறைத்தார்பொன்னாற்
பூரணகும்பம்வைத்தார்புனைமணிமாடந்தோறும். (௨௦)

வாழையுங்கரும்புமோங்கிவளர்பூங்கமுகுநட்டார்
கீழல்சேர்மணியுமுத்துநெடுஞ்சவர்முகலத்திழைத்தார்
சூழுறு தோரணந்தோறுந்தலங்காரதனம்பதித்தார்
தாழையின்கனிகடுக்கிச்சமைத்தனர்மறுகுதோறும். (௨௧)

மணிமுடிவானோர்மன்னன்மருங்கருமிமயமாதின்
கணவர்முன்புகன்றசைவாகமவிதிப்படியீண்மாதத்
தணிபெறுபூர்வபக்கச்சட்டியிலறுமீனொளி
லிணையில்சாய்க்காடர்க்கேற்றுக்கொடியினையேற்றினனே. ()

கோலமாராடகத்தாற்குயின்றபாலிகைநிரைத்துச்
சீலமார்யாகசாலைத்திசைக்கவைச்செழுந்தீயோம்பி
மூலமந்திரத்தான்மிக்கசேபம்பலமுனிவர்செய்தார்
ஆலமார்கண்டன்றொண்டாரகபுவெனத்துதித்தார். (௨௩)

வானவர்முனிவர்சூழவன்மைசேர்வீதிதோறுங்
கானதுந்துமிமுழங்கக்கன்னியர்கவரிவீசத்
தேனிறைமலரின்மாரிபொழிந்திடத்தேவியோடும்
பூவிறைவிமானமேறிப்புனிதனார்பவனிபோந்தார். (௨௪)

சுருண்டபூங்குழல்மின்னார்கடியாற்கீதம்பாடப்
புரண்டிடுதரங்கவாழிபோன்முரசொலிகள்போர்ப்ப
விரண்டெனும்விழாவிற்சோமமண்டலத்தினிதினேறித்
திரண்டெற்றொண்டர்சூழத்திருநகர்வலம்வந்தாரே. (௨௫)

வருமதிநிகரவேவெண்சத்திரவகைநிழற்றப்
பெருமைசேராலவட்டம்பற்பலபிறங்கிச்சூழ
முருகலர்தொடையணிந்துமூன்றுநாட்கதிர்கால்செம்பொற்
பரிதிமண்டலத்தினேறிப்பரமனார்பவனிபோந்தார். (௨௬)

மாதவர்மாந்தர்வானோர்மற்றுளோர்நெருங்கிச்சூழக்
கீதபல்லியமுழங்கக்கிளரொளியெயிறதுக்கும்
பூதவாகனத்தினேறிப்பொற்கொடியுமையாளோடுஞ்
சோதிநன்னாலாநாளிற்றொன்னகர்வலம்வந்தாரே. (௨௭)

கற்றைவார்சடையெம்மண்ணல்கருதுமெய்யன்பரல்லா
முற்றிடுமுழுவலன்பாற்கண்டுபோற்றிடவுவந்தே



வெற்றிமால்விடைமீதேறிவிண்ணவர்குழாங்கள்சூழ்
மற்றையைந்தாம்விழாவின்வளநகர்வலம்வந்தாரே. (௨௮)

மத்தமுடைப்புழைக்கைமின்னிவயங்குபொன்னோடைநெற்றிக்
கத்தமிகுகுஞ்சரத்திலேறியேககனவாணர்
துதிபுரிந்திறைஞ்சவாறுந்திருநாளிற்றலங்குபாதி
மதிநுதலுமையாண்மைந்தர்தம்மொடும்பவனிவந்தார். (௨௯)

சிந்தையின்மகிழ்ச்சிகூர்ந்துசெழுங்கதிர்மணியாற்பொன்னா
லிந்திரனமைத்தளித்தவெழின்மணிவிமானத்தேறிச்
சுந்தரக்கோதையோடுஞ்சுதரொடுமேழாநாளிற்
கந்தமார்மலர்புனைந்துகடிநகர்சூழ்ந்தாரன்றே. (௩0)

அட்டமாசித்திபெற்றவருந்தவரமரர்போற்ற
எட்டெனுந்திருவிழாவிலிராவணனிடந்தெடுத்த
கட்டழகானவெள்ளிக்கயிலைவாகனத்திலேறி
மட்டுறுவிரைசேர்கொன்றைமாலையார்பவனிவந்தார். (௩௧)

மாமேருசிகரச்செய்தவச்சிரத்திருத்தேரேறி
நாமாதுகேள்வனுதிசாரணன்முனிவர்போற்றப்
பூமாரிவிண்ணோர்சிந்தப்புகழுமைமைந்தரோடுங்
காமாரியொன்பதாநாட்கவினுறப்பவனிபோந்தார். (௩௨)

கற்றைவார்சடையார்தேரிலேறியேகவினார்வீதி
யுற்றுலாக்கொள்ளும்வேலையுடன்காலினாற்சூழ்ந்தேகும்
பற்றுளாரோரடிக்கோர்பரிமகஞ்செய்தபேற்றைப்
பெற்றிவோர்கள்பின்னர்ச்சிவகதிபெறுகுவாரால். (௩௩)

தேற்றினன்பொற்றேர்ப்பின்னர்நியமமாய்ச்செல்கின்றோர்க்குக்
காற்றணைந்திடுசாந்தாற்றிகவிகைசெம்பொன்னளித்தோர்
நாற்றெருத்தனிலுந்தண்ணீர்ப்பந்தர்களயர்ந்துவைத்தோர்
கூற்றினையுதைத்தான்மேவுஞ்சிவலோகங்குறுகுவாரால். ()

அன்னதற்றினத்திற்சைவரானவர்க்கன்பினோடு
நன்மைசேர்மகேசபூசைநயந்துநல்லன்பாற்செய்வோர்
பன்னுமாமறையவர்க்குப்பரிவுடனனங்கொடுப்போர்
மன்னுமூர்வெள்ளிக்குன்றின்மகிழ்ந்தினிதிருப்பர்மாதோ. ()

அவ்விரவினிற்றிருத்தேரதனினின்றிறங்கியீசர்
திவ்வியவிமானமேறித்தேவுரெய்த்திபமோங்க
வெம்விழிப்புனையாண்மைந்தர்மன்னுசண்டேசரோடுஞ்
செவ்வியமணிபுனைந்ததிருக்கோயினூடுசேர்ந்தார். (௩௬)

அற்றைநாள்விடியற்போதிலமலமாமன்றுளாடும்
புற்றரவணிநடேசப்புனிதர்பல்லியங்களார்ப்பப்
பொற்றிருக்கோயினின்றும்போந்தெழிற்சாந்துசாந்தி
நற்சடைதெரிசித்தோங்குஞ்சினகரங்கவினிறாரால். (௩௭)

பத்தெனுந்திருநாடன்னிற்பரமர்வெள்விடைமேற்போந்து
பத்தர்முன்னாறுணர்ந்தபன்னவர்பண்ணவர்களேத்த
முத்தெறிதிரையார்சங்கமுகநீர்த்தங்கொடுத்துவந்து
வித்தகத்துவசந்தன்னைவிதிமுறையிறக்கிவைத்தார். (௩௮)

மேடமாமதிமுன்னாள்னிங்கிழைவாமத்தோருக்
காடகச்சிலையிருக்கமர்ந்தமாபூசையாற்றி
நாடொறுந்திருநாடன்னைநடத்திநல்லருள்பெற்றுய்ந்தான்
கோடொன்றுடையவேழக்கொற்றவானவர்கோன்மாதோ. ()

முற்றிற்று.

---

## சருக்க சங்கிரகம்.

---

இந்திரன், தேவதச்சனைக்கொண்டு சாயாவனநாதர்க்குத்திருக்கோயில்கட்டுவித்து, ஆதிசைவர்களால் சிவாகமவிதிதவறுமல் ஆறுகாலம் பூசைசெய்வித்து, குருவாகிய வியாழபகவானிடத்து வேறோர் சிவலிங்கமூர்த்திபெற்று, ஆன்மார்த்தபூசைசெய்துகொண்டு, பொன்னுலகத்தையடைந்து வாழ்ந்திருந்தான். பின்பு இந்திரன், சிவபெருமான் சொல்லியருளிய திருவாக்கைநினைந்து, திருவெண்காட்டையடைந்து, சுவேதவனநாதர்க்கு மாசிமாதத்திற்றிருவிழாச்செய்து, அங்குநின்றும் சாயாவனத்திற்குவந்து, சாயாவனநாதர்க்குப், பங்குனிமாதத்தில் பூர்வபக்கசஷ்டியும் கார்த்திகைநக்ஷத்திரமுங் கூடிய சுபதினத்தில் இடபக்கொடியை யேற்றினான். சாயாவனநாதர், இரண்டாந்திருநாள் சோமமண்டலத்திலும், மூன்றாந்திருநாள் சூரியமண்டலத்திலும், நான்காந்திருநாள் பூதவாகனத்திலும், ஐந்தாந்திருநாள் இடபவாகனத்திலும், ஆறாந்திருநாள் யானைவாகனத்திலும், ஏழாந்திருநாள் இந்திரவிமானத்திலும், எட்டாந்திருநாள் கைலாசவாகனத்திலும், ஒன்பதாந்திருநாள் திருத்தேரிலும் எழுந்தருளிப்பவனிவந்தருளினர். ஒன்பதாந்திருநாளிராத்திரி விடியற்காலத்தில் நடேசப்பெருமான் எழுந்தருளித் திருச்சாந்துசாத்தி, தீபதெரிசனஞ்செய்துகொண்டு திருக்கோயிற்கெழுந்தருளினர். பத்தாந்திருநாள் சாயாவனநாதர் இடபவாகனத்தின்மீதெழுந்தருளிச் சங்கமுகதீர்த்தங்கொடுத்துவந்து கொடியிறக்கிவைத்தார். பின், சித்திரைமாதமுதலாக இந்திரன் சாயாவனநாதர்க்கு மகாபூசை செய்வித்து, நித்தியோற்சவம் நடத்தித்திருவருள்பெற்றுவாழ்ந்தான்.

---



## இயற்பகையார்சருக்கம்.

---

போதமாமுனிவர்சூதன்பொன்னடிவணங்கிப்போற்றி
வேதமாமுதல்வற்கன்பின்மிகுமியற்பகையார்காதை
நீதமாமுனிவசொல்வாயெனமிகுநேயத்தோடு
சூதமாமுனிவன்சாயாவனத்தர்தாடொழுதுசொல்வான். (௧)

மணிகொழித்தெறியும்வேலைவன்புகார்நகரின்மேய
வணிகர்தங்குலத்துவந்தார்மாதொருபாகர்க்கன்ப
ரணியெதுவிரும்பினுமில்லையெனுதளித்துநாளும்
பணியணிவேணிச்சாயாவனத்தர்தாள்பணியுநீரார். (௨)

பூமலர்க்கணைவேளன்னார்பொருளினூற்றனதனைப்பார்
நாமநீருலகம்போற்றுமியற்பகைநாமம்பூண்டார்
காமருவடமீன்போற்றுங்கற்பினுக்கரசியென்னு
மாமனைக்கிழத்தியோடுமனையறம்புரிந்துவாழ்நாள். (௩)

தண்மதிமிலைந்தசாய்க்காட்டீசர்தம்மடியார்தம்மை
யுண்மகிழ்வின்பிற்போற்றிவேண்டுவவுதவுநாய்கர்
வண்மைசேர்சீர்த்தியின்றுமன்னுமேளார்நனிகண்டுய்யப்
பெண்மகிழ்பாகர்தம்பிரானொருவடிவங்கொள்வார். (௪)

வெண்டுகில்கொய்தகச்சம்விளங்கப்பின்செருகிப்பொன்செய்
யொண்டுகிலுத்தரியந்தோள்கிடந்துலாவப்போக்கிக்
கொண்டுபொன்குயிற்றுங்கண்டிகண்டத்துக்குலாவப்பூட்டி
வெண்டிருநீறுசாந்தமட்டிவேதிரங்கைதாங்கி. (௫)

வெண்மயினிலருவிமானமார்பில்வெண்ணூலிலங்க
விரையவிழ்மலர்செய்மாலைகுஞ்சிமேல்விளங்கவேத
வுரையெனக்கிதம்பாடித்தூர்த்தவேதியராயோதங்
கரைமலிபுகாரினுய்கர்கடிமறுகணுகிச்சார்ந்தார். (௬)

கண்ணுதலடியார்தம்மைக்கனவிலுமறமலன்றே
ரெண்ணியதொண்டியற்றுமியற்பகைவணிகர்கோமான்
நண்ணுபொன்மணிமாடத்திற்றயகன்புகுதலோடுந்
துண்ணெனவெழுந்துபோற்றித்தொழுதுபொற்பீடத்தேற்றி ()

நிலமகழ்ந்தேனமாகிநெடியவன்றருவிக்காணு
நலமிகுதிருத்தாண்மீதுநறுமலர்கொடுபூசித்து
வலமதுபுரிந்தியான்செய்தமாதவவடிவாயீண்டென்
குலமுழுதளிவந்தகோலமேபோற்றியென்று. (௮)

நின்றிடுவணிகர்தம்மைநேயமாய்வஞ்சவேட
மொன்றியபெருமானுக்கியொருப்படுமன்பினோடு
குன்றவிற்கோமானன்பர்வேண்டுவகொடுத்திரென்னு
நன்றுறுபுகழ்கேட்டும்பாலொன்றுநயந்துவந்தோம், (௯)

கொடுக்கலாமென்னில்யாமுங்கூறலாமென்றேவெள்ளி
யடுக்கலானுறைத்தகாலையடிபணிந்தடிகாண்முந்தே
ருடுக்கலாம்புவியிலெற்கென்றுளவெலாமன்பர்வேண்டிற்
றடுக்கலாமென்பதன்றோவேண்டுவதருவலென்றார். (௧௦)

எனவிவரியம்புமாற்றங்கேட்டியற்பகைநங்காதன்
மனைவியைத்தருகவென்றுகேட்டலுமனமகிழ்ந்தே
முனமுறுதவந்தாலென்பாலுளபொருண்முன்னிக்கேட்டீர்
பனவரேயென்போல்யாரேபாக்கியம்பெற்றாரென்று (௧௧)

கதுமெனவிரைந்துள்புக்குக்கற்பினுக்கியென்னு
மதுமலர்க்குழலினாரைமணக்குலமட்டினைத்... பே



விதுமுடிப்பெருமானன்பர்க்குனையின்றுவிருப்பினீந்தே
னிதுவுணர்குதியெனுமுன்கலங்கிப்பின்றெளிந்தின்சாய... (௧௨)

அன்பர்நீர்பணித்ததிங்கின்றதுவெனிலதற்குமாறு
வென்பணியுளதோவென்றிசைந்தியற்பகையார்தாளின்
முன்பணிந்தெழாமுன்றொண்டர்முடிகவிழ்த்தெதிர்வணங்க
மின்பெயர்ந்தெனப்போய்வஞ்சவேதியர்ப்பணிந்துநின்றார். (௧௩)

மனைவியையளித்ததொண்டர்வந்துவேதியரைத்தாழ்
வெனையினம்பணித்ததென்னோவென்றிடவஞ்சவேடர்
கனைகடற்புகாருங்கேளுங்கடந்தெனைவிடுத்தியின்று
...முற்றாளையென்னவணிகரும்வணங்கிச்சொல்வார். (௧௪)

வேறு.

முன்னையானேசெய்குதலொன்றேமுறையாமீ
தென்னையென்னேதாழ்ந்தேன்வாளாவிதுகாறிங்
கின்னேவந்தேனென்றேவேறொன்றிடமெய்தி
யொன்றாஞ்சங்கச்சினையிட்டுடைவாளேந்தி, (௧௫)

வந்தடிபோற்றிக்கைதவமுறுதவமறையோரை
முந்தெழின்மாதொடும்போகவிடுத்தமுனைப்போரிற்
சிந்துவல்யாவர்தடுக்கினுமென்றுசினத்தோடுந்
...ந்தினிதோடுனையாகநடந்தனர்தனிவீரர். (௧௬)

ம... றவோரும்வள்ளறன்கேளிருள்வந்தொன்றாய்ப்
...ழதையோர்பார்ப்பான்பின்செலவிட்டுப்பின்போகு
மீ...முன்செய்தாராரியற்பகைதானிதுசெய்தான்
றி...வன்மட்டோநங்குடிக்கென்றுநந்திதன்றோ. (௧௭)

பி...னவன்செய்தானெனிலிந்தப்பெருஞால
...த்திடுமோபழிமீட்குதுமென்றொளிர்வாள்வில்லும்
மு...தலைவேலுங்கொண்டுபுரண்டெழுமுந்நீரின்
...தெழிவெட்டென்றார்ப்புறம்யாருங்குறுகுற்றார். (௧௮)

ம...முதலாந்தேவர்க்கும்வழித்துணையாம்வள்ள
...துணையாக்கொண்டிடுமடியார்பின்றொழுதெய்தந்
...ன்றாளிகஞ்சத்திருவனையாரொடுசிலபேசி
...ன்றுதிசெய்யப்போமதுகண்டுவளைத்திட்டார். (௧௯)

அ

ஏடாயர்ப்பாவென்செய்தாயெங்குலமாதை
காடார்கரணக்கொண்டேடந்தாய்கவையில்லாட்
பிடார்வேதகுலத்தாய்நீயிப்பிழைசெய்தாற்
கோடார்யாரெங்கெய்துநியென்றெதிர்கூறேற்ருர். (௨0)

பித்தாட்பட்டவியற்பகைதன்னைப்பெரிதாய்நீ
எத்தியிலட்கொண்டேகுவையேல்யாமேதாக்கு
வைத்துயிர்வாழ்வதுமானதவிடுத்திடமாட்டாயே
வித்தரையின்முடிவின்றென்றுரெம்பெருமானுர். (௨௧)

அச்சுற்றூர்போன்மறைவடிவாக்தம்மருகெய்துவ
கச்சப்பூண்முலையாண்முகநோக்கக்கண்டெய்த்திர்
* கிச்சுட்பட்டிடுதுய்யியற்பகைகேளோதர்
கச்சக்கூர்வாள்கொண்டடுமென்றூர்நவையில்லார்.  (௨௨)

ன்றிடுமாற்றங்கேளாமுன்னடியேநன்றூர்
கொன்றிடுவேன்றடைசெய்குநதைத்துயர்கொள்ளாதி
நின்றிடுமென்றவணிறையுறவோர்தமைநேருற்றே
செலன்றிடுமின்றுயிர்போமுனமென்றூர்சிவநேசர். (௨௩)

ஈதவர்சொல்லக்கேட்டவர்யாவருமென்சொன்னுய்
பாதகமென்றூய்பழியோராயோர்பனவற்குன்
மாதையளித்தாய்வழிவிடவந்தாய்மதியில்லாய்
பேதையரிற்பேதாய்பெருமிதமொழிபேசுற்ருய். (௨௪)

அந்தணனுக்கீயிரந்தனனேற்பொருளாதந்து
செந்தழன்முன்னேர்மாதைமணந்திடச்செய்யாதே
யுந்தனருங்குலமனையையிரந்தார்க்குதவென்றே
யெந்தநன்மாமறைகூறியதாகுமியம்பென்றூர். (௨௫)

இப்படியொக்கலியம்புதல்கேட்டியற்பகையாரும்
மைப்புனைகண்டத்தானடியாரெம்பதன்மன்னி
யெப்பொழுதேதுவிரும்பினுமீகுவனிலையென்றே
செப்புவதின்றவர்தன்மையுணர்ந்திலிர்சிறிதென்றூர். (௨௬)

பூதிபுனைந்தானுமகவின்றுகண்மணிபூண்டு
மாதிலைபாகத்திறையடியேனுமம்மதியோர்கள்

* இச்சு—வெருப்பு.



சாதியினற்சிவமாகுவர்செய்தொழிருனெல்லா
மாதியரன்செய்திடுதொழிலாமென்றறிவீரால். (௨௭)

சிவனடியார்பணிசெய்குவதேநற்றவமாகுஞ்
சிவனடியார்பூசனையேசிவபூசனையாகுஞ்
சிவனடியாருறையுமிடமேசிவனுலகாகுஞ்
சிவனடியார்க்கொன்றீகுவதேசெவ்வறமாகும். (௨௮)

ஈசற்கோர்பிழைசெய்யினுமுய்குவரீசன்றன்
னேசர்க்கோர்பிழைசெய்பவருய்கிலர்நெடுவானிற்
றேசுற்றிடுகதிர்முன்னிற்பினுமத்திகழ்தேசால்
வீசுற்றிடுகதிர்படுமணனின்றிடன்மேவாதால். (௨௯)

அடியார்க்கெளியன்மதியணிவேணியனென்றுற்
படிமீதவர்புகழ்சொல்குநர்யாரிப்பரிசாலென்
கொடிநேரிடையாடனைபவர்வேண்டக்கொடுத்தேனுங்
கடுதலிலாவதுமோன்றிலைசெல்குதிர்கடிதென்றூர். (௩0)

பன்செய்வாளிவனொம்முரைகேளானென்றொக்கல்
மின்செய்யொல்கிடையாண்முகநோக்குபுமிகநொந்து
பொன்செய்நங்குலமுழுவதுநீள்பழிபூணுதே
வன்செய்கைப்பனவன்பின்போகேல்வருகென்றூர். (௩௧)

வேறு.

ஓக்கலிதுரைப்பக்கேட்டேயொண்டொடியுணர்வால்யார்க்கு
மிக்கநீருரைத்தலிதோவிளங்கிழையவர்கள்போற்றத்
தக்கதோர்தெய்வங்கொண்கர்தலையலாவுண்டோவென்றூர்
சொற்கடவாமையன்றோகற்பெனச்சொல்வர்நூயோர். (௩௨)

கணவர்சொற்பேணியன்றேவொருத்திநல்லாகின்றுள்
கணவர்சொற்பேணியன்றேகாலனையொருத்திவென்றுள்
கணவர்சொற்பேணியன்றேகதிரெழாதொருத்திசெய்தாள்
கணவர்சொற்பேணியன்றேவொருத்திகொங்கணரைவென்றுள்.

கடிமனைவிளக்கலென்பசரியைதன்கணவருண்றும்
படியுறச்செவைகளூட்டல்கிரியைதன்பதியோடொன்றி
யொடிவிலாவின்பந்துய்த்தல்யோகமாமுறையினிற்ற
அடியிடைமீர்கட்கெல்லாஞானமென்றுரைப்பர்தொல்லோர்.

ஆதலிற்கொண்டவர்வார்த்தைபருமறையெனக்கொண்டிந்த
மாதவர்பின்யான்செல்வேன்மனையிடைத்திரும்பிலாரேன்
போதலேதகுதிவீரென்றனார்புகழ்வசிட்டன்
காதல்சேர்பன்னியன்னகற்பினுக்கரசியானார். (௩௫)

இன்னணமிருவர்கூறும்வார்த்தைகேட்டுத்தேர்யாரு
நன்னயமொழியாலொன்றுநடைபெருநென்றும்வேலை
யன்னமென்னடையாரோடெம்பிரானகலக்கெட்டோர்
சொன்னசொன்மறுத்துச்செல்லத்துணிதிரோவேனமறுத்தார்.

மறுத்தனுகண்டுவெள்ளல்வயப்புலிப்போத்தெனப்போய்க்
கறுத்துடைவாளையேந்திக்கால்பலவகையான்மாறித்
துறுத்துநாத்தலைகள்வீழத்துடிதுடித்துடல்கள்சாய
வறுத்தெறிந்தறைகூயஞ்சாதமர்விளையாட்டயர்ந்தார். (௩௭)

விழுந்தனதலைகளெங்கும்விரிந்தனகுடர்களெங்கு
மெழுந்தனகுருதியெங்குமெரிந்தனகண்களெங்கு
மழுந்தினகுருதியாற்றினவ்வயவக்கலன்களெங்கு
முழுந்தருண்முன்னரீதுபுரிந்தவருவமையில்லார். (௩௮)

எண்ணிலராகிவந்தோதெதிர்ந்துளார்தம்மையெல்லாம்
விண்ணுளாராகப்போக்கித்திரிந்திடும்வீரர்வேதப்
பண்ணுளார்தம்மைநோக்கிப்பயப்படாதடியேன்முன்னர்
நண்ணுமிக்கான்கடந்துவிடுக்குவனடக்கவென்றார். (௩௯)

மாதுடன்வஞ்சவேடமருவினர்முன்போகப்பின்
ஏதமிலடியார்செல்லவிறைவர்சாய்க்காட்டின்மாடே
போதலுந்தொண்டர்தம்மைப்புகழ்ந்துநீர்மீள்வீரென்ன
வாதரத்தொடுதாழ்ந்தேத்தியரசர்பின்னவருமீண்டார். (௪௦)

செயற்கருஞ்செய்கைசெய்ததிருத்தொண்டர்மீண்டுபோகப்
புயற்கருங்களத்தானோக்கிப்புண்ணியவணிகச்செல்வ
னயர்ப்பிலான்பாக்கிகில்லானகல்கின்றானென்றேயன்பார்
இயற்பகையாரைமீளவெம்பிரானழைக்கலுற்றார். (௪௧)

புண்ணியவடிவவோலம்போகலைவருதியோல
மெண்ணுதற்கரியசெய்தவியற்பகைமுனிவவோலம்



கண்ணுதற்கன்பவோலமென்றனன்கரியோன்கஞ்சப்
பண்ணவன்மறையோலிட்டுப்பற்றுதற்கரியனானோன். (௪௨)

அவ்வுரைசெவியிற்கேளாவடியனேன்வந்தேன்வந்தேன்
றெவ்வர்களுளரேலின்னுஞ்சேணிடையேற்றுகின்றேன்
இவ்வுரையுண்மையென்றேயியற்பகையெய்தும்போதி
னவ்விடைமறைந்தெம்பெம்மானும்பரிற்கோலங்கொள்வான். ()

வந்தவர்மறையோர்தம்மைக்கண்டிலர்மாதைக்கண்டார்
செந்துகிற்குன்றிற்றுவுஞ்செழும்பசுங்கொடியையேய்ப்பக்
கொந்தணிகுழற்கூவென்றமோதையாருடனேசாய்க்காட்
டெந்தையார்விடைமேல்வானிலெழுந்தருள்கோலங்கண்டார். ()

கண்டனர்தொழுதுவீழ்ந்தாரெழுந்தனர்களித்தவன்புட்
கொண்டனர்சிரமேற்செங்கைகுவித்தனர்கோலமாய
முண்டகத்தவிசோன்மாயோன்சதமகன்முதலாவுள்ள
வண்டர்கட்கரியோனாருமமலனைத்துதிக்கலுற்றார். (௪௫)

தேவர்கட்கேவேபோற்றிதிரிபுரதகனாபோற்றி
கூவெனுங்கோதையாளோர்கூறுடைப்பரமபோற்றி
வவெனக்கூறியென்னைவழித்தொண்டுகொண்டாய்போற்றி
நாவிலாப்புகழ்சேர்சாய்க்காட்டீசனேபோற்றிபோற்றி. (௪௬)

என்னிவர்போற்றுமெல்லையெம்பிரானடியார்தம்மை
நினையன்றியாவரிந்தநீணிலத்திதுபுரிந்தார்
மனமிகமகிழ்ந்தோமுன்றன்மனைக்குலமடந்தையோடு
நனைமலர்த்தாரோய்நீயுநம்முடன்போதுகென்று. (௪௭

அன்பொருவடிவமாயவடியவர்தமக்குந்தெய்வ
மன்பெருங்கற்புவாய்ந்தமனைவியார்தமக்குந்தக்க
தன்றிருவருளாவீடுதனிப்பெரும்பேறளித்துப்
பொன்புனைதிருச்சாய்க்காட்டின்புனிதமார்தளியுட்புக்கார். (௪௮

விண்ணவர்பூவின்மாரிபொழிந்திடவேதமார்ப்பப்
பண்ணவர்முனிவர்போற்றப்பண்புறுசிவலோகத்தி
னுண்ணிறையன்பர்கும்பிட்டுடனுறைபெருமைபெற்றார்
எண்ணருஞ்சுற்றத்தோருமாவானிடையின்பம்பெற்றார். (௪௯

முற்றிற்று.

## சருக்கசங்கிரகம்.

காவிரிப்பூம்பட்டினத்திலே வைசியர் குலத்திலே இயற்பகைநாயனார் திருவவதாரஞ்செய்து, சாயாவனேசுரருடைய திருவடிகளில் இடையறாத அன்புடையவராய், பரம்பரையிற்றேடிய பெருஞ்செல்வத்தினராய், சிவனடியார்கள் வேண்டுவனவற்றைப் பேரன்போடுங் கொடுப்பவராய்க் கற்பினுக்கரசியாரென்னும் மனைவியாரோடு இல்லறத்தைவழுவாது நடத்திவருநாளில், சாயாவனேசுரர், நம்மடியார் விரும்பிய பொருள்களை இயற்பகைநாயனார் இல்லையென்னாமல் கொடுக்குந் திருத்தொண்டை உலகத்திலுள்ளோர் யாவருங்கண்டுய்யுமாறு திருவுளத்தெண்ணி, வெள்ளியவஸ்திரத்தை யணிந்த இடையையுடையவராய், பீதாம்பரமணிந்த திருத்தோளினராய், உருத்திராக்கமாலையணிந்த கண்டத்தினராய், திருநீறுங் கலவைச்சாந்துஞ் சாத்தியதிருமேனியராய், பொற்பிரம்புதாங்கிய வலத்திருக்கரத்தினராய், வெண்புரிநூலணிந்த மார்பினராய், மணமாலையணிந்த குஞ்சியராய்த் தூர்த்தப்பிராமணத்திருமேனிகொண்டு இயற்பகைநாயனாருடைய "நவரத்னங்களால் அலங்கரிக்கப்பெற்றுத் தேசோமயமாய் விளங்குகின்ற" திருமாளிகையினிடத்தே யெழுந்தருளுதலும், இயற்பகைநாயனார் எதிர்கொண்டழைத்துத் தொழுது பொற்பீடத்தேற்றி நறுமலர்கொண்டு திருவடிகளைப்பூசித்துப் பிரதக்ஷிண நமஸ்காரஞ்செய்து, அடியேன் முன்செய்த தவவடிவாய் எங்குலமுழுதும் ஆண்டருள இங்கெழுந்தருளியவரே யென்று துதித்து நின்றமாத்திரத்தில், வஞ்சவேடங்கொண்டருளிய பெருமான் அவரை நோக்கி இயற்பகையே! நீசிவபத்தர்கள் விரும்பியவற்றைக் கொடுக்கின்றாயென்னும் புகழ்கேட்டு, நாம் ஒருபொருளை விரும்பிவந்தோம் அப்பொருள் கொடுத்தற்கிசையுமாயின் யாமுங்கேட்கலாமென்றுசொல்லியருள, இயற்பகைநாயனார் வணங்கி சுவாமி அடியேன் பொருள்கள், சிவனடியார் விரும்புமிடத்துக் கொடுத்தற்குரியனவேயென்றுகூற, எம்பெருமான்கேட்டு இயற்பகையே! உன் காதல் மனைவியை விரும்பி வந்தோம்: கொடுப்பாயாகவென்று சொல்லியருளலும், நாயனார் மனமகிழ்ந்து ஐயரே! அடி-



யேன் முன்செய்த தவத்தால் என்னிடத்துள்ள பொருளையே கேட்டீர் கொடுத்தேன் என்றுகூறி, விரைவில் மனைவியாரிருக்குமிடத்திற்போய், கற்பினுக்கரசியே! உன்னை இப்பொழுது இங்கெழுந்தருளியிருக்கின்ற சிவனடியார்க்குக் கொடுத்தேன். அவருடன் செல்வாயாக, வென்று சொன்னமாத்திரத்தில், கற்பினுக்கரசியார் கலங்கிப், பின்றெளிந்து, நாயகரே! உம்முடைய திருவார்த்தைக்கெதிர்வார்த்தை யுண்டோ? அடியேன் அவ்வாறே செய்கின்றேனென்று இயற்பகையார் திருவடிகளிலே நமஸ்கரித்து எழுவதற்கு முன்னே இயற்பகையாரும், அவர் சிவனடியார்க்குரியராயினரென்று எதிரேவணங்க, கற்பினுக்கரசியார் வந்து வேதியர்பாற்சென்று வணங்கி நின்றார். அப்பொழுது நாயனார் வேதியரைவணங்கி, சுவாமி! இன்னும் யாதேனும்பணிவிடையுண்டோவென்று கேட்க, வேதியர், அன்பனே! இவ்வூரையும் உன் சுற்றத்தாரையும் கடந்து நம்மையனுப்புவாயாகவென்று சொல்லியருள, நாயனார் ஐயரே யான் முன்னமே செய்ய வேண்டியபணிவிடையை இதுவரையிலும் தாழ்த்த குற்றத்தை பொறுத்தருள்வீரென்று, யுத்தகோலங்கொண்டு வாளேந்தி வந்து, வேதியரை மனைவியாரோடும் முன்னே செல்லவிடுத்து, தாம் பின்செல்லும்போது கற்பினுக்கரசியாருடைய சுற்றத்தாரும், நாயனார் சுற்றத்தாரும் ஒருங்குகூடி, இக்காரியம் உலகத்தில் யார்செய்தார் இயற்பகைதான்செய்தான். இதனாலுண்டாகும்பழியவன்மட்டோ? நம்குடிக்கு ஏஞ்ஞான்றுந் தீராப்பழியாகுமே இப்பழியை மீட்போமென்று யுத்தகோலத்தராய் வந்து, கற்பினுக்கரசியாரோடு செல்கின்ற எம்பெருமானாகிய வஞ்சவேதியரை வளைந்துகொண்டு, ஏ அடாபார்ப்பானே! என்னகாரியஞ்செய்தாய் நம் குலப்பெண்ணை நாட்டார் காணும்படிக்கொண்டு நடக்கின்றாய் வேதகுலத்துப் பிறந்த நீயே இப்பிழைசெய்தால் உலகத்தில் நெறிதப்பாதவர்யார்? போகாதேயென்று தடுத்தார்கள். அச்சமயத்தில் வேதியர் அஞ்சுவார்போல் கற்பினுக்கரசியாரை நோக்கியருள, கற்பினுக்கரசியார் சுவாமி! பயப்படாதீர் இவர்களை இயற்பகையார் வாளுக்கிரையாக்குவாரென்றுகூற, இவ்வார்த்தையைக்கேட்பதற்கு முன்னே இயற்பகையார் சுவாமி பயப்படாதீர் தடைசெய்கின்றவர்களைக்

சொல்கின்றேனென்றுகூறி, தடைசெய்யும் சுற்றத்தாரை யெதிர்ந்து, நீங்கள் தடைசெய்யாமல் உயிர்பிழைத்துப்போங்களென்றார். சுற்றத்தார்கள், இயற்பகையே! என்னசொன்னாய்? பழிவருமென்றெண்ணாமல் இப்பிராமணர்க்கு மனைவியைக் கொடுத்தாய் வழிவிடவும்வந்தாய் அறிவில்லாதவனே மனைவியையழைத்துக்கொண்டு திரும்புவாயாகவென்றார்கள். அவ்வார்த்தையைக்கேட்ட இயற்பகையார், சுற்றத்தார்களே நீங்கள் சிவனடியார்பெருமையைச் சிறிதும் அறியமாட்டீர்கள், யான் சிவனடியார்விரும்பும் பொருள்களை இல்லையென்னாமற் கொடுத்தலையே விரதமாகவுடையேன் இப்பொழுதும் இச்சிவனடியார் விரும்பிக்கேட்டதனால் என் மனைவியைக் கொடுத்தேன். நீங்கள் தடைசெய்வதாற்பயனில்லை, தடுப்பீர்களாயின் என்வாளுக்கிரையாவீர் என்றார். சுற்றத்தார் இவன் நம்முடைய வார்த்தையைக்கேளான் நாமென்செய்வோமென்று வருந்திப் பின்பு கற்பினுக்கரசியாரை நோக்கி [illegible] பெரும்பழியடையா வண்ணம் வேதியன்பின் [illegible]ல்லாமல் திரும்புவாயாகவென்றார்கள். அதனைக்கேட்ட கற்பினுக்கரசியார் அறிவான்மிக்க உறவினரே! நீர் இவ்வாறுகூறுதல்தகுமோ பெண்களுக்குக் கணவரே தெய்வம் அவர் சொற்படி நடப்பதே கற்பு. கணவர் சொல்லைக்கேட்டு ஒருத்தி கல்லாகநின்றாள், கணவர் சொல்லைக் கேட்டு ஒருத்தி யமனை வென்றாள். கணவர் சொல்லைக் கேட்டு ஒருத்தி சூரியனுதிக்காமற்செய்தாள். கணவர் சொல்லைக்கேட்டு ஒருத்தி கொங்கணரைவென்றாள். அன்றியும், பெண்களுக்கு வீட்டை விளக்குதல் சரியையென்றும், கணவர்க்குப் போசனம் ஊட்டுதல் கிரியையென்றும், கணவரோடு இன்பமனுபவித்தல் யோகமென்றும், அவர்சொற்படி நடத்தல் ஞானமென்றும் பெரியோர் சொல்வார்கள். ஆதலால் யான் என் கணவர் திருவார்த்தையின்படி இவ்வேதியர்பின் செல்வேன். இனித்திரும்பி மனையிடத்து வாரேன் நீர் திரும்பிப்போதலே தகுதி யென்றார். இவ்வாறு இருவர் வார்த்தையையும் கேட்ட சுற்றத்தார் இனி நயவார்த்தையால் ஒன்றும் நடவாது; தடைசெய்து கற்பினுக்கரசியாரை மீள்விப்பதே தகுதியென்றார். அச்சமயத்தில் வேதியர் கற்பினுக்கரசியாரோடும் நடந்தருளினார். சுற்றத்தார் வேதியனே!



தாங்கள் சொல்லைமறுத்துப்போகாதேயென்று, ஆயுதபாணியாய்த் தடுத்தார்கள். அதுகண்ட நாயனார் கோபங்கொண்டு வாளையேந்திச்சென்று சாரிமாறிப்போர் செய்து சுற்றத்தாருடைய தலைகளையறுத்து வீழ்த்திக்கொன்றுவிட்டு வேதியரை வணங்கி, சுவாமி! அடியேனுக்கு முன்னரே நடந்தருள்வீர். இக்காட்டைக்கடந்து விடுப்பேன் என்றார். வேதியர் கற்பினுக்கரசியாரோடு முன்னும் நாயனார் பின்னுமாக நடக்கும்போது, திருச்சாய்க்காட்டிற்குச்சமீபத்திற்செல்லும் சமயத்தில், வேதியர் நாயனாரைப்பார்த்து, திரும்பிச்செல்வாயென்றார். நாயனார் வணங்கித் துதித்து மீண்டு சிலதூரஞ் செல்லும்போது, எம்பெருமான் இயற்பகையாரை மீளவும் அழைக்கத்தொடங்கி, "புண்ணியவடிவனே ஓலம், போகாமல்வருவாய் ஓலம்; பிறரால் என்னுதற்கும் அரிய செய்கையைச் செய்த இயற்பகை முனிவனே ஓலம், சிவபிரார்க்கன்பனே ஓலம்" என்றார். நாயனார் அத்திருவார்த்தையைக் கேட்டு, சுவாமி! அடியேன் வந்தேன் வந்தேன், இன்னும் பகைவர்களுண்டாயின் கொல்கின்றேன் என்று சொல்லிக்கொண்டு மிகுந்த விரைவோடு சென்றபோது, எம்பெருமான் வந்தவேதியவேடமறைந்து, ஆகாயத்திற் றிருக்கோலங்கொள்வாராயினார். வந்த நாயனார் மனைவியாரை மாத்திரம் கண்டு, தம்பால்யாசித்த வேதியரைக்காணாமல் வருந்தும்போது (சாயாவனேஸ்வரர் கூவென்றகோதையம்மையாரோடும் இடபவாகனத்தின்மேல் ஆகாயத்திலெழுந்தருளிய திருக்கோலத்தைக்) கண்டு, பேரன்புடனே நமஸ்கரித்துத்தோத்திரஞ்செய்தார். சாயாவனேசுவரர் இயற்பகைநாயனாரை நோக்கி, "அன்பனே! நீ செய்த திருத்தொண்டிற்கு மிகமகிழ்ந்தோம், நீ உன் மனைவியோடும் நம்முலகத்திற்கு வருவாயாக" வென்று சொல்லித்திருச்சாய்க்காட்டுத்திருக்கோயிலுட்புகுந்தருளினார். இயற்பகைநாயனார் தம்மனைவியாரோடுஞ்சிவலோகத்தையடைந்து சிவபெருமானைக்கும்பிட்டு உடனுறையும் பெரும்பேற்றைப்பெற்றார். அவர் சுற்றத்தாரும் வானுலகவின்பத்தைப்பெற்றார்கள்.

முற்றிற்று.

## சங்கமுகதீர்த்தச்சருக்கம்.

திருந்ரேங்கிடும் புனித சங்கமுகதீர்த்தத்தின் சிறப்பியாவு நிருந்ரேங்கிடுஞ்செய்யரின்வேணி நிமலிருபாதப்போதி, ஞருந் றேங்கிடுமனத்துமுனிவீர்காள் யானெடுத்துகவிலற்பர்ந்ரே, வே ருந்ரேங்கிடு மந்தத்தீர்த்தத்தினியல்பெர் சிறிதிசைப்பக்கேண் மின். (க)

தானமொடுதவமென்னு மிரண்டினையுந் தாலியுள்ளோர் புரி ந்துவாழ, வானளவுஞ்சையமெனும்வரைநின்றேவிதெய்றம்வரு காவேரி, மானதி நல்வண்மைபெறும்புகார்நகரிலரசருளான் மரு விக்கும்பா, லானகடற்புகுதமிடஞ் சங்கமுகதீர்த்தமென வழை வர்மாதோ. (உ)

வேறு.

ஆதியிலொருகற்பத்திலசலையிலுயிர்கள்யாவும்
பாதகமென்னுந்தியபங்கமீதழுந்திமேவப்
பூதலமாறுபாரப்பொருதுபுண்டரிகப்பேர்தின்
மீதுறுவான்முன்கூற விதியுமாதவன்பாலுற்றே. (ங)

உரைத்தனன்கேட்டமாயோனாழிநேராழியோங்கும்
வரைக்கயிலாயமுற்றேவள்ளலர்ருள்சேர்செம்பொன்
மரைத்திருத்தாளைமுன்னிவருட்மாயிரோன்பாற்ற
நரைத்திருவிடைமேற்றேன் நிரம்பனும்காட்சிநல்கி. (ச)

கத்துறுகரத்தாய்நீவண்டும்வரமெவனில்நாபென்ன
வித்தகபுவியோர்பாவம்விலகுமாறருள்வாயென்றே
யத்திருமாயோன்வேண்டவாழிவாய்வருநந்நவண்ட
வுத்தமக்கருணையாளனுந்திபூத்தோனைநோக்கி. (ரு)

வேதவாகமபுராணமிருதியேமுதலயாவும்
பூதரவடிவமாகப்பொருந்தியுள்ளனவவற்றைச்
சீதமார்புனலதாகச்செய்குதுமந்நீர்மூழ்கின்
மேதினியுயிர்கள்பாவம்விடுத்தருங்கதியிற்சேரும். (சு)

எனமொழிந்தவற்றையெல்லாமினியநீர்வடிவமாக
வுனதுமங்கலைகள்யாவுமோங்குபுண்ணியநீர்கள்



கனமிகுந்திரைகள்வீசிக்கணக்கில்யோசனையெல்லைத்தாய்
முனுமுறுந்தன்மைகண்டுமூவர்க்குமுதலாமூர்த்தி. (எ)

ருத்குமவடிவமாகப்புரிந்தனன்றாயவந்நீர்
பூக்கமழ்குழன்மாதாகிப்பொற்புறுகயிலாயத்திங்
காக்குமால்வைகுந்தந்துங்கடிகமழ்கமலப்போதின்
மேக்குறுசதுர்முகத்தோன்மேவுசத்தியலோகத்தும். (அ)

சஞ்சரித்திடுதினத்தோர்தினத்தினிற்றமிழுணர்ந்தோன்
மஞ்சுசூழ்பொதியமேவுமாதவத்தோர்தங்கோமான்
கஞ்சனதார்புக்கந்தக்காரிகைதன்னைக்கண்டு
விஞ்சியகாதல்கூர்ந்துவேட்குமாறுள்ளஞ்செய்தான். (கூ)

ஆங்கதுகண்டு வேதாவத்தமிழ்முனியைநோக்கி
யீங்கிவடனைக்கடத்திலெடுத்தேகென்றியம்பவந்தப்
பூங்குழற்றனைக்கும்பத்திற்பொற்புறக்கொண்டுமீண்டே
யோங்குறுசையவெற்பிலும்பரக்கடத்தைவைத்தான். (க0)

அம்மலைவயின்முற்காலத்தருந்தவமுனிவர்பல்லோர்
செம்மைசேர்பலாசமொன்றிற்சேர்ந்திருந்தனர்களாகக்
கம்மவான்வேள்விக்காக்கநிந்தனன்கருநியத்தை
யம்முனிவரர்சினந்தேயரிக்கரசொழிகவென்றார். (கக)

சாபமேயிடுதல்கண்டுதண்புன்மருதக்கோமான்
கோபமிக்கையர்காணீர்குற்றமொன்றிலாதவென்னைப்
பாபமிக்குளன்போலெண்ணிப்பகர்ந்தனிர்சாபநீவிர்
தாபமிக்கிவ்வரைக்கட்டண்டமாய்மூழ்த்திரென்றான். (கஉ)

என்றவிந்திரனைநோக்கியிருந்தவமுனிவர்யாரும்
நின்றசீர்க்கோவேநாறுநெடியமாயாசஞ்செய்தோ
மின்றெமக்கிசைத்தசாபமெம்மைவிட்டென்றுநீங்கு
நன்றுரைசெய்வாயென்னநாகர்கோனவிலலுற்றான். (கங)

மலயமாதவன்கையேந்தும்வளமிகுகரகநீரா
லலகிலேனினிர்நஞ்சாபமகன்றிடுமெனநுமன்னோர்
பலகிளைவடிவங்கொண்டப்பருப்பதவரைப்பினிழ்
யிலகுறநின்றார்முன்னமியம்புமக்கடத்தின்மீது. (கச)

கருமைசேர்காகமேறக்கண்டவன்கடத்தில்வந்த
திருமுனிபோயப்பெயவன்றுசெப்பனுமியமாற்றம்
பெருநதிதனக்கென்றெண்ணிப்பின்றுகனருளினாலே
யொருபெருங்கடத்தினின்றுமொல்லையிற்பரந்தோடிற்றால். (௧௫)

அந்தநற்புனிதநீர்பாய்ந்திடுதலுமமரர்கோமான்
றந்தநோர்சாபநீங்கித்தவத்திருமுனிவர்யாரும்
முந்தைப்பவடிவமெய்திமுழங்குமப்புனிதநீர்தோய்ந்
தந்தமிலிறைவற்பூசித்தரும்பெறல்வீடுசேர்ந்தார். (௧௬)

வேகமிக்கநீர்செல்லுமவ்வேலையிற்கவேரனோங்கிற்
காகவோர்மகளாய்க்காவேரிப்பெயரடைந்தபின்னர்
மாகருமவிரும்புசெல்வமருவுறும்பூம்புகாரினூடு
சாகரமென்னுங்கேள்வன்றனைமணம்புணர்ந்ததன்றே. (௧௭)

வேறு.

அனையகாவிரிபுகுமலைகடற்றுறை
தனைமிசைந்தோர்களுந்தமதுள்ளத்திடை
நினைவனயாவையுமெய்தியீனிரு
வினையையும்வென்றரனடியின்மேவுவார். (௧௮)

வேறு.

பொன்னிநீர்கடலிற்செல்லும்புனிதசங்கமத்தின்மூழ்கி
நன்னிதியாடைபொற்பூமிபசாயரிசியாதி
பன்னிருபனவர்க்கீந்தோர்பன்னிருபிறப்பிலீட்டித்
துன்னியபவங்கள்போக்கித்தூயவானடைவர்மாதோ. (௧௯)

அப்புனற்றீரந்தன்னிலயன்முகத்துதித்தோரான
வொப்பருமறையோர்க்கேமமுதவினர்விதியூர்சேர்வர்
முப்புரம்பொடித்தநாதன்முகத்தினுற்பவித்தசைவ
விப்பிரர்க்கேமமீந்தோர்வெள்ளிமால்வரையிற்சேர்வர். (௨௦)

அந்தநற்புனிதநீர்த்தடத்தடித்தென்புலத்தினோர்க்குச்
சிந்தையிலன்புகூர்ந்துதிலதருப்பணஞ்செய்வாரேல்
எந்தையார்சாய்க்காட்டீசரெள்ளொன்றுக்கயுதமாண்டாய்
நந்திடாதவரைவானநாட்டினையாளவைப்பார். (௨௧)



அப்புனற்புனிததீர்த்தவிர்மதியணிந்தோன்றன்னை
யொப்புயர்வில்லாதானையொண்மலர்கொடுபூசித்தோர்
அப்புறம்வேணிபாலச்சுடர்விழிதோணான்கிந்தா
ரப்புறுவேணிபெற்றேயரன்றிருக்கயிலைசார்வார். (௨௨)

அகத்தியமுனிசினங்கொண்டாழியுண்டுவலென்றேமுச்
சகத்தினர்தொழுமாயூரஞ்சார்ந்தருள்வள்ளலாமைம்
முகத்தினற்றொழுதுமந்தமுதல்வனம்முனிவனுக்கு
மிகத்திருவுறுமுலோபாமுத்திரையென்னுமின்னை. (௨௨)

கதிதருமிடபதீர்த்தக்கரையினிலினியநாளிற்
றுதிபெறுமுனிவர்சூழத்தூயசெந்தழன்முன்னாக
விதிவழிமணஞ்செய்வித்தான்விளங்குமம்மன்றலாங்கப்
பதிவயினிந்நாள்காறும்பாங்குறநடக்குமன்றே. (௨௪)

வேறு.

காவிரிதாதையாங்கவேரமாதவன்
பாவிரிபுகழ்ப்புகார்ப்பட்டினத்துற்றிக்
காவிரியங்கடிகலக்குஞ்சாகரப்
பூவிரிபுனற்குடப்பூரணைக்கவோ. (௨௫)

விதியினின்மூழ்கிவெண்ணீறுகண்டிகை
யிதமுறவேபுனைந்தைந்தெழுத்தெணி
நிதிமுதலாய்ப்பலவிமலவேதியர்
மதிமிகக்களித்திடமகிழ்வினீந்துபின். (௨௬)

வேறு.

அற்புதத்திருச்சாய்க்காட்டினன்னைலப்பூசித்தேத்தி
யுற்பவந்துடைப்பானுள்ளத்தன்னியாரணமுணர்ந்தோன்
றற்பெயரதனாலோர்நந்தனவனமியற்றியாங்குப்
பற்பலவ்வைகிநோற்றுப்பரமர்தாணிழலிற்புக்கான். (௨௭)

வேறு.

உலகமெலாந்தொழுதேத்தும்பரிதிவானவன்மருவுமோங்கு
தற்பி, னிலகுமெழின்மனைசாயையவன்மேனிவெம்மைபொறுதி
னையுங்காலை, யலகில்புகழ்நாரதப்பேர்முனிவரக்கண்டவனெடிம

தறையவன்றன், நிலகறுதற்சாயைசீ திருவார்பூம்புகார்நகர்
தன்னிற்சென்றே. (உஅ)

பொன்னிமாநதிபாய்ந்துபுணரியையும்புனித முறப்புரிந்திட்
டோங்கி, மன்னிவளர்சங்கமுகப்புனன்மூழ்கிச் சாய்க்காட்டின்
வரதர்பொற்று, ஞான்னிமிகுமார்வந்தாற்பணிந்தேத்தி னுன்கணே
வன்மேனிவெம்மை, மின்னனையாய்நீசகிக்குந்திறன்மந்தாகினிச்
சென்னிவிமலரீவார். (உகூ)

ஐயமுறுதேசென்னப் புகன்றகலவானருளை முன்னிச்சா
யை, யெய்புமதனைங்கணையாற்றன்கொழுநனிலைத்திடாதிருக்கு
மாறு, செய்யவெணிந்தன்போலோர் மாதினைத் தன்மாயத்தாற்
சிருட்டித்தாங்கே, வெய்யவன்பால்விடுத்தவன்றன்றியாமற்பு
கார்நகரைமேவினளால். (௩0)

மேவியருட்சங்கமத்திலாடிவோன்புகும்வேலைவின்வாழ்வெ
ய்யோன், தேவிமிகச்செயுமாயைத்திறமுமருந்தவமும்யாழ்முனி
யாற்றேர்ந்தென், ஞெயினையாள்புரியுந்தவழ்யானுமியற்றவவெ
ன்றகந்தினுன்னிக், காவிரிசங்கமம்புக்கிம் மெனுவளவிற் காதலி
யைக்கண்டான்மன்னோ. (௩க)

கண்டனகண்மணியே நிற்பிரிந்திரே னின்போலக் கடனஞ்சு
ண்ட, கண்டனடியுளங்கொண்டிப்புண்ணியநீர்மூழ்கிச்சாய்க்கா
ட்டின்மேவு, மண்டர்பிரான்றனையிந்துசேகரனைப் பூசித்திங்கரு
ள்பெற்றுய்வே, னொண்டொடியேயெனப்புகலச் சாயைகேட்
டுவகைமேனுவகைகொண்டாள் (௩உ)

பின்புதினகரதேவும்பிணைநிகர்கட்சாயையு மப்பெருந்தீர்த்
தத் தன்பொடுநூல்விதிப்படியேயாடி வெண்ணீ றணிந்தக்கவா
ரம்பூண்டே, யின்புபுனைசாய்க்காட்டினிறைவர்தமைப்பூசைபுரிந்
திறைஞ்சிநின்று, மின்பொலிசெவ்வேணியனே விண்ணவர்க்கிர
ஞ்சுண்டவிமலாவென்று. (௩௩)

போற்றிநின்றூரவர்முன்னம்பெருப்பமையன் புதல்வியிடம்
பொருந்தித்தோன்ற, வேற்றினிடத்தெம் பெருமா னெழுந்தரு
ளிநினக்கென்வேண்டுமென்ன, நீற்றினவெண்மனை சாயைபி



னைத்தவரமருள்புரிவைநிமலாவென்றே, சாற்றினனென்றாழிறை
வன்சாயையையின்னென்னமேயவன்சாற்றுமென்றான். (௩௪)

மெய்யவனே மெய்யவர்க்கு வெண்மதியோ டரவணியும்மே
லோய்வெய்யோன், செய்யதிருமேனிவெப்புமுள்ளனகூர்மோடு
சீறுஞ்செய்யுந்தன்ப, மய்யசகிபாதடியா ளயருகின்றேனெனச்
சாயையறையவையன், வெய்யவன்றன்மேனியுறும்வெம்மையை
நியாற்றுதிறன்மின்னேயீந்தோம். (௩௫)

காசிபனுற்கிரவன்றன் மெய்திருத்திக்கொடுத்திடுவோம்
கவலாயென்றே, யாசிறவக்காசிபனை யழைத்தலரியங்கத்தைச்சா
ணைசேர்த்துத், தேகபெறமுண்டுகளைக்கடைந்துதேய்த்தன்பான்
மெய்திருத்தென்றேதி, மாசகலிந்திரவி லிங்கத்துட்புகுந்தான்
மடந்தையிடப்பாகன்மாதோ. (௩௬)

ஆரணமாகமமறிந்த காசிபன்றான்சவிதாவையார்க்குமூல,
காரணனுஞ்சிவபெருமான்மொழிப்படியோர்கவினுறுசாணையின்
கட்சேர்த்திச், சிரணவக்கடைந்துகூர்புரிந்திடுமுண்டுகள்யாவுந்தீ
ர்த்துச்செம்பொன், வாரணவுந்தனச்சாயாதேவிமிகமனமகிழச்
செய்தான்மன்னோ. (௩எ)

தேசமருமேனிபெறுசெம்பரிதிவானவனுஞ்செழுநீரோங்கி,
வாசமுறவளர்கமலமலர்போலு மலர்வதனச்சாயைமாதும், நே
சமுடன் றண்புகார்ச்சாய்க்காட்டினின்மலனை யிறைஞ்சிப்போ
ற்றி, யாசகலுந்தம்பதிபுக்கிந்திரநாதனைச் சிந்திதருளால்வாழ்ந்
தார். (௩அ)

வேறு.

மின்னுபொன்னுலகாண்டிடும்வேந்தனைப்பயந்த
மன்னுமாதவத்ததிதிதங்குரவனைவணங்கிப்
பொன்னெனும்பெயர்ப்புண்ணியாவுல்கெலாம்பூத்த
கன்னிபூகனைக்கருதியான்றவஞ்செயநினைந்தேன். (௩கூ)

அனையநோன்புதானடிகணீரெதன்பொருட்டென்னில்
வினையில்வெய்யராந்திதிமகார்விளைத்திடும்வெம்போர்
முனையிலென்மகார்முடிந்திடாதிருந்திடக்கொன்றை
புனையுமீறிலாப்புங்கவன்பால்வரம்பெறற்காம். (௪0)

மதியனிந்திடும்வரதனார்க்கம்புவிமீதிற்
பதிகள்ப்பலவலற்றாருந்தவமிகப்பயக்கும்
பதியையான்றவமியற்றிடப்பணித்தருளென்ன
வதிதிகாசியின்மேம்படுந்தலங்களாறவற்றுள் (௪௧)

மிக்கதாயதுவிளங்குசாய்க்காடதின்மேவித்
தக்கதாவிரிசங்கமம்படிந்துசாய்க்காட்டின்
முக்கணாயகற்பணிந்தருந்தவமுயன்றிடினுன்
மக்கள்யாவருமடைந்திடாவரந்தீவன்வழங்கும். (௪௨)

என்றுதேசிகனியம்பவுமவனடியிறைஞ்சி
யன்றுநற்சுருதிங்கருமயிர்மதியல்ரோ
ஒன்றுமேல்லையுமுறுதலிறும்பர்காடொருவிக்
குன்றவில்லிசாய்க்காடெனுங்குலப்பதிகுறுகி. (௪௩)

பொன்னிநீர்புகும்புனிதமார்சங்கமம்படிந்தே
மின்னுவேணியர்விமலர்சாய்க்காடர்தாள்வணங்கி
யன்னமென்னடையன்னையைக்கூவென்றகோதை
தன்னையும்பணிந்திந்திரன்றாய்தவம்புரிந்தாள். (௪௪)

வேறு.

புங்கவர்ப்பயந்தவன்னைபுனிதையவாமங்கொண்ட
வங்கணன்றிருத்தாளுன்னியாற்றகாட்டவஞ்செய்காலை
மங்கையோர்பாகன்வெள்ளைமால்விடைமீதுதோன்றி
நங்கைநின்னெண்ணமென்னாகவிலெனநவிலுற்றான். (௪௫)

எங்கணாயகனேபோற்றியீறிலாமுதலேபோற்றி
சங்கராபோற்றிநாயேன்றனையர்தானவர்தம்போரின்
மங்கலுற்றிறவாவண்ணம்வரமருள்கவென்னத்
திங்கள்சேர்வேணித்தேவன்றிருவுளம்புரிந்துசெப்பும் (௪௬)

மகரமாதத்தில்லாதிவாரத்திலமையமாவாசைநாள்
புகல்விதிபாதந்தம்மின்முதலொடுவிற்றதாக
தகுமருணோதயஞ்சார்சாற்றருத்தோதயத்தின்
நிகரிலாவிந்துவாரநேர்மகோதயத்தின்மன்றே. (௪௭)

மேடமாமதிமுன்னாகவிளங்குறுதிங்களோறும்
பிடுறுமடையிலல்லோன்பிறந்குபூரணைநன்னாளிற்

சூடுறுகிரகணத்திற்குலவுசங்கமதீர்த்தத்தின்
றூடுவார்செய்தபாவமனைத்துந்தீர்ந்துய்வரன்றே. (௪௮)

சாற்றுநாட்களிற்றையாடிதமிலமைமறுடமீன்பௌவம்
தோற்றமீருநயஞ்சோமசூரியகிரகணங்க
ளேற்றமுற்றிடுநாளாருமிவற்றிற்றையவம்மயின்மூழ்கி
நோற்பனேப்பகனூன்றகோன்மையாமிகமகிழ்ந்தோம். (௪௯)

யாதவற்கொடுபால்வேலைமதித்ததனிடத்திற்றோன்றுஞ்
சீதமாரமுதையுன்றன்செல்வர்கட்கேயீவிப்போம்
கோதிலவ்வமுதமுண்டுன்குமரர்களமரராவார்
மாதுநீகயலலென்றேமாயவன்றன்னைநோக்கி. (௫௦)

தீரமார்கடல்கடைந்துகிளர்ந்தெழுமமுதந்தன்னை
வீரமார்மனவானோர்க்கேயீவையென்றருள்புரிந்தே
யாரலர்கொன்றைமத்தமரவுவெண்டலைகரந்தை
நீரவிர்மதிபஞ்சுருபின்மலன்மறைந்தானன்றே. (௫௧)

அந்தரவதிதிசாய்க்காட்டீசர்தாடொழுதுபோற்றி
யந்தரநாட்டிற்சென்றாளண்ணலாரருளினாலே
சுந்தரமிறத்தன்றீம்பாற்கடல்கடைந்தமுதம்பெற்று
வந்தரன்முன்சாய்க்காட்டிலதிதிதன்மைந்தர்க்கீந்தான். (௫௨)

இந்திரனதிவானோரிறைவனதருளின்மாயோன்
றந்திடுமமுதமுண்டுசாவிலாத்தன்மைவாய்ந்தே
யந்திமேனியனைச்சாய்க்காட்டண்ணலைக்கருணைவேற்றைப்
பந்தனையறுப்பான்றன்னைப்பணிந்துவானடைந்துவாழ்ந்தார். ()

வேறு.

பொன்னனையதவமுறுநற்கிமுனிவன்பொருப்பாவய்புயல்
தூங்கிள்ளை, மின்னனையருவிப்பல்குன்மிளிர்குழல்சொன்னுண்ணி
டைசேர்விநதைமாதை, முன்னமணந்தசனியொடுமின்னலைபுங்கு
ரல்பருந்துமுதலாவுள்ள, மன்னுசிறைப்பறவையையுமருணனை
கெழுலையுமகிழ்ந்துபெற்றான். (௫௪)

மருவுறுபூங்குழற்றரளநகையரம்பைதோளருணன்மருவியி
னிபுற், றெருவையினுக்கரசராஞ்சம்பாதிசடாயுவெனுமிருவர்ப்
பெற்றான், றிருவுறுமச்சம்பாதிமேலுலகிற்சென்றதன்கட்சிறப்

மைநோக்கி, வருருவகின்டெனப்பறந்ருதினகரன்மண்டலத்தரு கின்மருவிய்காலே. (ருரு)

ஆதவன்றன்கதிர்வெம்மைக்காற்ரூறபெருஞ்சிறையற்றயர்ந் தோனுமிப், பூதலமேல்விழுக்கெங்கள்சிவபெருமான்புவ்கமலப் பொற்ருளுன்னி, மாதொருகூறுடையானேமதிபுனைசெஞ்சடை யானேவரதாவென்றே, யாதரவாற்பணிந்தேத்தமவ்வேலை யந்த ரத்தோர்வாக்குத்தோன்றி. (ருசு)

வேறு.

ஆடித்திங்களுமம்புலியோடரி
கூடுநாளுமின்ருதலிற்கோதிலா
நீடுமன்பினிலவுசம்பாதிநீ
மாடுபொன்சொரிகாவிரிமாகடல். (ருஎ)

புகுமச்சங்கமப்பூம்புனலாடியே
மகிமையோங்குசாயாவனவள்ளலை
மிகுமன்பாற்பணிந்தேத்திலுன்மெய்ச்சிறை
யுகுதரேன்றிலாதோங்கித்தழைக்குமே. (ருஅ)

இன்னதன்மைபதன்றியுமின்னுள
முன்னும்யாவையுமுற்றுறுமேயென
மன்னுமன்பின்வயங்குசம்பாதியு
மன்னதானத்தடைந்தனனன்றரோ. (ருகூ)

கழுகின்வேந்தன்கடலிடைக்காவிரி
யொழுகுமாவயினுற்றுவிதிப்படி
முழுகிச்சாயாவனத்துமுக்கண்ணனைத்
தொழுதாருந்துதிபலசொல்லுமால். (சா0)

காலகால கதிர்விழு மேகர
நீலகண்ட நிராமய நின்மல
சூலமேனுஞ் சுடர்மழுப்பாணிய
பாலலோசனபார்வதிபாகனே. (சாக)

என்றுபோற்றிடுமெல்லைவிருஞ்சிறை
துன்றிநீண்டுவளர்தரத்துன்பொரீஇ
யொன்றுமானந்தமுற்றுக்கழுகிறை
நின்றுமாதவநேர்ந்தனனேர்சிறை. (சாஉ)



அளவினுளவனுற்றுமருந்தவக்
குளமகிழ்ந்துமையோர்மருங்கேய்தரக்
குளவிலோசனன்குண்டையிவர்ந்துறப்
புளகமெய்திக்கழுகிறைபோற்றினன். (சாங)

போற்றிநின்றவெருவைப்புரவலற்
காற்றவெவ்வுலகுஞ்செலுமாண்மையோ
டேற்றமேயபல்லூழியினுயுளீந்
தேற்றினம்பதமெய்துகென்றானிறை. (சாச)

வேறு.

செம்பாதிபொன்மேனியுமைக்களித்த சிவபெருமான்றேவர் கோமா, னம்பாதி மூர்த்தியெனத் திகழிலிங்கத் திடைப்புகுந் தானவ்வுட்கெல்லாம், ம்பாதி பத்தியங்கொண்டளவில்பகல் வாழ்வரமும்பரன்பாற்பெற்ற, சம்பாதிதவஞ்செய்தலஞ்சம்பாதி வனமெனப்பேர்தழைத்ததன்றே. (சாரு)

வேறு.

மாதவன்புலிக்கால்பெற்றமாமுனிமன்னன்செய்த
கோதறுதவத்தின்வந்தோன்குழவியென்றழுமந்நாளின்
ஓதமாரலைபாலுண்டேயுமிழ்ந்தவனுலகுண்டோனை
நாதமார்மறைகளாய்ந்தேதாதன்முக்கணன்னன்றேர்ந்தோன். ()

பன்னுசைவாகமத்திற்பகர்விதிவழுவாதீசன்
பொன்னடிபூசைசெய்யும்புண்ணியனுபமன்யப்பேர்
முன்னுமாமுனிவனிந்நீர்மகிழ்ந்துதோய்ந்தருட்சாய்க்காட்டின்
முன்னவற்பணிந்துபோற்றிமுப்பகலருந்தான்பாற்றி. (சாஎ)

அண்ணலார்திருச்சாய்க்காட்டிலமர்ந்தருளமலனூர்பால்
என்னுறுமறுபான்மும்மைநாயனாரிந்நிலத்திற்
பண்ணியதிருத்தொண்டோனம்பரிசொடுமெந்தனுான்றும்
வண்ணமார்வெள்ளிக்குன்றில்வசித்திடுவரமும்பெற்றான். (சாஅ)

கண்ணனிப்புனலிற்றோய்ந்துகனிதருமன்பினாலே
யென்னுறுசாம்பன்றன்னையீன்றனனென்றாழ்மூழ்கிப்
புண்ணியநான்முன்சொற்றபுகழ்மனுவேந்தற்பெற்றான்
விண்ணவர்வேந்தன்பெற்றான்சயந்தனைவிதியின்மூழ்கி. (சாகூ)

மாயிருஞாலங்காத்தமன்னவன்முசுகுந்தப்பேர்ப்
பாயிரும்புகழான்றேய்ந்துபசமர்சாய்க்காடனார்தந்
சேயதாள்போற்றிவிண்ணிற்சென்றுவாசவற்குத்தெய்வநா
டுயவாளவுணர்ச்செற்றுத்திறலொடுவந்துவாழ்ந்தான். (௭௦)

நிலவுண்டுகில்புனைத்துநிலவியபலதேவப்பேர்ச்
சிலனிப்புனலிலாடித்திருச்சாய்க்காட்டிறைவர்த்தாழ்ந்து
சாலநாட்டவம்புரிந்துதரியலர்க்கசனியேனுங்
காலனுங்கடுக்குநாஞ்சிற்கடும்படைபெற்றான்மன்னோ. (௭௧)

குரக்கினக்கோவாம்வாலிகொழுங்கதிர்மணிநெடுங்குன்
றரக்கமார்கடலிற்பொன்னிசார்சங்கமுகத்தின்மூழ்கி
மருக்கமழ்சடையர்சாயாவனத்தர்தாளன்பிற்போற்றி
யரக்கருக்கடலேறன்னஅங்கதகுமரற்பெற்றான். (௭௨)

அப்பெரும்பேறுமன்றியாற்றல்சேர்வாலிதன்மு
னைப்பெருவலியினோடுமெதிர்த்துபோரியற்றினன்னோர்
துப்பினிற்பாதிகொள்ளுந்தகுவரம்பெற்று
வீப்பெருந்தீர்த்தமேன்மையென்னெனவிசைப்பன்யானே (௭௩)

நாயகாதிரிசெல்வேலைத்துறைவயினன்பாற்றோய்ந்து
நாயகன்திருச்சாய்க்காட்டினம்பனைப்பணிந்துமிக்க
தாயநற்கதிசேர்ந்தோரையளவிடப்புகினுசாயத்
தேயதாரகையுமாற்றுவெல்லையவாகுமன்றே. (௭௪)

என்றுமாதவஞ்செய்சூதனிபம்பவுமுனிவர்கேட்டு
நன்றெனமகிழ்ச்சிகூர்ந்துநயமுறச்சூதர்ப்போற்றிக்
குன்றாப்புகாரினெய்திக்குலவுசங்கமதீர்த்தத்தி
லொன்றுறுமன்பான்மூழ்கியுத்தமச்சாய்க்காடெய்தி. (௭௫)

இந்திரநாதன்பொற்றாளிறைஞ்சிமுன்னிறைவன்சொற்ற
தந்திரவிதியாலாதிசைவரைக்கொடுபூசித்தே
மந்திரமறையாற்போற்றிவையபீரேழுமீன்ற
சுந்தரமிகுகுவெண்மகோதைதாடொழுதுபோற்றி. (௭௬)

பற்பலவரங்கள்பெற்றுப்பல்லவனேசராதி
நற்பிரியாவிடங்காசுத்திசர்நாககாதர்
சிற்பர்முத்தியப்பர்திருமேனியுமகந்தர்
சொற்பெறுசங்கமேசர்துலங்குதாந்தோன்றீசர் (௭௭)



உற்பலகணேசர்முன்னுஞ்சலப்பிலாவெஞ்சூர்க்கொன்று
கற்பகநாடுகாத்தகந்தவேளின்னோர்கோட்ட
மற்புறப்பணிந்துபோற்றியமர்ந்தனைமிசக்காளெய்தி
யற்புதச்சாய்க்காட்டீசரடியிணைகருதிநோற்றார் (௭௮)

காசினிமிகவும்வாழி கருதுசாய்க்காடுவாழி
வாசவன்வாழியன்பர்மாமுனிக்கணங்கள்வாழி
தேசுயர்புராணம்வாழிதிகழுமாமுகில்கள்வாழி
பேசுநான்மறையும்வாழிபிறங்குநாலினத்தும்வாழி (௭௯)

சாயாவனபுராணம் முற்றுப்பெற்றது.

ஆக சருக்கம் ௧0-க்கு செய்யுள் ௭௯௨.

திருச்சிற்றம்பலம்.

உ

## சருக்கசங்கிரகம்.

ஆதியில் ஒரு கற்பத்திலே உலகிலுள்ள ஆன்மாக்கள், செய்கின்ற பாவங்களைப் போக்குதற்கு மார்க்கமில்லாதிருந்த தினால், பூமிதேவி பாரம் பொறுக்கமுடியாமல் பிரமதேவரிடத் திற்சென்று சொல்ல, பிரமதேவர் விஷ்ணுமூர்த்தியிடத்திற் சொல்ல விஷ்ணுமூர்த்தி திருக்கைலாசத்திற் சென்று, சிவபெருமானை நோக்கி ஆயிரவருடம் தவம்புரிய, சிவ பெருமான் இடபவாகனத்தின்மீதெழுந்தருளிவந்து "திருமாலே! உனக்குவேண்டும் வரம்" யாதென்ன, திருமால் சுவாமி! ஆன் மாக்கள், செய்கின்ற பாவங்களைப்போக்குதற்கு ஓர்மார்க்கம் செய்தருளவேண்டுமென்ன, சிவபெருமான், விஷ்ணுவே! வேதம் ஆகமம் புராணம் ஸ்மிருதி முதலியவெல்லாம் மலைவடிவங்கொ ண்டிருக்கின்றன. அவைகளைத் தீர்த்தவடிவமாகச் செய்கின் றோம். அத்தீர்த்தத்தில் மூழ்கினால் உயிர்களெல்லாம் பாவத் தை நீக்கிக்கதியிற்சேரும், என்று சொல்லியருளி, மலைவடிவா யிருந்த வேதமுதலியவற்றைத் தீர்த்தவடிவாய்ச் செய்தலும், அத்தீர்த்தம், எண்ணில்லாத யோசனை யகலமாய்ப் பரவி, அவை

கலை வீசிக்கொண்டு வருதலைக்கண்டு, சிவபெருமான் அதனைச் சூக்குமவடிவமாய்ச் செய்தருளினர். பின்பு அத்தீர்த்தம், ஒரு பெண்வடிவங்கொண்டு, கயிலாயத்திலும், வைகுந்தத்திலும், சத்தியலோகத்திலும் சஞ்சரித்துக்கொண்டிருக்கும்போது சத்தியலோகாதிபராகிய பிரமதேவரிடத்துச் சென்ற அகத்தியமுனிவர் அப்பெண்ணைக்கண்டு விவாகஞ் செய்துகொள்ளுதற்கு விரும்பினர். பிரமதேவர் அதனையறிந்து, அகத்தியனே! இப்பெண்ணை உன் கடத்தில் வைத்துக்கொண்டு போவாயாகவென்று சொல்ல, அவ்வாறே அகத்தியமுனிவர் அப்பெண்ணைக் கடத்தில்வைத்துக்கொண்டுவந்து சையகிரியின் உச்சியில் அந்தக்கடத்தை வைத்தார்.

சையகிரியில் முற்காலத்தில் பலமுனிவர்கள் ஒரு பலாசமரநிழலில் வசித்துக்கொண்டிருந்தார்கள். இந்திரன் யாகத்தின்பொருட்டு அந்தப் பலாசமரத்தை வெட்டுதலும், முனிவர்கள் கோபங்கொண்டு இந்திரனே! உனக்கு அரசு ஒழியக்கடவதென்று சபித்தார்கள். இந்திரனும் கோபங்கொண்டு முனிவர்களே! குற்றமில்லாத என்னைக் குற்றமுள்ளவனாக எண்ணிச்சபித்தமையால், நீங்கள் இம்மலையில் மூங்கிலாகக் கடவீர்களென்று சபித்தான். முனிவர்கள் இந்திரனை யுபசரித்து, வேந்தனே! எங்களுக்கிட்ட சாபம் நீங்கும் வழியாதென்றுகேட்க, இந்திரன் அகத்தியமுனிவர் கடத்தினின்று வருந்தீர்த்தத்தினால் உங்களுக்கிட்ட சாபம் நீங்கும் என்றான். முனிவர்கள் இந்திரன் சாபப்படி சையகிரியில் மூங்கிலாயிருந்தார்கள். அகத்தியமுனிவர் வைத்த கடத்தின்மேல் ஒருகாகம் வந்து ஏறுதலும், அகத்தியமுனிவர் அதைக்கண்டு போ போ என்றார். அவ்வார்த்தையைக் கும்பத்திலிருந்த நதியாகிய பெண் தன்னைச் சொல்லியதாக நினைத்து நீர்வடிவாய் விரைவிற் பெருகி, கும்பத்தினின்றும் புறத்தில் ஓடினாள். அந்தப் புண்ணிய தீர்த்தம் பாய்ந்தமாத்திரத்தில் முனிவர்கள் இந்திரனிட்ட சாபநீங்கிப் பழயவடிவமுற்றார்கள். பின்பு அந்நதி, வேகமாய்ச்செல்லும்போது "கவேரமுனிவருடைய தவத்தின்பொருட்டு அம்முனிவர்க்குப்" புத்திரியாய்க் காவேரியென்னும் பெயரடைந்து, பின்பு நதிவடிவாகி, காவேரிப்பூம்பட்டினத்திற் சென்று சமுத்திரத்தோடு கலந்தது. காவேரிசங்கமமாகின்ற கடற்றுறையை நினை



ந்தவர்களும், மனதில் நினைந்தவைகளையெல்லாம் பெறுவார். அந்தச் சங்கமதீர்த்தத்திலே மூழ்கி பொன், வஸ்திரம், ஆபரணம், அரிசி, காய் முதலியவற்றைப் பன்னிரண்டு பிராமணர்க்குத் தானஞ்செய்தவர், பன்னிரண்டு பிறப்பிற்செய்த பாவத்தைப் போக்குவார். அந்தத்தீர்த்தக்கரையில் வைதிகப்பிராமணர்க்குத் தானம் கொடுத்தவர் பிரமலோகத்தை யடைவார். சிவப்பிராமணர்க்குத் தானங்கொடுத்தவர் திருக்கைலாசத்தை யடைவர். பிதிர்களுக்குத் திலதருப்பணஞ் செய்யின் சாயாவனேசுரர், எள்ளொன்றுக்குப் பதினாயிரவருடம் அப்பிதிர்க்களை வானுலகத்தில் வாழ்வித்தருள்வார். சிவபூசை செய்தவர்கள் சிவவடிவம் பெறுவார்கள். அகத்தியமுனிவர் காவேரியின்மேற்கோபங்கொண்டு காவேரிகலந்த சமுத்திரத்தைக் குடித்துவிடுவேனென்று சையகிரியினின்று வரும்போது, மாயூரநாதரைப்பூசித்து வணங்கினர். மாயூரேசர் அகத்தியமுனிவர் கோபத்தையடக்கி இடபதீர்த்தக்கரையில் உலோபாமுத்திரையை மணஞ்செய்வித்தார். அகத்தியமுனிவர் உலோபாமுத்திரையோடு கூடி மகிழ்ச்சியுற்றார்.

காவேரிநதியின் பிதாவாகிய கவேரமுனிவர், மாசிமாதத்துப் பௌர்ணிமையில் காவேரிசங்கமத்தில் ஸ்நானஞ்செய்து சாயாவனேசுரரைப் பூசித்துத் துதித்து ஓர் நந்தவனம் வைத்துப் பலநாள் தவம்புரிந்து சாயாவனேசுரருடைய திருவடிநீழலையடைந்தார். கவேரமுனிவர் தவஞ்செய்த இடம் கவேரவனமெனப் பெயர்பெற்றது.

சாயாதேவியானவள் தன்னாயகனாகிய சூரியதேவனுடையவடிவத்திலுள்ள கூரியமுண்டுகளையும் வெப்பத்தையும் சகிக்கலாற்றாது வருந்தும்போது நாரதமுனிவர், சாயாதேவியை நோக்கி, காவேரிப்பூம்பட்டினத்திற் சென்று காவேரி சங்கமத்தின்மூழ்கி சாயாவனேசுரரை வணங்குவையாயின், உன்கணவன்மேனியின் முண்டுகளையும் வெப்பத்தையும் சகிக்குந்தன்மையை அக்கடவுள் கொடுத்தருள்வாரென்று சொல்ல, சாயாதேவி தன்னாயகனாகிய சூரியதேவன் காமன்கணையால் வருந்தாமலிருக்கும்படி தன்போல் ஒருபெண்ணை மாயத்தால் சிருட்டித்து, நாயகன்பால் விடுத்து அவனறியாமல் காவேரிசங்கமத்

தையுடைத்தா கிரகப்புருஷ சபையத்தில் சூரியதேவன் தன்னே
விசெய்த காயத்தையும் செய்கின்ற தவத்தையும் காசிபமுனிவ
ராலறிந்து, பிரிதலாற்றாமல் காவேரிசங்கமத்தை யடைந்து
மனைவியைக்கண்டு என்சகதர்மணியே! உன்னை யான் பிரிந்திரேன்
உன்னைப்போல யானும் இத்தீர்த்தத்தின்மூழ்கிச் சாயாவனேசு
ரரை வழிபடுகின்றேனென்று கூறுதலும், சாயாதேவி கேட்
டுப் பெருமகிழ்ச்சிகொண்டாள். பின்பு சூரியதேவனுஞ் சாயா
தேவியும் சங்கமதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து, சாயாவன
நாதரைப்பூசித்து வணங்கித் துதிக்கும்போது சாயாவனேசு
ரர் இடபவாகனமேற்கொண்டு தோன்றி சூரியனே! உன் எண்
ணையாதென்று வினவ, சூரியன் சுவாமி! என் மனைவியெண்
ணியவரத்தைக் கொடுத்தருளுவீர் என்று பிரார்த்திக்க, சாயா
வனநாதர் சாயாதேவியைநோக்கி உன்கருத்தையாதென்று கேட்
டருள அவள் சுவாமி என்னுயகன் மேனியிலுள்ள வெப்பத்
தை [illegible] சூரியமுன்கொளேயும் சகிக்கலாற்றாமல் வருந்துகின்றே
ன். அவ்வருத்தத்தை நீக்கியருளவேண்டும் பிரார்த்தித்தலும்
சிவபெருமான் சாயையே! உன்கணவன்மேனியின் வெப்பத்தை
ச்சகிக்கும் ஆற்றலை உனக்குக்கொடுத்தோம். காசிபமுனிபுங்
உன்கணவன்மேனியைத் திருத்திக்கொடுப்போம். கவலை நீங்கு
வாயென்று சொல்லியருளிக், காசிபரை யழைத்து சூரியன்வடி
வத்தைச் சாணையிற்சேர்த்துத் திருத்திக்கொடுப்பாயாக வென்
றுசொல்லியருளி இலிங்கத்துட் புகுந்தருளினார். பின்பு
காசிபமுனிவர் சூரியனைச்சாணையிற்றேய்த்துக் கூரியமுன்போல
ப்போக்கி, சாயாதேவி மகிழும்வண்ணம் செய்தார். சூரியதே
வனும் சாயாதேவியும் இத்தீர்த்தேசுரரை வணங்கித்துதித்து தம்
பதியிற் புகுந்து வாழ்ந்தார்கள்.

அதிதியானவள் குருவாகிய வியாழபகவானை வணங்கி
சுவாமி! அடியேன் புத்திரராகிய தேவர்கள் "திதிபுத்திரராகிய
அசுரர்கள் விளைவிக்கும் கொடும்போரிலே" இறவாதவண்ணம்
வரம்பெறுதற்குச் சிவபெருமானை நோக்கியருந்தவஞ்செய்யநினை
ந்தேன். தவம்வினைவிற்பயிக்கும் ஸ்தலத்தைச் சொல்லியரு
ள்வீரென்று கேட்க, வியாழபகவான் அதிதியை நோக்கி காவி
ரியின் மேம்பட்டதலங்கள் ஆறு. அவை திருவெண்காடு, திரு-



வையாறு, மௌனிமாபுரம், திருவிடைமருதூர், திருவாஞ்சியம்
சாயாவனம் என்பவைகளாம். இவ்வாறனுள்ளும் உத்தமோத்த
மமானது சாயாவனமாம். ஆதலினால் நீ! சாயாவனத்தையடை
ந்து காவேரிசங்கமத்திலே ஸ்நானஞ்செய்து, சாயாவனநாதரை
வணங்கித்துதித்துத் தவஞ்செய்வாயாயின் உன்மைந்தர்களுக்
குமரணமில்லாத வரத்தைச் சாயாவனேசுரர் கொடுத்தருள்
வார். நீ அந்நகரத்தேசென்று தவம் புரிவாயென்றார். அதனை
க்கேட்ட அதிதியானவள் அன்றையத்தினம் தையமாவாசை
யாதலால் மகிழ்ச்சியுற்று வந்து, காவேரிசங்கமத்தில் ஸ்நான
ஞ்செய்து சாயாவனநாதரையுங் குவென்றநோக்காயிரையும்
வணங்கிப்பலநாள் அருந்தவம் புரிந்தாள். சாயாவனநாதர் உமா
தேவியாரோடும் இடபவாகனத்தின்மீதெழுந்தருளிவந்து அதி
தியே! உன் தருந்தவத்திற்கு மகிழ்ந்தோம். உனக்கு வேண்டும்
வரங்களைக் கேட்பாயாக வென்று சொல்லியருளலும், அதிதி
வணங்கித்துதித்து எம்பெருமானே! நாயேன் [illegible]மைந்தர்கள்
"அசுரர்கள் போரில்" இறவாத வரத்தையளித்தருளவேண்டு
மென்று பிரார்த்தித்தாள். சிவபெருமான் அதிதியை நோக்கி
"தைமாதத்தில் ஞாயிற்றுக்கிழமையில் அமாவாசையின் முதலு
ம் திருவோண நக்ஷத்திரத்தின் நடுவும் வியதீபாதயோகத்தின்
இறுதியும் அருணோதயமும் பொருந்துகின்ற அருத்தோதய
த்திலும், மேற்கூறியவற்றுள் ஞாயிற்றுக்கிழமை நீங்கித் திங்கட்
கிழமை சேரும் மகோதயத்திலும், சித்திரைமாதமுதற் பன்னி
ரண்டு மாதத்து அமாவாசையிலும், பௌர்ணிமையிலும், சூரி
ய சந்திர கிரகணத்திலும் இந்தச்சங்கமுக தீர்த்தத்திலே மூழ்கி
னோர்கள் செய்த பாபங்கள் நீங்கிக்கதியடைவார்கள். மேற்
சொல்லியகாலங்களிலே தையமாவாசையும் ஆடியமாவாசையு
ம் மாசிப்பூரணையும் பங்குனிப்பூரணையும் சூரியசந்திர கிரகண
மும், அருத்தோதயமும், மகோதயமும் உத்தமபுண்ணியகா
லங்களாகும்" நீ உத்தம புண்ணிய காலமாகிய தையமாவாசை
யில் மூழ்கித் தவஞ்செய்தாய் அதனாலுன்னோன்பை மிகவுமகி
ழ்ந்தோம். திருமாலைக்கொண்டு பாற்கடலைக்கடைந்து அக்கட
லிடத்துத் தோன்றும் அமுதத்தை யுன்மைந்தர்க்கே கொடுப்
பிப்போம். அந்தவமுதத்தை யுண்டு உன்மைந்தர்களாகிய தே

வர்கள் மரணமற்றவராவார்கள். சி கலியுறுதே யென்று தேஸ்வி பருளித் திருமாலைநோக்கி, பாற்கடலைக்கடைந்து அந்தே தோன்று மமுதத்தைத் தமையுள்ளவர்களாகிய தேவர்களுக்கே கொடுப்பாயாகவென் றருளிச்செய்து இந்திரலிங்கத்திலே புகுந்தருளினர். அதிதி சாயாவனேசுரரைத் தொழுது வரங்களைப் பெற்றடைந்தாள். திருமாலானவர் பாற்கடலைக்கடைந்து அதிலுதித்த அமுதத்தைக் கொண்டுவந்து சாயாவனேசுரர் சந்நிதியில் தேவர்களுக்குக் கொடுத்தருளினார். தேவர்கள் அமுதத்தையுண்டு மரணமற்றவர்களாகி சாயாவனேசுரரைப் பணிந்து போற்றி விண்ணுலகத்தை யடைந்து வாழ்ந்தார்கள்.

காசிபமுனிவர் விநதையென்பவளை மணந்து " இடிமின்னல், எல்லவற்றையும்கோட்டான், பருந்து முதலாக உள்ளபறவைகளையும், அருணன், கருடன் என்பவர்களையும் " பெற்றார். அருணன் அரம்பையைச் சேர்ந்து சம்பாதி சடாயுவென்னும் இருவரைப்பெற்றான். சம்பாதி " மேலுலகத்திற்சென்று அங்குள்ள அற்புதங்களைக்" கண்டு வருவேன் என்று பறந்து சூரியமண்டலத்தருகிற் செல்லும்போது சூரியனுடைய கிரணவெம்மைக்காற்றாது சிறகுகளை யிழந்து பூமியில் விழுந்து வருந்திச் சிவபெருமான் திருவடிகளைத் தியானித்துத் துதித்தான். அச்சமயத்தில் ஆகாயத்திலோர் திருவாக்குத் தோன்றி, சம்பாதியே கேள்! இன்று அமாவாசையாதலால் காவிரிப்பூம்பட்டினத்திற்சென்று காவேரிசங்கமத்தின் மூழ்கிச்சாயாவனேசுரரைத்தரிசிப்பாயாயின் உன்சிறகுகள் முன்போல்வளரும். அத்தலத்தில் தவஞ்செய்வாயாயின் உன்னெண்ணமுழுதும் முற்றுப்பெறும். இப்பொழுதே நடக்குக என்றது. சம்பாதி அவ்வார்த்தையைக் கேட்டுச்சென்று காவேரிசங்கமத்தின் மூழ்கிச் சாயாவனேசுரரைத்தொழுது வலம்புரிந்து துதிக்கும்போது சிறகுகள் முன்போலவளர்ந்தன. பின்பு சம்பாதி அத்தலத்தில் ஓரிடத்திலிருந்து எண்ணில்காலம் தவம்புரிந்தான். சாயாவனேசுரர் [illegible] கோதையாரோடும் இடபவாகனத்தின்மீதெழுந்தருளிச் சம்பாதியை நோக்கி உன்றவத்திற்கு மகிழ்ந்தோம். எல்லாவுலகத்திற்கும் போய்வரும் வன்மையும், பல்லூழிகாலமாகிய ஆயுளும் உனக்குக் கொடுத்தோம், முடிவில் நம்பதத்தை அடை



வாயென்று திருவாய்மலர்ந்தருளி இந்திரலிங்கத்திற் புகுந்தருளினர். சம்பாதி தவஞ்செய்தஇடம் சம்பாதி வனமெனப்பெயர்பெற்றது.

உபமன்னியமுனிவர் இக்காவேரிசங்கமத்தில் ஸ்நானஞ்செய்து சாயாவனேசுரரைப் பூசித்து அக்கடவுளிடத்தே அறுபத்துமூன்றுநாயனார் சரித்திரத்தைச் சொல்லுதற்கும், எஞ்ஞான்றுந் திருக்கயிலாயத்தில் வசித்தற்கும் வரம்பெற்றார். கிருஷ்ணர் இச்சங்கமுகதீர்த்தத்தின் மூழ்கி சாயாவனேசுரரைத்தரிசித்துச் சாம்பனைப்பெற்றார். சூரியன் இத்தீர்த்தத்தின் மூழ்கிச் சாய்க்காட்டண்ணலைத்தொழுது மனுவைப்பெற்றார். இந்திரன் இத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து சாயாவனேசுரரைப்போற்றிச் சயந்தனைப்பெற்றான். முசுகுந்தச்சக்கிரவர்த்தி இச்சங்கமதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து சாயாவனேசுரரைத் தொழுது விண்ணுலகத்திற்சென்று இந்திரனுக்குப் பகைவராகிய அசுரர்களைக்கொன்று ஜெயம்பெற்று வந்து வாழ்ந்தான். பலராமர் இத்தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து சாய்க்காடீசரைப்போற்றிப்பல்நாள் தவஞ்செய்து பகைவரஞ்சும் கலப்பைப்படையைப்பெற்றார். வானரவேந்தனாகிய வாலி இச்சங்கமதீர்த்தத்திலேமூழ்கி சாய்க்காட்டண்ணலைப் போற்றி அங்கதனைப் பெற்றான். அன்றியும் அவ்வாலியானவன் தன்னோடெதிர்ந்து போர்செய்வோர் வலிமையிற்பாதி வலிமையைத் தான்கொள்ளும் வரத்தையும் பெற்றான். இத்தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து சாய்க்காட்டிறைவரைப்போற்றி நற்கதி சேர்ந்தோரை யெண்ணப்புகின் நக்ஷத்திரங்களும் உவமையிடப் போதாதனவாம். என்று சொல்லிய சூதமாமுனிவரை நைமிசாரணிய முனிவர்கள் வணங்கித்துதித்து காவிரிப்பூம்பட்டினத்தைச்சேர்ந்து, காவேரிசங்கமத்தில் ஸ்நானஞ்செய்து திருச்சாய்க்காட்டையடைந்து இந்திரேசுரரைத் தொழுது ஆதிசைவரைக்கொண்டு பூசித்து வேதங்களாற்றுதித்துக் கூவென்றகோதையம்மையாரையும் வணங்கிப்போற்றி பற்பலவரங்களைப் பெற்றுக்கொண்டு பல்லவனேச

ர், பிரியாவிடையார், அசத்திசர், ககனநாதர், முத்தியப்பர், தி
மேனியழகர், சுந்தரமுகேசர், நாகேசரன்பீசர், செங்கழுநீ
நாயகர், குமாரக்கடவுள் இவர்களுடைய கோவில்களிலுஞ்
சென்று வணங்கிக்கொண்டு வைகிராணியத்தையடைந்து சா
யினைகளைத் தியானித்துத் துலங்குகிறார்கள்.

முற்றிற்று.